விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 ஐப்பசி 05 திங்கட்கிழமை (22.10.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 307

டிஸ் அன்ரனா
மற்றும் கேபிள் TV
உதிரிப்பாகங்கள்
நியாயமான விலையில் dishtv
கிடைக்கும்
SATS-TECH
சாட்ஸ் டெக் இன்சினியர்ஸ்
இல. 56/15 ஸ்ரான்லி வீதி ஒழுங்கை.
(பழைய தபால் கந்தோர் வீதி,
யாழ்ப்பாணம்.)
Phone: 021 222 8812, Mob:- 076 886 1160
(C-4179)

# 24-ம் திகதி மாபெரும் கூட்டம்; அனைத்து தமிழ் மக்களையும் கட்சி பேதமின்றி பங்கேற்க த.ம.பேரவை அறைகூவல்

(யாழ்ப்பாணம்) தமிழ் மக்களுக்கான எதிர்கால அரசியல் முன்னெடுப்புப் பற்றி எதிர்வரும் 24-ம் திகதி வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்கள் அறிவிக்கவுள்ள எழுச்சிக் கூட்டத்தில் அனைத்து தமிழ் மக்களையும் கட்சி பேதமின்றி கலந்து கொள்ளுமாறு தமிழ் மக்கள் பேரவை அறைகூவல் விடுத்துள்ளது.

இது தொடர்பில் "அன்பார்ந்த தமிழ் மக்களே" என்ற விழிப்போடு தமிழ் மக்கள் பேரவை விடுத்த துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வாழுகின்ற உரிமை மறுக்கப்பட்ட எம் தமிழினத்தின் இன்றைய அவலநிலை நீங்கள் அறியாததல்ல. குடியிருந்து கூடிவாழ்ந்த சொந்த நிலத்தைத் தருமாறு கேட்டு நீண்ட நெடுநாளாய் வீதியோரத்தில் குந்தியிருந்து போராடுகின்ற எங்கள் உறவுகளின் அவலம்.

பல வருடங்களாக சிறை 23☛

## ஈழத்தமிழர் சுயாட்சி கழகம்
## அனந்தி தலைமையில் புதிய கட்சி நேற்று அங்குரார்ப்பணம்!


23☛

## முள்ளிக்குளம் வீதியை மூடிய கடற்படையினர்

(பனிக்கன்குளம்)

முள்ளிக்குளம் கிராமத்திற்கு கடற்படை முகாமினூடாக செல்லும் பிரதான வீதியை திடீர் என கடற்படையினர் முட்கம்பிகள் கொண்ட வேலியினால் வீதியை இடை மறித்து அடைத்தமையினால் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை முதல் முள்ளிக்குளத்தில் நிலை கொண்டுள்ள கடற்படையினருக்கும், முள்ளிக்குளம் கிராம மக்களுக்கும் இடையில் தர்க்க நிலை ஏற்பட்டதாகவும், அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட பிரச்சினை சுமுகநிலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக முள்ளிக்குளம் பங்குத் தந்தை அருட்தந்தை லோரன்ஸ் லியோ தெரிவித்துள்ளார். 23☛

## உரும்பிராயில் கிணற்றிலிருந்து ஆணின் சடலம் மீட்பு



(கோப்பாய்)

உரும்பிராய் தெற்கு வேம்பன் வீதியில் உள்ள தோட்டக் கிணறு ஒன்றில் இருந்து ஆண் ஒருவரின் சடலம் நேற்று மதியம் 24☛

## வடக்கு மாகாணசபை கலைந்ததும் அம்மாச்சி உணவக பெயர் மாற்றம்

அங்கஜன் இராமநாதன்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணசபை கலைந்த பின்னர் அம்மாச்சி உணவகத்தின் பெயர் மாற்றப்படும் என விவசாய பிரதி அமைச்சர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அம்மாச்சி என்ற பெயரில் அமைக்கப்பட்டுள்ள உணவகம் மத்திய அரசின் திட்டம். வடக்கு மாகாண சபை குறித்த உணவகத்தின் பெயரை மட்டும் தான் 23☛

## ஆயிரம் ரூபாய் சம்பள உயர்வு கோரும்
## தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆதரவாக யாழில் நேற்று கவனயீர்ப்பு போராட்டம்

(யாழ்ப்பாணம்)

மலையக தோட்ட தொழிலாளர்களின் சம்பளத்தை ஆயிரம் ரூபாயாக உயர்த்தக் கோரி மலையக மக்கள் தொடர்ச்சியாக போராடி வருகின்ற நிலையில், அவர்களுக்கு ஆதரவாகவும் அவர்களது கோரிக்கைகளை நிறைவேற்ற கோரியும் யாழ்ப்பாணம் பேருந்து நிலையம் முன்பாக போராட்டம் ஒன்று நேற்றைய தினம் முன்னெடுக்கப்பட்டது.

நேற்று காலை 10 மணியளவில் நடைபெற்ற இந்த போராட்டத்தில் பொது அமைப்புக்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

தமது சம்பளத்தை ஆயிரம் ரூபாயாக அதிகரிக்குமாறு கோரி மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்கள் போராட்டங்களை முன்னெடுத்துள்ளனர். (விரிவான செய்தி 6-ம் பக்கம்)

## துன்னாலையில் கோஷ்டி மோதல்
### பொலிஸாரின் வாகனம் சேதம்!

(கரணவாய்)

துன்னாலை பகுதியில் இரு பகுதியினருக்கிடையில் மோதல் சம்பவம் ஒன்று இடம் பெற்றதாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை துன்னாலை பகுதியில் இடம் பெற்ற மோதல் சம்பவம் தொடர்பாக அங்கு சென்ற பொலிஸாரின் 23☛

## ஐந்து பேர் கொண்ட கும்பல் உப்புமடம் சந்தியில் அடாவடி


23☛

## இந்திய செயற்திட்டங்களை செயற்படுத்துவதில் தாமதம்
### இந்திய பிரதமர் மோடி கவலை

(டில்லி)

2017ம் ஆண்டில் இந்தியாவுக்கும் - இலங்கைக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு அமைய கூட்டு அபிவிருத்திச் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் விடயத்தில் தாமதம் ஏற்பட்டுள்ளமை கவலைக்குரிய விடயமாகும் என இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இந்தச் செயற்திட்டத்தை விரைவில் நடைமுறைப்படுத்துமாறு அவர் இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். 23☛

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# றோ அமைப்புக்கு இலங்கை அரசியல்வாதிகளை கொலை செய்ய வேண்டிய தேவை இருக்காது

## சரத் பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

றோ அமைப்பு போன்ற தொழில் ரீதியான அமைப்பு அயல் நாடுகளில் அரசியல்வாதிகளை கொலை செய்ய முயற்சிக்கும் என தாம் எந்த வகையிலும் நம்பவில்லை என அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

களனி பிரதேசத்தில் நடந்த வைபவம் ஒன்றின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் பிரச்சினை இருக்கின்றதா என்பது எனக்கு தெரியாது. அதனை அவர்களிடம் கேட்க வேண்டும். அப்படியான பிரச்சினை இருக்கும் என நான் நினைக்கவில்லை.

அரசியல்வாதிகள், அதிகாரிகள், ஆட்சியாளர் என்று வரும் போது கருத்து வேறுபாடுகள் ஏற்படலாம். அவற்றை மோதலாக நான் கருதவில்லை. அவற்றை தீர்த்துக்கொள்ள முடியுமாக இருக்க வேண்டும்.

அத்துடன் றோ அமைப்பு என்பது உலகளவில் தொழில் ரீதியாக முன்னெடுக்கப்படும் உயர்மட்ட புலனாய்வு அமைப்பு. அது இந்தியாவின் தேசிய புலனாய்வு அமைப்பு.

அந்த அமைப்பு அயல் நாடுகளில் உள்ள தலைவர்களை கொலை செய்யும் மனநிலை கொண்ட அமைப்பாக உருவாக்கப்பட்ட அமைப்பு அல்ல. அந்த அமைப்பில் கடுமையான ஒழுக்கம் காணப்படுகிறது.

எமது புலனாய்வு பிரிவுகளில் குடிகாரர்கள், வயிற்றுக்கு பிழைப்பவர்கள், வெள்ளைவான்காரர்கள் இருக்கின்றனர். றோ என்ற அமைப்பில் அப்படியானவர்கள் இல்லை.

இதனால், றோ அமைப்பு அயல் நாடு ஒன்றின் அரசியல்வாதியை கொலை செய்யும் நிலைக்கு செல்லும் என நான் கருதவில்லை. இந்தியாவின் றோ அமைப்பு இலங்கை அரசியல்வாதிகளை பின் தொடர்கின்றது என்று நான் நம்பவில்லை.

இந்தியாவின் தேசிய புலனாய்வு அமைப்பான றோ அமைப்பு எந்த சந்தர்ப்பத்திலும் இலங்கையின் தலைவர்களை கொலை செய்யும் தேவை இருக்கும் என தான் நம்பவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (மு)

## ஜனாதிபதி கொலைச்சதி பொலிஸின் செயற்பாட்டில் சந்தேகம்-அமரவீர

ஜனாதிபதியின் கொலைச்சதியுடன் தொடர்புடைய பிரதி பொலிஸ்மா அதிபர் இதுவரை கைது தொடர்பான பொலிஸாரின் செயற்பாடுகள் அதிருப்தியை ஏற்படுத்துவதாக அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், ஜனாதிபதி கொலை திட்டம் தொடர்பில் பிரதி பொலிஸ்மா அதிபரை கைது செய்யாமல் இருப்பது தொடர்பில் தான் அவதானமாக இருப்பதாகவும் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸாரின் செயற்பாடுகள் சந்தேகங்களை ஏற்படுத்துவதாகவும் குறிப்பிட்டுள்ளார். (மு)

# தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை புதிய முறையில் நடத்தப்படும்

## கல்வி அமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை முறைமையை மாற்றுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்து வருவதாக கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

வழமையாக நடத்தப்படும் புலமைப் பரிசில் பரீட்சையின் மூலம் உதவித் தொகைக்கான மாணவர்களை தெரிவு செய்வதற்கும், தரம்வாய்ந்த பாடசாலைகளுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கு தனியாக வேறு ஒரு பரீட்சையை நடத்த நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அமைச்சர் அகில விராஜ் காரியவசம் குறிப்பிட்டுள்ளார்.

இதன்மூலம் போட்டித் தன்மை குறைவடைவதாகவும், இது குறித்து ஆய்வு செய்ய குழுவொன்றை நியமிக்கவுள்ளதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

பாடசாலை நடைபெறும் காலத்தில் பிரத்தியேக வகுப்புக்களை நடத்த தடை விதிக்கும் அமைச்சரவைப் பத்திரமொன்றை அடுத்து வரும் நாட்களில் முன்வைக்கவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (மு)

# மகிந்தவிடம் மீண்டும் நாட்டை ஒப்படைப்பது நகைப்புக்குரியது

## ஜே.வி.பி சாடல்

(கொழும்பு)

ரூபாயின் வீழ்ச்சியினை கட்டுப்படுத்த எம்மால் முடியும் என்று குறிப்பிடும் மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது தரப்பினரிடம் அவ்வழிமுறையினை வினவும்போது அவர்கள் பிறிதொருவரை சுட்டிக்காட்டும் அளவிற்கு அவர்களது பொருளாதார நிபுணத்துவம் காணப்படுகிறது எனத் தெரிவித்த மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) பொதுச செயலா ளர் ரில்வின் சில்வா, இவர்களிடம் மீண்டும் நாட்டை பொறுப்பளிப்பது நகைப்பிற்குரியது என குறிப்பிட்டார்.

இடைக்கால அரசாங்கம், ஜனாதிபதி வேட்பாளர் மற்றும் பொது வேட்பாளர் என தற்போது எமது நாட்டு அரசியலில் பல்வேறு விடயங்கள் பேசப்படுகின்றன. ஆட்சியாளர்கள் அனைவரும் நாட்டு மக்களுடைய பிரச்சினைகளை ஒரு புறம் ஒதுக்கிவிட்டு தத் தமது தனிப்பட்ட பிரச்சினைகளை தீர்ப்பதனையே நோக்கமாகக் கொண்டு செயற்படுகின்றனர்.

மேலும் அரசாங்கத்திலிருந்து விலகிய சுதந்திரக் கட்சியின் 16 பாராளுமன்ற உறுப்பினர்களும் மைத்திரி-மகிந்த ஆகிய இருவரையும் இணைத்து இடைக்கால அரசாங்கம் ஒன்றை உருவாக்கி அதன் மூலம் ஏதேனும் பெற்றுக் கொள்ளலாம் என எண்ணிக் கொண்டிருக்கின்றனர் எனவும் குற்றஞ்சாட்டினார்.

ஜே.வி.பி காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். (மு)


## வேலைவாய்ப்பு

**புதியதோர் எதிர்காலத்தை நோக்கி...**

வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டத்தினருக்கான பல்வேறுபட்ட பதவி வெற்றிடங்கள் உள்ளன.

- யாழ் மாவட்டத்தினருக்கும் சந்தர்ப்பம் உண்டு.
- 15 பேருக்கு மட்டும்.

**இன்றே உடன் அழைக்க:0771571699**

குறிப்பு: தங்குமிடம், உணவு வசதிகள் உண்டு.
வயதெல்லை: 18 - 30

(C-4213)



## துயர் பகிர்தல்

மலர்வு 23 - 06 - 1936

உதிர்வு 20 - 10 - 2018



**திருமதி பொன்னையா தங்கரட்ணம்**

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் முன்னாள்
அதிபரும், வட மாகாண சிரேஷ்ட பள்ளிக்
கல்வியாளர் ஒன்றியத்தின் செயலாளரும், எமது
நண்பருமாகிய திரு.ச.சிவநேஸ்வரன்
அவர்களின் அன்பு மாமியார்
திருமதி பொன்னையா தங்கரட்ணம்
அவர்களது மறைவுச் செய்தி கேட்டு
ஆழ்ந்த துயரடைகின்றோம்.
அன்னாரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதோடு
குடும்பத்தவர்களினதும் உறவினர்களினதும்
துயரத்தை நாமும் பகிர்ந்து கொள்கிறோம்.

**அதிபர் நண்பர்கள்**

(C-4211)



## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

பிறப்பு 26 - 07 - 1946

இறப்பு 25 - 09 - 2018



கடந்த 25.09.2018 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி

**அமரர் வள்ளிப்பிள்ளை சிதம்பரநாதன்**

அவர்களின் சிவப்பேறு குறித்த அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (23.10.2018)
செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில்
நடைபெறும். அந்நிகழ்விலும் 25.10.2018 வியாழக்கிழமை அன்னாரது
இல்லத்தில் நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரண
நிகழ்விலும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும்
கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள்
அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

வரணி வடக்கு, வரணி (சி-4196) தகவல்:மகள் (ரஞ்சி)

## "லெப்.கேணல் அமுனுபுரவை திருப்பியனுப்பிய ஐ.நா."


# எந்தவிதமான ஆய்வுகளும் இன்றி அமைதிப் படையில் இலங்கை அணி

### மனிதவுரிமைகள் ஆணைக்குழுத் தலைவி தீபிகா தகவல்

(கொழும்பு)

மாலிக்கு அனுப்பப்பட்ட இலங்கைப் படையினர் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டு அனுமதிக்கப்பட்டவர்கள் அல்ல என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவி கலாநிதி தீபிகா உடகம தெரிவித்துள்ளார். மாலியில் இலங்கை இராணுவ அணியின் கட்டளை அதிகாரியான லெப்.கேணல் அமுனுபுரவை திருப்பி அனுப்ப ஐ.நா எடுத்துள்ள நடவடிக்கை தொடர்பாக கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.





"ஐ.நா அமைதிப் படைக்குத் தெரிவு செய்யப்படும் இலங்கைப் படையினரை ஆய்வு செய்வதற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழ இணங்கியிருந்தது.

இந்த விவகாரம் தொடர்பாக எமக்கு எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. இது எமது ஆணைக்குழு ஊடாக நடக்கவில்லை.

மாலிக்கு அனுப்புவதற்கான இலங்கை இராணுவ அணி 2017ஆம் ஆண்டு தொடக்கத்தில், முதலில் மீளாய்வுக்காக வந்தது.

நாங்கள் எமது ஆய்வுகளின் ஊடாக சிலருக்கு அனுமதி அளித்தோம்.

சிலர் தொடர்பாக மேலதிக தகவல்களைக் கோரினோம்.

அப்போது ஐ.நா. ஏற்கனவே இந்த அணியை ஆய்வுக்குட்படுத்தி விட்டதாகவும், உங்களின் சேவை எமக்குத் தேவையில்லை என்றும் இராணுவத் தளபதியாக இருந்த லெப். ஜெனரல் கிரிசாந்த டி சில்வா கடிதம் அனுப்பினார்.

எனவே நாங்கள் ஒட்டு மொத்த இராணுவ அணியையும் ஆய்வுக்குட்படுத்துவதை நிறுத்தினோம்.

ஐ.நாவும் இலங்கை இராணுவமுமே அதனைக் கையாண்டன.

திருப்பி அனுப்புதல் தொடர்பான நியூயோர்க்கிலுள்ள இலங்கை வதிவிடப் பிரதிநிதி இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவுக்கு தெரியப்படுத்திய போது, விபரங்களை பரிசோதித்தோம்.

அப்போது, லெப்.கேணல் அமுனுபுரவின் பெயர், ஆணைக்குழுவுக்கு ஆய்வுக்காக அனுப்பப்பட்ட மூலப் பட்டியலில் இருக்கவில்லை என்று கண்டறியப்பட்டது.

இது இலங்கை இராணுவத்துக்கும், ஐ.நாவுக்கும் இடையிலான விவகாரம்." என்று தெரிவித்தார்.(இ-7)

## அமைச்சரவை இரகசியங்களை கசியவிட்டவர்களை அரசு பகிரங்கப்படுத்த வேண்டும் - நாமல் தெரிவிப்பு

(கொழும்பு)


அமைச்சரவையின் இரகசியங்களை வெளியிட்டதாகக் கூறப்படும் இரண்டு அமைச்சர்கள் யார் என்பதை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும்என கூட்டு எதிரணி கோரிக்கை விடுத்துள்ளது.

கூட்டு எதிரணியில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினரான நாமல் ராஜபக்ஷ தமது டுவிட்டர் வலைத்தளத்தின் ஊடாக இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

தம்மை கொலை செய்வதற்கு இந்தியாவின் "றோ" உளவு அமைப்பு திட்டமிட்டதாக ஜனாதிபதி அமைச்சரவையில் கூறியதாக வெளிவந்த கருத்து பாரிய சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளது.

இதனை அமைச்சரவையின் அமைச்சர்கள் நால்வரே தெரிவித்ததாக அந்த செய்தியை முதலில் வெளியிட்ட த ஹிந்து ஊடகம் தெரிவித்திருந்தது.

இந்த நிலையில் அதனை வெளியிட்டவர்களில் இருவரை தமக்குத் தெரியும் என அமைச்சர் மகிந்த அமரவீர குறிப்பிட்டிருந்தார்.



இது தொடர்பில் கருத்து வெளியிடும் போதே நாமல் ராஜபக்ஷ மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார் (இ-7)

## தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்கான புதிய உறுப்பினர்கள் அடுத்த வாரம் நியமனம்

(கொழும்பு)

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்கான புதிய உறுப்பினர்கள் அடுத்த வாரமளவில் நியமிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அரசியலமைப்புப் பேரவை எதிர்வரும் 25 அல்லது 26 ஆம் திகதி கூடவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது இந்த நியமனங்கள் வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பொலிஸ் ஆணைக்குழுவிற்கு தற்போது பலரின் பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

மூன்று ஆண்டு பதவி காலத்திற்காக 2015ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 14 ஆம் திகதி தேசிய பொலிஸ் ஆணைக்குழ நியமிக்கப்பட்டது.

19 ஆவது திருத்தச் சட்டத்திற்கு அமைய பொலிஸ் ஆணைக்குழுவிற்கு புதிய உறுப்பினர்கள் நியமிக்கபடும் வரை அதன் முன்னைய உறுப்பினர்கள் செயற்பட முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## அமைச்சரவை இரகசியங்களை வெளியிடும் அமைச்சர்களைக் கண்டுபிடிக்க விசேட குழு

### ஜனாதிபதி மைத்திரி நடவடிக்கை

(கொழும்பு)

அமைச்சரவை இரகசியங்களை ஊடகங்களிடம் வெளியிடும் அமைச்சர்களை கண்டுபிடிக்க ஜனாதிபதியின் உத்தரவின் பேரில்விசேட விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் வெளியான "றோ" அமைப்பின் கொலை சதித்திட்ட கதை தொடர்பான தகவலை தனக்கு நான்கு அமைச்சர்கள் வழங்கியதாக த ஹிந்து பத்திரிகையின் கொழும்பு செய்தியாளர் மீரா சீனிவாசன் தெரிவித்திருந்தார்.

இந்த செய்தி தொடர்பான விடயங்களை தெளிவுபடுத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்திய பிரதமரை தொலைபேசியில் தொடர்புகொண்டு உரையாடினார்.

இதனையடுத்து இந்த செய்தி வெளியான விதம், அதன் பின்னணி குறித்து மூன்று அறிக்கைகளை இந்திய பிரதமர் கோரியிருப்பதாக இராஜதந்திர தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



இந்த நிலையில், ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் விசாரணைகளை நடத்தி வரும் விசேட விசாரணை குழு தொலைபேசி தரவுகள் உட்பட ஏனைய தரவுகளின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றன. (இ-7)

## 4 மணி நேர சுற்றிவளைப்பு 3560 பேர் கைது, 6020 பேருக்கு எதிராக வழக்கு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் நேற்று அதிகாலை 3 மணி முதல் காலை 7 மணி வரை பொலிஸார் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பில் பல்வேறு குற்றங்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் 3ஆயிரத்து 560 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித் துள்ளது.

வாகனப் போக்குவரத்து சட்டங்களை மீறிய குற்றத்தின் பேரில் 6 ஆயிரத்து 20 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தரவின் பணிப்புரைக்கமைய 18ஆயிரத்து 19 பொலிஸ் உத்தியோகத்தரகளைக் கொண்டு இந்த விசேட சுற்றி வளைப்பு நடவடிக்கை இடம்பெற்றதாகவும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும்தெரிவித்துள்ளது. (இ-7)

## சட்டவிரோத சிகரெட்டுடன் இருவர் கைது

(கொழும்பு)

டுபாயிலிருந்து சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு கொண்டு வந்த ஒரு தொகை சிகரெட்டுடன் இரண்டு பேர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேக நபர்கள் நேற்று அதிகாலை டுபாயிலிருந்து FZ 547 என்ற விமானத்தில் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

சந்தேக நபர்களின் பயணப் பொதிகளில் இருந்து 195 பெட்டிகளில் அடைக்கப்பட்ட 39 ஆயிரம் சிகரெட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதுடன், அவற்றின் பெறுமதி சுமார் 19 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் சுங்க அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக சுங்க பிரதி ஊடகப் பேச்சாளர் பிபில மினுவான்பிட்டிய மேலும் தெரிவித்தார். (இ-7)

# ரோகித் 'சரவெடி' ஹோலி செம 'ஜாலி'

## குவகாத்தியில் இந்தியா மின்னல் வெற்றி



சதமடித்த குதுகலத்தில் இந்திய அணித் தலைவர் விராட் ஹோலி



சதமடித்து தூள் கிளப்பி ய ரோகித் சர்மாவின் அதிரடிகளில் ஒன்று

குவகாத்தி ஒருநாள் போட்டியில் மே.தீவுகள் பந்துவீச்சை விரட்டி விரட்டி அடித்த அணித் தலைவர் விராட் ஹோலி, ரோகித் சர்மா சதம் கடந்தனர். இவர்களது அபார ஆட்டம் கைகொடுக்க, இந்திய அணி 8 விக்கெட்டுக்களால் 'மின்னல்' வேக வெற்றி பெற்றது.

இந்தியா சென்றுள்ள மே.தீவுகள் அணி, ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது. நேற்று, அசாம் மாநிலம் குவகாத்தியில் முதல் போட்டி நடந்தது. இந்திய அணியில் ரிஷாப் பண்ட் அறிமுகமாகினார். நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணித் தலைவர் விராட் ஹோலி களத்தடுப்பை தேர்வு செய்தார்.

**பவெல் அரைச்சதம்**

மே.தீவுகள் அணிக்கு அறிமுக வீரர் சந்தர் போல் ஹேம்ராஜ் (9) ஏமாற்றினார். சகால் பந்தை சிக்சருக்கு அனுப்பிய பவெல் (51), ஒருநாள் அரங்கில் தனது 9ஆவது அரைச் சதமடித்தார்.

**ஹெட்மயர் அபாரம்**

சகால் 'சுழலில்' மார்லன் சாமுவேல்ஸ் (0) சிக்கினார். ஷாய் ஹோப் (32) ஆறுதல் அளித்தார். ரவிந்திர ஜடேஜா வீசிய 21, 23 ஆவது ஓவரில் தலா ஒரு சிக்சர் விளா சிய ஷிம்ரான் ஹெட்மயர், ஷமி வீசிய 24வது ஓவரில் ஒரு சிக்சர், ஒரு பவுண்டரி அடித் தார். ஜடேஜா 'சுழலில்' ராவ்மன் பாவெல் (22) போல்டானார். ஷமி பந்தை சிக்சருக்கு அனுப்பிய ஹெட்மயர், ஒருநாள் போட்டி அரங்கில் தனது 3ஆவது சதத்தை பதிவு செய்தார். இவர் 106 ஓட்டங்கள் (78 பந்து, 6 சிக்சர், 6 பவுண்டரி) எடுத்திருந்தபோது ஜடேஜாவிடம் சரணடைந்தார். அணித் தலைவர் ஹோல்டர் (38) ஓரளவு கைகொடுத்தார்.

மே.தீவ்கள் அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 322 ஓட்டங்களை குவித்தது. பிஷூ (22), ரோச் (26) ஆட்டமிழக்காமல் இருந்தனர். இந்தியா சார்பில் சகால் 3, ஷமி, ஜடேஜா தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

சவாலான இலக்கை விரட்டிய இந்திய அணிக்கு ஷிகர் தவான் (4) ஏமாற்றினார். பின் இணைந்த ரோகித் சர்மா, அணித் தலைவர் விராட் ஹோலி ஜோடி அசத்தியது.

ராஜாளி கழுகு போன்ற இவர்களது வலிமையான பிடியில் இருந்து மேற்கிந்திய பந்து வீச்சாளர்கள் தப்பமுடியவில்லை. ஒருபுறம் ஹோலி பவுண்டரிகளாக விளாசினார். மறுபுறம் ரோகித் சிக்சர் மழை பொழிந் தார். கீமர் ரோச் பந்தை பவுண்டரிக்கு விரட்டிய ஹோலி, ஒரு நாள் அரங்கில் தனது 36 ஆவது சதத்தை பதிவு செய்தார்.

**ரோகித் அசத்தல்**

ஆஷ்லே நர்ஸ் பந்தை பவுண்டரிக்கு அனுப்பிய ரோகித் ஒருநாள் அரங்கில் தனது 20 ஆவது சதத்தை பூர்த்தி செய்தார். இவர்களை பிரிக்க முடியாமல் திணறிய மேற்கிந்திய பந்துவீச்சாளர்களை பார்க்கவே பாவமாக இருந்தது.

இரண்டாவது விக்கெட்டுக்கு 246 ஓட்டங்கள் சேர்த்தபோது பிஷூ 'சுழலில்' ஹோலி (140) சிக்கினார். தோமஸ் வீசிய 42வது ஓவரில் 'ஹட்ரிக்' பவுண்டரி அடித்த ரோகித், சந்தர்போல் ஹேம்ராஜ் பந்தை சிக்சருக்கு அனுப்பி வெற்றியை உறுதி செய்தார்.

இந்திய அணி 42.1 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை இழந்து 326 ஓட் டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. ரோகித் (152), அம்பதி ராயுடு (22) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இவ்வெற்றி மூலம் 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் இந்திய அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது. ஆட்ட நாயகன் விருதை ஹோலி வென்றார். இரண்டாவது போட்டி வரும் 24ஆம் திகதி விசாகப்பட்டினத்தில் நடக்கிறது.

**36**

இந்திய அணித் தலைவர் விராட் ஹோலி ஒருநாள் அரங்கில் தனது 36ஆவது சதத்தை பதிவு செய்தார். இதன்மூலம் ஒருநாள் போட்டி வரலாற்றில் அதிக சதமடித்த சர்வதேச வீரர்கள் பட்டியலில் 2ஆவது இடத்தில் நீடிக்கிறார். முதலிடத்தில் சச்சின் (49 சதம்) உள்ளார்.

- இது, 'சேஸ்' செய்தபோது இவர் அடித்த 22வது சதம்.
- சொந்த மண்ணில் இவரது 15ஆவது சதம்.
- அணித் தலைவராக 14ஆவது சதம். இதன்மூலம்ஒருநாள்போட்டியில் அதிக சதமடித்த தலைவர்கள் பட்டியலில் தென்னாபிரிக்காவின் டிவிலியர்சை (13 சதம்) முந்தி 2ஆவது இடம் பிடித்தார். முதலிடத் தில் அவுஸ்திரேலியாவின் ரிக்கி பொன்ரிங் (22 சதம்) உள்ளார்.
- மே.தீவுகளுக்கு எதிராக 5வது சதம். இதன்மூலம் சச்சின் (4 சதம்) சாதனையை முறியடித்தார்.

**சுப்பர் ஜோடி**

இந்தியாவின் விராட் ஹோலி, ரோகித் சர்மா ஜோடி 2வது விக்கெட்டுக்கு 246 ஓட்டங்கள் சேர்த்தது. இந்த ஜோடி 15ஆவது முறையாக ஒருநாள் போட்டியில் 100 அல்லது அதற்கு மேல் ஓட்டங்கள் சேர்த்தது. இதன் மூலம் ஒருநாள் போட்டியில் எந்த ஒரு விக்கெட்டுக்கும் அதிக முறை 100 அல்லது அதற்கு மேல் ஓட்டங்கள் சேர்த்த ஜோடிகளுக்கான பட்டியலில் 4ஆவது இடத்தை மே.தீவுகளின் கிரீனிட்ஜ் 0 ஹெய்ன்ஸ் (15 முறை), இலங்கையின் சங்கக்கார-ஜெயவர்த்தன (15) ஜோடியுடன் பகிர்ந்து கொண்டது. முதலிடத்தில் இந்தியாவின் சச்சின்-கங்குலி ஜோடி (26 முறை) உள்ளது.

**322**

துடுப்பாட்டத்தில் அசத்திய மே.தீவுகள் அணி 50 ஓவரில் 8 விக்கெட்டுக்களை இழந்து 322 ஓட்டங்கள் குவித்தது. இதன் மூலம் இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் போட்டியில் தனது 4வது அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கையைப் பதிவு செய்தது. கடந்த 1983ல் ஜாம்ஷெட்பூரில் நடந்த இந்தியாவுக்கு எதிரான போட்டியில் மே.தீவுகள் 8 விக்கெட்டுக்களுக்கு 333 ஓடட்ங்கள் குவித்தது அதிகபட்சமாக உள்ளது. அதன்பின் இரண்டு முறை (2002இல் அகமதாபாத், 2007ல் நாக்பூர்) தலா 324 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

**குவகாத்தி அறிமுகம்**

நேற்று, அசாம் மாநிலம் குவகாத்தியில் உள்ள பார்சபாரா கிரிக்கெட் மைதானத்தில் (அசாம் கிரிக்கெட் சங்க மைதானம்) முதன் முறையாக ஒருநாள் போட்டி நடந்தது. இதன்மூலம், சர்வதேச ஒருநாள் போட்டி நடத்திய 46ஆவது இந்திய மைதானம் என்ற பெருமை பெற்றது.

இதற்கு முன் இங்கு, கடந்த ஆண்டு இந்தியா, அவுஸ்திரேலியா அணிகள் மோதிய சர்வதேச 'ரி20' போட்டி முதன் முறையாக நடத்தப்பட்டது.

**ரிஷாப் '224'**

இளம் வீரர் ரிஷாப் பண்ட் (வயது-21), சர்வதேச ஒரு நாள் போட்டியில் அறிமுக மான 224வது இந்திய வீரர் என்ற பெருமை பெற்றார். இவருக்கு முன்னாள் அணித் தலைவர் தோனி ஒருநாள்போட்டிக்கான அறிமுக தொப்பியை வழங்கினார்.

## டென்மார்க் ஓபன் பட்மிண்டன் இறுதியில் சாய்னா ஏமாற்றம்



சம்பியன் கிண்ணத்துடன் டிசூ யிங்

டென்மார்க் ஓபன் பட்மிண்டன் தொடரில் சீன தைபேயின் டை டிசூ யிங் சம்பியனானார். இறுதியில் ஏமாற்றிய இந்தியாவின் சாய்னா நேவல் இரண்டாவது இடம் பிடித்தார்.

டென்மார்க்கில், சர்வதேச ஓபன் பட்மிண்டன் தொடர் நடந்தது. இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதியில் தரவரிசையில் 10 ஆவது இடத்திலுள்ள இந்தியாவின் சாய்னா, 'நம்பர் 1' வீராங்கனையான சீனதைபேயின் டை டிசூ யிங்கை சந்தித்தார்.

முதல் செட்டை 13-21 என இழந்த சாய்னா, அடுத்த செட்டை 21-13 என கைப்பற்றி பதிலடி கொடுத்தார். வெற்றியாளரை நிர்ணயிக்கும் மூன்றாவது செட்டில் பின்தங்கிய சாய்னா 6-21 என பறிகொடுத்தார்.

52 நிமிடம் நடந்த போட்டியின் முடிவில், டிசூ யிங் 21-13, 13-21, 21-0 என்ற செட் கணக்கில் சாய்னாவை வீழ்த்தி சம்பியனானார்.

## மும்பை அணியில் குயின்ரன்



குயின்ரன் டி கொக்

ஐ.பி.எல்., தொடரில் வரும் சீசனில் தென்னாபிரிக்காவின் குயின்ரன் டி கொக், மும்பை அணிக்காக களமிறங்க உள்ளார்.

இந்தியாவில் 12ஆவது ஐ.பி.எல்., சீசன் 2019ல் நடக்கவுள்ளது. அக்கால கட்டத்தில் பாராளுமன்றத் தேர்தல் நடக்கவுள்ளதால் போட்டிகள் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அல்லது தென்னாபிரிக்காவில் நடக்கும் எனத் தெரிகிறது.

இதனிடையே ஏலத்துக்கு முன், வரும் நவ. 15ஆம் திகதிக்குள் வீரர்கள் விடுவிப்பு, அணிகளுக்குள் வீரர்களை மாற்றிக் கொள்ளும் வேலைகள் நடக்கின்றன.

இதன்படி மூன்று முறை சம்பியனான மும்பை அணி, இளம் பங்களாதேஷ் வேகப்பந்து வீச்சாளர் முஸ்தபிஜூர் ரஹ்மான் (ரூ. 2.2 கோடி), இலங்கை 'சுழல்' வீரர் தனஞ்செய (ரூ. 50 லட்சம்) என இருவரை விடுவித்தது.

இதற்குப் பதில் பெங்களூரு அணியில் உள்ள குயின்ரன் டி கொக்கை வாங்கியது. ஏற்கெனவே ஆதித்ய தாரே, இஷான் கிஷான் என இருவர் விக்கெட் காப்பாளர்களாக உள்ள நிலையில் குயின்ரன் டி காக் துடுப்பாட்ட வீரராக களமிறங்குவார் எனத் தெரிகிறது.

# யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில்

# கொலை வெறித்தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் 31 ஆவது ஆண்டு நினைவுதினம் நேற்று அனுஷ்டிப்பு



(படங்கள்:பொ.சோபிகா)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குள் இந்திய இராணுவத்தினர் மேற்கொண்ட கொலை வெறித் தாக்குதலில் கொல்லப்பட்ட 21 மருத்துவ சேவையாளர்கள் உள்ளிட்ட 68 அப்பாவி உயிர்களின் 31 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று யாழ் .போதனா வைத்தியசாலை வளாகத்தில் அனுஷ்டிக்கப்பட்டது. யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்த நினைவஞ்சலி நிகழ்வில் வைத்தியர்கள், மருத்துவ சேவையாளர்கள், பணியாளர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தினர். (இ-9)

## நிழற்பிரதி இயந்திரம் வழங்கல்



(கரணவாய்)

கரவெட்டி கிராமிய சித்த வைத்தியசாலைக்கு நல்லூர் முத்திரைச் சந்திப் பகுதியைச் சேர்ந்தவரும் தற்போது கனடாவில் வசிப்பவருமான இராஜலிங்கம், நிழற்பிரதி இயந்திரம் ஒன்றை நேற்று முன்தினம் அன்பளிப்பு செய்துள்ளார். கரவெட்டி பிரதேச சித்த வைத்திய அதிகாரி ச.யோகேந்திரன் வடமாகாண சுகாதார சுதேச வைத்திய அமைச்சின் செயலாளர் ஆகியோர் முன்னிலையில் இந்த நிழற்பிரதி இயந்திரத்தை வழங்கினார். (இ-60)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் ஏற்பாட்டில் குப்பை நெருக்கடியும் புத்தளம் மக்களின் தூய்மைக்கான போராட்டமும் என்ற தலைப்பிலான விசேட கலந்துரையாடல் நாளை மறுதினம் புதன்கிழமை (பௌர்ணமி விடுமுறை தினம்) பிற்பகல் 4 மணியளவில் இல. 62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி என்ற முகவரியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

புத்தளம் கொழும்பு முகத்திடலில் இருபது நாட்களையும் கடந்து இக் குப்பை கொட்டும் திட்டத்தைக் கைவிடக் கோரித் தொடர் சத்தியாக்கிரகப் போராட்டத்தை முன்னெடுத்து வரும் சுத்தமான புத்தளம் அணி முன்னெடுத்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

18ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் கந்தையா பரராசசிங்கம்

[ஓய்வுபெற்ற லிகிதர், இலங்கை காப்புறுதி கூ.தாபனம்]

மண்ணில்:- 27.07.1929 விண்ணில்:-24.10.2000

திதி:-திரயோதசி-22.10.2018

ஆண்டுகள் பதினெட்டு சென்றாலென்ன
உங்கள் இழப்பு எங்களுக்கோர்
வெற்றிடம்தான். அள்ள அள்ள குறையாத
உங்கள் அன்பு அதை இழந்து இப்போதும்
தவிக்கின்றோம். அப்பா எங்களை விட்டுப்
பிரிந்து சென்றாலும் எங்கள் நினைவுகளில்
என்றும் உயிர்ப்புடன் நிலையாக
வாழ்வீர்களாக...
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



"நடராசா வீதி"
கொக்குவில் மேற்கு, கொக்குவில். (6971)

ப.ஜெயபதிதரன் (மகன்)

## இராசி பலன்

**மீனம்:** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், மேன்மையான சம்பவங்கள் இடம் பெறலாம், போசன சுகமுண்டு, அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது.

**மேடம்:** எடுத்தகாரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், சயனசுகக் குறைவுகள் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**இடபம்:** பொது வாழ்வில் புகழ் கூடும் நாள், முயற்சிகளில் முன்னேற்றம் காணும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**மிதுனம்:** உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், காரிய அனுகூலமுண்டு, விருந்துகளில் கலந்து மகிழும் நாள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

**கும்பம்:** வீண் விவாதங்கள் தவிர்ப்பது நல்லது, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

**கடகம்:** தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், பெரிய மனிதர்களைச் சந்திக்கும் வாய்ப்புண்டு, தொழில் நலன்கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

| | | | |
|---|---|---|---|
| சந் | | | |
| | இராசி பலன் | | ராகு |
| செவ். கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>பூரம் | | |
| சனி | குரு | சூரி.புத. சுக் | |

22.10.2018
ஐப்பசி 03, திங்கட்கிழமை
சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு
திரயோதசி முன்னிரவு 10.20 மணிவரை
பூரட்டாதி முற்பகல் 8.09 மணிவரை
சுபநேரம் 12.02-1.32 மணிவரை
இராகுகாலம் 7.32-9.02 மணிவரை
பிரதோச விரதம்

வளவன்

**மகரம்:** உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், புதிய திருப்பங்கள் ஏற்படும் நாள், செய்தொழிலில் மேன்மையுண்டு, உயர்வும் கிடைக்கும்.

**சிம்மம்:** பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், கௌரவக் குறைவான நாள்.

**தனுசு:** பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, உறவினர் நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்:** தாழ்ந்த சுபாவமுண்டு, முயற்சிகளில் முன்னேற பெரிதும் பாடுபடுவீர்கள், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**துலாம்:** செய்தொழில் மேன்மையுண்டு, வாக்கு மேன்மையுண்டு, தேக நலன் சீராகும், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

**கன்னி:** குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும், தொழில் நலனில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படும் நாள்.

## 1000 ரூபாய் அடிப்படைச்சம்பளம் கோரும்

# தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆதரவாக யாழில் நேற்றுக் கவனயீர்ப்புப் போராட்டம்






படங்கள்:- ஐ.சிவசாந்தன், பொ.சோமிகா

**(யாழ்ப்பாணம்)**

**மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படை சம்பளத்தை 1000 ரூபாயாக நிர்ணயம் செய்ய வலியுறுத்தி "உரிமைக்காய் போராடும் தோட்டத் தொழிலாளருடன் நாமும் கைகோர்ப்போம்" எனும் தொனிப்பொருளில் கவனயீர்ப்பு போராட்டம் நேற்று யாழ். பேருந்து நிலையம் முன்றலில் முன்னெடுக்கப்பட்டது.**

"தோட்டத் தொழிலாளருக்காய் வடக்கில் இருந்து ஓர் உரிமை குரல்" என்ற கருப்பொருளில் சமூக வலைத்தள நண்பர்களின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட இந்த போராட்டத்தில் தோட்ட தொழிலாளர்களுக்கு ஆதரவாகவும், அரசுக்கு எதிராகவும், தோட்ட கம்பனிகளுக்கு எதிராகவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோசங்களை எழுப்பியிருந்தனர்.

இப் போராட்டத்தில் அரசியல் பிரமுகர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் என பலர் கலந்துகொண்டனர். (இ-9)



**பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் புனித யோசவ்வாசின் திருச்சிலுவை நேற்று மக்கள் தரிசிப்பிற்காக கொண்டு வரப்பட்ட போது...**

**(படங்கள்:-கொழும்புத்துறை செய்தியாளர்)**



**வடமாகாண மகளிர் விவகார அமைச்சர் திருமதி அனந்தி சசிதரனால் ஈழத்தமிழர் சுயாட்சி கழகம் என்ற புதிய கட்சி அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. கட்சியின் செயலாளர் நாயகம் அனந்தி சசிதரன் தலைமையில் குறித்த நிகழ்வு நேற்று யாழ் யு.எஸ் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.**

**(படங்கள்:-பொ.சோமிகா)**



கோண்டாவில் சிவபூமி மனவிருத்திப் பாடசாலையின் நவராத்திரி விழா கடந்த புதன்கிழமை கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக யாழ்.இந்தியத் துணைத்தூதர் எஸ்.பாலச்சந்திரன், சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக தொல்லியல் துறை பேராசிரியர் ப. புஸ்பரட்ணம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(படங்கள்:-ஈச்சமோட்டை செய்தியாளர்)

# போரைத் தூண்டியவர்களே தண்டிக்கப்பட வேண்டும்

## யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

போரில் நேரடியாக ஈடுபட்டவர்களை விட போரைத் தூண்டியவர்களே தண்டிக்கப்பட வேண்டும் என யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குள் இந்திய இராணுவத்தினர் மேற்கொண்ட கொலை வெறித் தாக்குதலில் கொல்லப்பட்ட 21 வைத்திய சேவையாளர்கள் உள்ளிட்ட 68 அப்பாவி உயிர்களின் 31 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று யாழ்.போதனா வைத்தியசாலை வளாகத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எமது வைத்தியசாலைப் பணியாளர்கள் வைத்தியசாலை வளாகத்தினுள்ளே கொல்லப்பட்டது துரதிர்ஷ்டவசமானது. போர் நடைபெறும் பிரதேசங்களில் பெண்கள், பொதுமக்கள், குழந்தைகள், மருத்துவ நிலையங்கள் மீதும் தாக்கக்கூடாது என்பது சர்வதேச கொள்கை.

இந்த நிலையில் போர் காலத்தில் வடபகுதியில் இயங்கிவந்த இந்த வைத்தியசாலை வளாகத்தில் 21 மருத்துவ உத்தியோகத்தர்கள் உட்பட நோயாளர்கள் மற்றும் பொதுமக்கள், உறவினர்கள் கொல்லப்பட்ட விதம் கொடூரமானது.

இந்தப் படுகொலைச் சம்பவம் 2 நாட்களாக நீடித்தது. காயப்பட்டவர்கள் 48 மணி நேரமாக இரத்த வெள்ளத்தில் இருந்தார்கள். அனைத்து உடலங்களும் இதே வளாகத்தில் எரியூட்டப்பட்டன. எம்அனைவருக்கும்இது மிகவும் வலிமையான தாக்கத்தை ஏற்படுத்தியுள் ளது.



பொது நிலையங்களில் இவ்வாறான தாக்குதல்கள் தவிர்க்கப்பட்டிருக்க வேண்டும். போர் ஏற்படும் சந்தர்ப்பத்தில் போரில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரும் தமது உயிரை காத்துக்கொள்ள முனைவார்கள், ஆகவே அங்கு கொலை மலிந்து காணப்படும், போரில் நேரடியாக ஈடுபடுகிறவர்களை விட போரை தூண்டுபவர்களே இதன் பொறுப்பாளிகள், பெரிய அசம்பாவிதங்களுக்கு காரணமாக அதை தூண்டியவர்களே தண்டிக்கப்பட வேண்டும். போர் தவிர்க்கப்பட வேண்டும். எமக்கு சமாதானம் எவ்வளவு முக்கியம் என்பதை இந்த சம்பவம் தெளிவுபடுத்துகிறது. வைத்திய சேவை புனிதமானது. எந்த அனர்த்தத்திலும் இந்த உயரிய பணியில் இருந்து விடுபடக் கூடாது. வைத்திய சேவை எந்த சந்தர்ப்பத்திலும் தொடர வேண்டும் என மேலும் தெரிவித்தார். (இ-9)





யாழ். புன்னாலைக்கட்டுவன் கணேசா முன்பள்ளியின் வாணி விழாவும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான கௌரவிப்பு விழாவும் அண்மையில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக ஓய்வு நிலை அதிபர் ந.ஜெயக்குமார் கலந்து சிறப்பித்தார். (படங்கள்:-சக்தி)

## மலையக மக்களுக்கு ஆதரவாக லண்டனில் ஆர்ப்பாட்டம்

(லண்டன்)

ஆயிரம் ரூபாய் அடிப்படைச் சம்பளம் வழங்குமாறு கோரி மலையக மக்கள் முன்னெடுத்துவரும் தொடர்ச்சியான போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில் இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் மலையக மக்களுக்கு ஆதரவு தெரிவித்து பிரித்தானியாவில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

லண்டனிலுள்ள இலங்கைத் தூதரகத்திற்கு முன்பாக நேற்று ஞாயிற்றுக்கிழமை இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. லண்டன்வாழ் இலங்கையர்களால் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(இ-7)



பாராட்டி வாழ்த்துகின்றோம்

கணபதி துரைசிங்கம்



எமது தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களின் கொத்தணி வரணியில் (வரணி வடிசாலை) கௌரவ தலைவராக சேவையாற்றும் கணபதி துரைசிங்கம் அவர்கள் 07.09.2018 அன்று சாவகச்சேரி நீதவான் மன்றத்தில் நீதிபதி கஜநிதிபாலன் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டமையை மனமார வாழ்த்துகின்றோம். இவரின் சமூக சேவை மென்மேலும் தொடரவும் நோய் நொடியின்றி சீரும் சிறப்புடனும் நீடூழி காலம் வாழ எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளர், பணியாளர்கள்
ப.தெ.வள. அபிவிருத்திக் கூட்டுறவு சங்கங்களின்
கொத்தணி, வரணி.

பாராட்டி

வாழ்த்துகின்றோம்

திரு.து.சர்வேந்திரகுமார்
Dip in Tech , B.A.PGDE
யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

2018 இல் சிறந்த ஆசிரியராக தெரிவு செய்யப்பட்டு "குரு பிரதீபா பிரபா" பட்டத்தினை பெற்றமைக்காக வாழ்த்துகின்றோம்.



ஆசிரிய சகோதரத்துவம்
யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி.








வடக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் நடத்திய பாரம்பரிய கூத்துக்களின் ஆற்றுகை நிகழ்வு பாஷையூர் விளையாட்டரங்கில் வடக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் உதவிப்பணிப்பாளர் திருமதி அபிராமி பாலமுரளி தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் கலாநிதி க. சர்வேஸ்வரன், யாழ் . மாநகர சபை முதல்வர் இ. ஆனல்ட் உட்பட பலர் கலந்து கொண்டனர். (படங்கள்:- கொழும்புத்துறை செய்தியாளர்)

# சவுதி ஊடகவியலாளர் கொலை வெள்ளை மாளிகை இரங்கல்



(வோஷிங்டன்)

சவுதி அரேபியாவில் கொல்லப்பட்ட ஊடகவியலாளர் ஜமால் கஷோக்கியின் இழப்புக்கு அமெரிக்கா தனது வருத்தத்தை தெரிவித்துள்ளது.

சவுதி மன்னர் சல்மானின் முடியாட்சியை பற்றி கடுமையாக விமர்சித்து வந்தவர், அந்த நாட்டின் ஊடகவியலாளர் ஜமால் கஷோக்கி (வயது 59). அண்மையில் இஸ்தான்புல் நகரில் உள்ள சவுதி அரேபிய துணைத் தூதரகத்துக்கு கடந்த 2 ஆம் திகதி சென்ற அவர் மாயமானார்.

அவர் அந்த தூதரகத்துக்குள் வைத்து சவுதி அரேபிய ஏஜெண்டுகளால் கொல்லப்பட்டு விட்டார் என்று பல தரப்பிலும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. ஆனால் இந்தக் குற்றச்சாட்டை இது வரை சவுதி அரேபியா மறுத்து வந்தது.

இந்நிலையில், ஊடகவியலாளர் ஜமால் கஷோக்கி கொல்லப்பட்டதாக சவுதி ஊடகங்களில் செய்தி வெளியானதை அடுத்து, கஷோக்கி கொல்லப்பட்டது உறுதி செய்யப்பட்டது. இந்த கொலை தொடர்பாக 18 பேரை கைது செய்துள்ளதாக சவுதியின் அட்டர்னி ஜெனரல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தனது டுவிட்டர் பக்கத்தில் வெள்ளை மாளிகையின் செய் தித் தொடர்பு செயலாளர் சாரா சாண்டரஸ், ஊடகவியலாளர் ஜமால் கஷோக்கியின் மரணத்துக்கு ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்துக் கொள்வதாகவும், அவரது குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுக்கு இரங்கலை தெரிவித்துக் கொள்வதாகவும் தெரிவித்துள்ளார்.(7)

கடும் மழையால் நெல்லியடி புதிய சந்தை முன்பகுதி வெள்ளத்தில் மிதக்கின்றது. இதே வேளை இரண்டு மாடி கட்டடத்தின் உட்புறம் உள்ள தையல், மிக்சர் கடை என்பனவும் சேதமடைந்துள்ளதாகவும் இது தொடர்பில் வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபை கவனம் செலுத்த வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(படங்கள்:- மகாலிங்கம்)




# ஐயப்பன் கோவில் விவகாரம்; கமல், ரஜினி, சிவக்குமார்: நழுவல், மழுப்பல், ஆவேசம்



ஐயப்பன் கோவிலில் பெண்களை அனுமதிக்கும் விவகாரத்தில் ரஜினி மழுப்பலாகவும், சிவகுமார் ஆவேசமாகவும், கமல் நழுவலாகவும் மாறுபட்ட கருத்தை தெரிவித்துள்ளனர்.

ஐயப்பன் கோவிலில் பெண்களை அனுமதிக்க வேண்டும் என உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டதை அடுத்து கேரளாவில் பெரும் கலவரம் நடந்து வருகிறது. கோவிலுக்கு பெண்கள் வரக்கூடாது என்று இந்து அமைப்புகள், பெண்கள் அமைப்புகள் சில, பக்தர்கள் அமைப்புகள் என போராட்டம் நடந்து வருகிறது.

இதனால் கேரளாவில் சட்டம் ஒழுங்கு பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. தமிழகத்திலும் பா.ஜ.க. உள்ளிட்ட கட்சிகள் எதிர்ப்பதும், மற்ற கட்சிகள் ஆதரித்தும் மழுப்பியும் கருத்து தெரிவித்து வருகின்றன. இந்நிலையில் நடிகர்கள் சிவக்குமார், ரஜினிகாந்த், கமல்ஹாசன் மூவரும் இந்த விவகாரத்தில் விதவிதமான கருத்து தெரிவித்துள்ளனர்.

ரஜினி அளித்த பேட்டி

சபரிமலை விவகாரத்தில் உச்சநீதிமன்ற தீர்ப்பை எப்படி பார்க்கிறீர்கள்?

பெண்களுக்கு அனைத்து இடத்திலும் சம உரிமை என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. ஆனால் கோவில் என்று வரும்போது ஒவ்வொன்றுக்கும் ஒரு சடங்கு இருக்கும். காலகாலமாக வரும் ஐதீகம் இருக்கும் அதில் யாரும் தலையிடக்கூடாது என்பது எனது கருத்து என்று ரஜினி பதிலளித்தார். அப்படியானால் உச்ச நீதிமன்ற தீர்ப்பு உதாசீனப்படுத்தப்படுகிறதா?

அப்படிச் சொல்ல வில்லை. கொஞ்சம் இந்த மதச்சம்பந்தப்பட்ட சடங்குகளை பார்த்து செய்ய வேண்டும். இது பெண்களுக்கு சாதகமான. விஷயம் அதை தவறாக பயன்படுத்தக் கூடாது என்று ரஜினி தெரிவித்தார்.

சென்னை விமான நிலையத்தில் கமல் அளித்த பேட்டி:

இந்த விஷயத்தில் தெளிவாக கருத்து தெரிவிக்கும் கமல்ஹாசன் மழுப்பலாக பதிலளித்தார். இந்த விவகாரத்தில் நான் பதில் சொல்வது சரியாக இருக்காது. இதுவரை நான் ஐயப்பன் கோவிலுக்கு சென்றதில்லை என்றும் எனவே அந்த விவகாரம் குறித்து தன்னிடம் கருத்து கேட்பது சரியாக இருக்காது என்றும் கூறினார்.

உச்சநீதிமன்ற தீர்ப்பை கர்நாடக அரசு மதிக்கவில்லை. கேரளாவில் மக்கள் மதிக்கவில்லை என்று கமல்ஹாசன் தெரிவித்தார்.

நடிகர் சிவக்குமார் செய்தியாளர்களை சந்தித்த போது சபரிமலையில் பெண்கள் செல்லும் காலம் வரும் என்று தெரிவித்தார். மகரவிளக்கு காலம் கடுமையான கஷ்டமாக இருக்கும். அன்று லட்சக் கணக்கான ஆண்கள் கூடுவார்கள் மோதிக்கிட்டு, இடிபட்டு கஷ்டப்படுவார்கள், அந்த நேரத்தில் பெண்கள் போகக் கூடாது. பெண்களை அரசு அனுமதிக்கக்கூடாது, நீதி பதியும் அனுமதிக்கக் கூடாது. அந்த பத்து நாட்கள் தவிர 355 நாட்களும் பெண்களை தயவு செய்து அனுமதியுங்கள்.

நீங்கள் அனுமதிக்கா விட்டாலும் இன்னும் ஐந்து பத்து ஆண்டுகளில் பெண்கள் செல்வதை தடுக்க முடியாது என்று தெரிவித்தார். பெண்கள் அதிக அளவில் எதிர்க்கிறார்களே என்று கேட்டதற்கு அது உங்கள் தாயார், தந்தையார் போன்றோர். உன் தங்கச்சி அதை ஆதரிக்கும். வருங் காலத்தில் உங்கள் குழந்தைகள் செல்வதை யாராலும் தடுக்க முடியாது என்று ஆவேசமாக கூறினார்.(இ-7)

# போதை மாத்திரைகளுடன் இருவர் கைது



(குருமன்காடு)

வவுனியா, ஓமந்தை பொலிஸாரின் விசேட நடவடிக்கையின் காரணமாக போதை மாத்திரை பிரதான விநியோகஸ்தர் உள்ளிட்ட இரு இளைஞர்களை ஓமந்தைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். அவர்களிடம் இருந்து இரண்டாயிரத்து 600 போதை மாத்திரைகளும் மீட்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் மாலை குறித்த இருவரும் ஓமந்தைப் பொலிஸாரால் ஏ9 வீதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது குறித்து மேலும் தெரிவிக்கையில்,

கடந்த வெள்ளிக்கிழமை ஆயிரத்து 670 போதை மாத்திரைகளுடன் யாழில் இருந்து திருகோணமலை சென்ற இரு இளைஞர்களை ஓமந்தை பொலிஸார் கைது செய்திருந்தனர். அவர்களை நீதிமன்றில் முற்படுத்தி, மேலதிக விசாரணைக்காக அவர்களை ஓமந்தைப் பொலிஸார் தமது கட்டுப்பாட்டில் எடுத்து விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். அவர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கை காரணமாக சொகுசு கார் ஒன்றில் யாழில் இருந்து இரண்டாயிரத்து 600 போதை மாத்திரைகளுடன் ஏ-9 வீதியில் பயணித்த பிரதான விநியோகஸ்தர் உள்ளிட்ட இருவரை ஓமந்தைப் பகுதியில் வைத்து பொலிஸார் மடக்கிப் பிடித்தனர்.

வவுனியா மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அபய விக்கிரமவின் வழிகாட்டலில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஐ.எம்.எஸ்.எம். தென்னக்கோனின் நெறிப்படுத்தலில் ஓமந்தை பொலிஸில் நிலைய பொறுப்பதிகாரி சுரேஸ் த சில்வா தலைமையிலான பொலிஸாரே இவ் விசேட நடவடிக்கையை மேற்கொண்டனர்.

குறித்த இரு இளைஞர்களிடம் இருந்து போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளதுடன், சொகுசு காரும் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், இருவரையும் நீதிமன்றில் முற்படுத்த ஓமந்தை பொலிஸார் நடவடிக்கைகள் முன்னெடுத்துள்ளனர். கைது செய்யப்பட்ட இருவரும் 34 மற்றும் 23 வயதுடைய யாழ்ப்பாணம், சுன்னாகத்தைச் சேர்ந்தவர்களாவர். (7-250)




# புதுக்குடியிருப்பு பிரதேச சபையால் 15 இலட்சம் ரூபாய் செலவில் முதற்கட்டமாக 324 மின்விளக்குகள்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச சபையால் தமது பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கிராமங்களில் 15 இலட்சம் செலவில் முதற்கட்டமாக 324 மின்விளக்குகள் பொருத்தும் பணிகள் நிறைவு பெற்றுள்ளதாக புதுக் குடியிருப்பு பிரதேச சபை தவிசாளர் செ. பிறேமகாந்த் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் பிரதேச சபை உறுப்பினர்களின் கோரிக்கைகள் மற்றும் பொது அமைப்புக்களின் கோரிக்கைகளுக்கு அமைவாக இப்பணியானது பூர்த்தியடைய சபை உறுப்பினர்கள் சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கியிருந்தனர். இதன்மூலமாக எம்மால் இந்த பணி சிறப்புற முன்னெடுக்கப்பட்டதாக தவிசாளர் தெரிவித்தார்.

இதன்மூலம் எமது புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு உட்பட்ட புதுக்குடியிருப்பு மற்றும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகங்களுக்குட்பட்ட அனைத்து கிராமங்களையும் உள்ளடக்கி முழுந்தளவு முதற்கட்ட முயற்சியாக 15 இலட்சம் செலவில் முதற்கட்டமாக 324 மின் விளக்குகள் பொருத்தும் பணிகள் நிறைவுபெற்றுள்ளதாக புதுக்குடியிருப்பு பிரதேச சபை தவிசாளர் செ. பிறேமகாந்த் மேலும் தெரிவித்துள்ளார்.

அத்தோடு தொடர்ச்சியாக நிறைய கோரிக்கைகள் இருப்பதோடு கட்டம் கட்டமாக அவைகள் நிறைவு செய்யப்படும் எனவும் நீண்டகாலமாக சபை இல்லாது இருந்தமையால் தமது பணிகள் அதிகளவில் உள்ளது. எனவே முழுந்தளவு இருக்கிற வளங்களை கொண்டு மிக விரைவாக மக்களது தேவைகளை பூர்த்தி செய்ய மக்களும் தமக்கு பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் தவிசாளர் தெரிவித்தார். (7-281)

# தற்காலிக வீடு வழங்கல்



(பனிக்கன்குளம்)

வவுனியா ஆச்சிபுரத்தில் வசித்து வரும் குடும்பத்திற்கு பாராளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதனால் நேற்றுமுன்தினம் வீடு கையளிக்கப்பட்டது.

முன்னர் வசித்து வந்த வீடு மண்ணினால் கட்டப்பட்ட மழைக்கு இடிந்து விழும் நிலையில் காணப்பட்டமையினால் அம்மா அறக்கட்டளை மற்றும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் ஜேர்மன் மகளிர் அமைப்பினரின் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா நிதியில் இத் தற்காலிக வீடு அமைக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. (7-281)






நீலன் அறக்கட்டளையால் புலம்பெயர் தேசத்தில் வசிக்கும் கபிலன் கிளி/சிவபாதகலையக அ.த.க பாடசாலையில் கல்வி கற்கும் 69 மாணவர்களிற்கு 90000/- பெறுமதியான தைக்கப்பட்ட உடைகள் நீலன் அறக்கட்டளையின் வடமாகாண இணைப்பாளர் முல்லை ஈசனால் வழங்கி வைக்கப்பட்டது.

# தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆதரவாக கிளிநொச்சியிலும் கவனயீர்ப்பு போராட்டம்

(கிளிநொச்சி)

அடிப்படைச் சம்பளம் ஆயிரம் ரூபாய் ஆக இருக்க வேண்டும் என கோரி தமது போராட்டத்தை முன்னெடுத்து இருக்கின்ற தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆதரவளிக்கும் முகமாக கிளிநொச்சியிலும் கவனயீர்ப்பு போராட்டம் நடத்த தமிழ் தேசிய கூட்டமைப்பின் மாவட்ட காரியாலயம் அழைப்பு விடுத்துள்ளது.

இந்த போராட்டமானது நாளை மறுதினம் 24 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணியளவில் கிளிநொச்சி பழைய கச்சேரிக்கு முன்பாக இடம் பெறும். (7)

# மாணவனைத் தாக்கிய சாரதிக்குப் பிணை நவம்பர் 23 வழக்கு

(பனிக்கன்குளம்)

பனிக்கன்குளம் பகுதியில் சீருடையில் நின்ற பாடசாலை மாணவனைத் தாக்கிய இ.போ.ச. சாரதிக்குப் பிணை வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 18.10.2018 அன்று பனிக்கன் குளம் பகுதியில் சீருடையில் நின்ற பாடசாலை மாணவனைத் தாக்கிய சாரதியை மாங்குளம் பொலிஸார் நேற்றுக் காலை கைது செய்தனர்.

இவரை முல்லைத்தீவு நீதிமன்றில் முற்படுத்திய போது பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டதோடு நவம்பர் மாதம் 23 ஆம் திகதி வழக்கு தவணை யிடப்பட்டுள்ளது. (இ-281)

# கூட்டமைப்பிடமிருந்து வடமாகாணசபை பறிபோகும் நிலை ஏற்பட்டுள்ளது

## செல்வம் எம்.பி கவலை



(குருமன்காடு)

வட மாகாண சபை தமிழ்தேசிய கூட்டமைப்பிடமிருந்து பறிபோகும் நிலை காணப்படுவதாக கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியா ஆச்சிபுரம் பகுதியிலுள்ள பெண் ஒருவரின் பரிதாப நிலையை கருத்தில் கொண்டு தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் இளைஞரணியினரின் ஏற்பாட்டில் ஒரு இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட தற்காலிக வீடு நேற்று முன்தினம் சனிக்கிழமை பயனாளியிடம் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வின் நிறைவில் ஊடகங்களின் கேள்விகளுக்கு பதில் வழங்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், 'மக்களை பிரிக்கின்ற சந்தர்ப்பத்தை உருவாக்கக் கூடாது என்பது எமது கட்சியின் கருத்து.

ஒற்றுமை தொடர்பாக முயற்சிகளை நாம் முன்னெடுத்துக்கொண்டு இருக்கின்றோம், குறிப்பாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுடனும், முதலமைச்சருடனும் இது தொடர்பாக கதைத்திருக்கிறோம்.

குறிப்பாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இன்னும் இரண்டு மூன்று கட்சிகளாக பிரிகின்ற போது ஒரு பெரிய ஆபத்தை நாங்கள் சந்திக்க வேண்டும். போர்க் காலத்தில் கூட யாழ்ப்பாணத்தில் ஐக்கிய தேசிய கட்சியின் கால் பதிந்திருந்தது.

தற்போது உள்ளூராட்சி மன்ற தேர்தலில் பல இடங்களை ஐக்கிய தேசியக்கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுமே கைப்பற்றின. தற்போது ஐக்கிய தேசிய கட்சி சார்பாக நிசாத் பதியுதீன் அமைச்சராக இருக்கின்றார், சுதந்திர கட்சி சார்பாக அங்கஜன் மற்றும் மஸ்தான் ஆகியோர் பிரதி அமைச்சர்களாக வடமாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர்.

இந்நிலையில் எமது மக்கள் பிரிந்து வாக்களித்தல் மற்றும் எமது கட்சிகள் பிரிந்து இருக்கின்ற போது மக்கள் ஒரு முடிவை எடுக்கின்ற நிலைமைவரும்.

மக்கள் தங்களிற்கு ஆயிரம் தேவைகள் இருக்கின்றது. எனவே இத்தேவைகளை பூர்த்தி செய்வதற்கு இவர்களால்தான் முடியும் என்கின்ற சிந்தனைக்கு மாறுகின்ற வாய்ப்பு கூட இருக்கின்றது.

கொள்கையோடு இருக்கின்ற மக்கள் கூட வாக்களிக்க போகாத நிலைமை காணப்படுகின்றது. நாங்களும் கொள்கையை பேசி விட்டு இருக்கின்றோம், இதனால் ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் இணைந்து வடமாகாணசபையை கைப்பற்றுவதற்கான அபாயம் உள்ளது' என தெரிவித்துள்ளார். (7-250)

# ஐப்பசி மாத இராசி பலன்கள்

## 18.10.2018-16.11.2018



விளம்பி வருடம் ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சுக்கிரன் உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கிறார். எனவே இம்மாதம் பொருளாதாரத்தை பொறுத்தவரை நிறைவு ஏற்படும். கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும். எந்த வழியிலேனும் உங்களுக்கு கடைசி நேரத்தில் பணத்தேவைகள் பூர்த்தியாகும்.

புத-சுக்கிர யோகம், புத-ஆதித்ய யோகம்ஆகிய இரண்டு யோகங்களும் உங்களுக்கு இருக்கிறது. கல்வி வளர்ச்சி, கலை வளர்ச்சி, தொழில் வளர்ச்சி போன்றவை சிறப்பாக அமையும். எதிரிகள் விலகுவர். இல்லறம் நல்லறமாக அமையும். சுக ஸ்தானத்தில் உச்சம் பெற்ற செவ்வாயோடு சந்திரன் இருப்பதால், சந்திர-மங்கள யோகம் உருவாகின்றது. இல்லத்தில் மங்கல ஓசை இதுவரை கேட்கவில்லையே என்று கவலைப்பட்டவர்களுக்கு இப்பொழுது அது கேட்கும்வாய்ப்பு உண்டு.

திருமணம், கிரகப்பிரவேசம் போன்ற வகையில் எதிர்பார்த்த பலன்கள் கிடைக்கும். இதுவரை உங்கள் இராசியில் இருந்து வந்த குரு பகவான், இப்பொழுது குடும்ப ஸ்தானத்தில் அமர்ந்துள்ளதால் குடும்ப முன்னேற்றம் கூடுதலாகக் கிடைக்கும். இதுவரை கடுமையாக முயற்சித்தும் நடைபெறாத காரியங்கள், இப்பொழுது துரிதமாக நடைபெறும். பாகப்பிரிவினைகள் இழுபறியில் இருக்கின்றதே, சொத்துகள் எப்பொழுது கைக்கு வந்து சேரும்? சொந்தங்களின் பகை அகலுமா? இடமாற்றம் எதிர்பார்த்தபடி கிடைக்குமா? என்றெல்லாம் எண்ணியிருந்தவர்களுக்கு அவை அனைத்தும் படிப்படியாக நடைபெறப் போகின்றது. பணிபுரியும் இடத்தில் பிரச்சினைகள் உருவாகிக் கொண்டிருக்கின்றதே, வேறு வேலைக்கு முயற்சி செய்யலாமா அல்லது இங்கேயே நீடிக்கலாமா, என்று சிந்தித்தவர்களுக்கு சந்தோஷமான தகவல் வந்து சேரும். தெசாபுத்தி பலம் பெற்றிருப்பவர்கள், எதற்கும் கவலைப்படத் தேவையில்லை. இடம் மாறிச் சென்றாலும் தடுமாறிச் செல்லாமல் இருக்கலாம். இம்மாதம் முக்கியமான விழாக்கள் வருகின்றது. மேலும் தீபாவளிப் பண்டிகையும் வருகிறது. கந்தசஷ்டி விழா ஆகிய நாட்களில் பராசக்தி வழிபாடும், கந்தவேலன் வழிபாடும் உங்கள் கடமையில் இருந்த தடைகளை அகற்றும்.

**விருச்சிக புதன் சஞ்சாரம்**

ஒக்டோபர் 24ஆம் திகதி விருச்சிக இராசியில் புதன் சஞ்சரிக்கிறார். இதன் விளைவாக நல்ல மாற்றங்கள் உங்களைத் தேடிவரப் போகிறது. விரயாதிபதி புதன் தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் விரயத்திற்கேற்ற வரவு வந்து கொண்டேயிருக்கும். எனவே எதைச் செய்தாலும் கையில் தொகை வைத்து செய்ய வேண்டியது இல்லை. காரியத்தைத் தொடங்கி விட்டாலே பணம் தானாக வந்து சேரும். எதிர்பாராத விதத்தில் உதவிகளும் கிடைக்கும். தாய் வழி உறவினர்களின் ஆதரவு கூடும். தன்னிச்சையாக செயற்படும் சூழ்நிலை உருவாகும். அரசு வழிப் பணிகளுக்காக விண்ணப்பித்தவர்களுக்கு அதற்கான முயற்சி கைகூடும்.

**கும்பச் செவ்வாய் சஞ்சாரம்!**

ஒக்டோபர் 27ஆம் திகதி கும்ப இராசிக்குச் செவ்வாய் செல்கிறார். 2, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். தன சப்தமாதிபதியானவர் செவ்வாய்பஞ்சம ஸ்தானத்தில்சஞ்சரிக்கும்பொழுது, பிள்ளைகளால் பெருமை சேரும். திருமண முயற்சிகளில் இருந்த தடை அகலும். குழந்தைகளின் கல்யாணக் கனவுகளை முன்னிட்டு செய்த முயற்சிகள் கைகூடும். சீர்வரிசைப் பொருட்கள் வாங்குவதிலும், ஆடை, ஆபரணப் பொருட்களை வாங்குவதிலும் கவனம் செலுத்துவீர்கள்.

வெளிநாட்டில் இருந்து வரும் அழைப்புகளை ஏற்றுக் கொள்ளும் சூழ்நிலை உண்டு. அதிகார




வர்க்கத்தினர் உங்கள் அன்பிற்கு கட்டுப்பட்டு நல்ல காரியங்கள் பலவற்றையும் முடித்துக் கொடுப்பர் வீடு இடம்வாங்கும் யோகம் உண்டு. வியாபாரத்தில் கடந்த ஓராண்டாக ஏற்பட்ட இழப்புகளை ஈடுசெய்யப் புதிய வாய்ப்புகள் வந்து சேரும். பத்திரப் பதிவில் இருந்த தடை அகலும். பஞ்சாயத்துகள் நல்ல முடிவிற்கு வரும்.

**புதன் வக்கிர இயக்கம்!**

புதன் உங்கள் இராசிக்கு 9, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர். நவம்பர் 13ஆம் திகதி துலாம் இராசியில் வக்கிரம் பெறுகிறார். 12இற்கு அதிபதி வக்கிரம் பெறும் பொழுது நற்பலன்கள் கிடைக்கும். என்றாலும் 9இற்கு அதிபதியாகவும் புதன் விளங்குவதால் பெற்றோர் வழியில் சில பிரச்சினைகள் உருவாகலாம். சொந்த பந்தங்களின் எதிர்ப்பு அதிகரிக்கும். வெளிநாடு செல்லும் முயற்சிகளில் தாமதம் ஏற்படலாம். தாழ்வு மனப்பான்மையும், தட்டுப்பாடும் கூடும் நேரமிது. என்ன இருந்தாலும் இதுபோன்ற காலங்களில் சுய ஜாதகத்தை ஆராய்ந்து பார்த்து தெசாபுத்திக்கேற்ற தெய்வ வழிபாடுகளை மேற்கொண்டால் குடும்ப முன்னேற்றத்தில் குறையேதும் ஏற்படாது. குலதெய்வ வழிபாடு குழப்பங்களைத் தீர்க்கும். இம்மாதம் வியாழன்தோறும் குரு வழிபாட்டையும், கந்தசஷ்டி அன்று வேலவன் வழிபாட்டையும் மேற்கொள்வது நல்லது.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

இம்மாதம் குடும்ப முன்னேற்றம் கூடுதலாகும். வருமானம் போதுமானதாக இருக்கும். வளர்ச்சியை முன்னிட்டு செய்யும் புது முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். உடல் நலம் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள். கணவன் - மனைவிக்குள் அன்பும், பாசமும் அதிகரிக்கும். பிள்ளைகளின் மேற்படிப்பு, உத்தியோகம், திருமணம் போன்றவை சம்பந்தமாக செய்யும் முயற்சிகளில் தடைகள் எதுவும் ஏற்படாது. பணிபுரியும் பெண்களுக்கு இடமாற்றங்களும், இலாகா மாற்றங்களும் எதிர்பார்த்தபடி அமையும்.

மேலதிகாரிகள் உங்களுக்கு வேண்டிய சலுகைகளைச் செய்து கொடுப்பார்கள். 4இல் கேது, 10இல் ராகு இருப்பதால் சர்ப்ப சாந்திப் பரிகாரங்களை மேற்கொள்வதோடு, சஷ்டியன்று முருகப்பெருமானையும் வழிபடுவது நல்லது.

# இல்லற வாழ்வில் இனிமை சேரும்!

**ஜோதிடக் கலாமணி**
**சிவல்புரி சிங்காரம்**



விளம்பி வருடம் ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய் உச்சம் பெற்றுச் சந்திரனோடு இணைந்து சந்திர-மங்கள யோகத்தை உருவாக்குகிறார். இதனால் சந்தித்த காரியங்கள் அனைத்திலும் வெற்றி கிடைக்கும். செல்வநிலை உயரும். கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். ஆரோக்கியத் தொல்லை அகன்று அதிக உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள்.

அஷ்டமாதிபதி புதன் 12இல் இருப்பது, ஒரு வழிக்கு நன்மைதான். மறைந்த புதனால் நிறைந்த தன லாபம் கிடைக்கும். மகிழ்ச்சிக்குரிய விதத்தில் செலவுகளை செய்வீர்கள். புத-சுக்கிர யோகமும், புத-ஆதித்ய யோகமும் இருப்பதால் ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். அசையா சொத்துகள் வாங்குவதில் ஆதாயம் கிடைக்கும். அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் நட்பால், காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்பு மாறும். வங்கிச் சேமிப்பு உயரும். வாகனம் வாங்க வேண்டுமென்று நீண்ட நாட்களாக முயற்சி செய்தும் இதுவரை வாங்க முடியவில்லையே என்று நினைத்தவர்களுக்கு அதற்கான வாய்ப்பு உருவாகும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு வெளிநாட்டில் இருந்து கூட அழைப்புகள் வரலாம்.

மேலதிகாரிகளின் பார்வை நம்மீது விழவில்லையே என்று கவலைப்பட்டவர்களுக்கு அது கைகூடும் நேரம் இது. சுபவிரயம் அதிகரிக்கும் நேரம் என்பதால், வீட்டை விரிவுபடுத்திக் கட்டும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி சிறு தொகையை செலவிடலாம். திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடியே நடைபெற, ஜென்ம குருவின் ஆதிக்க காலத்தில் வழிபாடுகள் தேவை. குறிப்பாக வியாழக்கிழமை தோறும் விரதமிருந்து குரு பகவானை வழிபட்டு வருவது நல்லது. குல தெய்வ வழிபாட்டின் மூலமும் குடும்ப முன்னேற்றம் கூடுதலாகக் கிடைக்கும்.

கந்த சஷ்டியின் ஆறு நாட்களிலும் ஆறுமுகப் பெருமானை முறையாக வழிபட்டால் செல்வ வளம் பெருகும். செல்வாக்கு உயரும். தெய்வ பலத்தால் எதிரிகளை வெல்லும் வாய்ப்புக் கிட்டும்.

**விருச்சிக புதன் சஞ்சாரம்**

ஒக்டோபர் 24ஆம் திகதி விருச்சிக இராசிக்குப் புதன் வருகிறார். தனாதிபதி குருவோடு லாபாதிபதி புதன் இணையும் இந்த நேரத்தில் உங்களின் நிதிநிலை உயரும். நிம்மதி கிடைக்கும். நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும்.

மதிப்பும், மரியாதையும் உயரும். மக்கள் செல்வாக்கு மேலோங்கும். குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவம் ஏராளம் நடை பெறும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வும், ஊதிய உயர்வும் எதிர்பாராத விதத்தில் வந்து சேரும். நட்பு வட்டம் விரியும். நண்பர்கள் நல்ல தகவல்களைக் கொண்டு வந்து சேர்ப்பார்கள். சொத்துகள் வாங்கும் யோகமும், சொந்தங்களின் வாழ்த்தும் கிடைக்கும்.

**கும்பச் செவ்வாய் சஞ்சாரம்!**

ஒக்டோபர் 27ஆம் திகதி கும்ப இராசிக்குச் செவ்வாய் செல்கிறார். இராசிநாதன் சுக




ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் சுகங்களும், சந்தோஷங்களும் வந்து சேரும். கடன்சுமை குறையும். கவலைகள் தீரும். வழக்குகள் சாதமாக அமையும். உறவினர்களின் பாச மழையிலும், பண மழையிலும் நனைவீர்கள். வி.ஐ.பிக்கள் வீடு தேடிவந்து விருப்பங்களை நிறைவேற்றுவர். நாகரிகப் பொருட்கள் மற்றும் ஆடை, ஆபரணங்கள் வாங்குவதில் அதிக கவனம் செலுத்தும் நேரம் இது. தொழிலில் ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து சேரும்.

**புதன் வக்கிர இயக்கம்**

நவம்பர் 13ஆம் திகதி துலாம் இராசியில் புதன் வக்கிர இயக்கத்தில் செல்கிறார். இக்காலத்தில் கொஞ்சம் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. வீண் விரயங்கள் ஏற்படாமல் இருக்க விழிப்புணர்ச்சி தேவை. குடும்பத்திற்குத் தேவையான அத்தியாவசிப் பொருட்களையும், ஆடம்பரப்பொருட்களையும் வாங்கிச் சேர்க்க முன்வருவீர்கள். டி.வி, பிரிட்ஜ், கிரைண்டர் போன்ற மின்சாதனப் பொருட்களை வாங்கும் எண்ணமும் கூடும்.

இம்மாதம் கந்தசஷ்டி நாளில் சூரசம்ஹார வைபவத்தைப் பார்ப்பதோடு, சுப்பிரமணியரை வழிபடுவது நல்லது. வியாழன்தோறும் குரு தட்சிணாமூர்த்தியை வழிபட்டு வருவது நல்ல பலனைத் தரும்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

இம்மாதம் எடுக்கும் முயற்சிகளில் எல்லாம் வெற்றி கிடைக்கும். முன்னேற்றப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள். எதிர்பார்த்த தொகை கைகளில் புரளும். இலாபம் சிறப்பாக வந்து சேரும். கணவன்-மனைவிக்குள் பாசமும், நேசமும் அதிகரிக்கும். உங்கள் பெயரிலேயே சொத்துகள் வாங்கும் முயற்சி கைகூடும். பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய தகவல் வந்து சேரும். தாய்வழி ஆதரவும், உடன் பிறப்புகளின் ஒத்துழைப்பும் கூடுதலாகவே கிடைக்கும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். பணிபுரியும் பெண்களுக்கு மேலிடத்தில் இருந்து சலுகைகள் மட்டுமல்லாது, சம்பள உயர்வும் கிடைக்கும்.

குரு வழிபாடும், குல தெய்வ வழிபாடும் செய்வதோடு, சூரசம்ஹாரத்தன்று குகன் வழிபாட்டையும் மேற்கொண்டால் கூடுதல் நன்மை கிடைக்கும்.

(தொடரும்)

# தொட்டது துலங்கும்!

# 'சிரிலிய சவிய' திட்ட வாகனத்தை பகுப்பாய்வுக்குட்படுத்த உத்தரவு



(கொழும்பு)

பிரபல ரக்பி வீரர் வசீம் தாஜுதீனை கடத்திக் கொலை செய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட "சிரிலிய சவிய" திட்டத்திற்கு வழங்கப்பட்டிருந்த டிபென்டர் வாகனத்தில், மனித எச்சங்களோ வெடி பொருட்களோ இருந்தனவா? என ஆய்வு செய்து நீதிமன்றத்திற்கு பகுப்பாய்வு அறிக்கை சமர்ப்பிக்குமாறு அரசாங்க பகுப்பாய்வாளர் நாயகத்திற்கு கொழும்பு மேலதிக நீதவான் இசுரு நெத்திகுமார உத்தரவிட்டார்.

தாஜுதீன் கொலை வழக்குடன் தொடர்புள்ள டபிள்யூ.பீ.கே.ஏ.0642 இலக்க டிபென்டர் வாகனம் தற்பொழுது சி.ஐ.டியின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளது. தாஜுதீன் கடத்தி கொலை செய்யப்படுவதற்கு முன்னர் இந்த வாகனம் கடத்தப்பட்டதாக சாட்சியம் கிடைத்துள்ளதால் இதில் மனித எச்சங்களோ ஆடைகளின் பகுதிகளோ வெடிபொருட்களோ இருந்தனவா? என ஆய்வு செய்து பாதுகாப்பாக வைத்திருக்குமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இடையீட்டு மனுவொன்றைச் சமர்ப்பித்து குற்றப்புலனாய்வு பிரிவு முன்வைத்த கோரிக்கையை ஆராய்ந்த நீதிமன்றம் இந்த உத்தரவை வழங்கியது. முன்னாள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேராவினால் சிரிலிய சவிய அமைப்பிற்கு 2011.08.11 ஆம் திகதி விடுவித்திருந்த இந்த டிபென்டர் வாகனம் ஒரு நாளாவது சிரிலிய சவிய பணிகளுக்கு பயன்படுத்தப்படவில்லை என்று சி.ஐ.டி. நீதிமன்றத்திற்கு அறிவித்தது.

அந்த வாகனம் யோஷித ராஜபக்ஷ தனது தனிப்பட்ட பாவனைக்கு பயன்படுத்தியதாகவும் யோஷிதவின் ஆலோசனைக்கமைய 2012 டிசெம்பர் மாத நடுப்பகுதியில் சீ.எஸ்.என் ஊடக வலையமைப்பின் விற்பனை நிறைவேற்றுப் பணிப்பாளர் டீன் என்பவரால் டிபென்டர் வாகனம் கொள்ளுபிட்டி பகுதி கராஜ் ஒன்றில் கறுப்பு நிற வர்ணம் பூசப்பட்டதாகவும் சி.ஐ.டி. நீதிமன்றத்தில் தெளிவுபடுத்தியுள்ளது.

2015 ஜனாதிபதி தேர்தலின் பின்னர் ஜனவரி 20 அல்லது 21 ஆம் திகதி இந்த வாகனம் ஜனாதிபதி செயலகத்தில் பணிபுரிந்த குலசேகர என்பவரின் வீட்டில் கைவிடப்பட்டிருந்தது. சந்தேகத்திற்கிடமான இரு டிபென்டர் வாகனங்கள் ஹோமாகம ,ஹபரகட பகுதியில் இருப்பதாக 2016 மார்ச் 3 ஆம் திகதி சி.ஐ.டிக்கு தகவல் கிடைத்தையடுத்து இது தொடர்பான விசாரணை ஆரம்பிக்கப்பட்டதாகவும்சி.ஐ.டி நீதிமன்றத்தில் அறிவித்தது.

செஞ்சிலுவை சங்க பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் இந்த வாகனம் பதிவு செய்யப்பட்டிருந்தது. 2015 பெப்ரவரி 20 ஆம் திகதி ஹபரகட பகுதியில் வைத்து கறுப்பு நிற டிபென்டர் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த வாகனம் 2011 இல் யோஷித ராஜபக்ஷவின் ஆலோசனைக்கமைய பொல்ஹேன்கொட பகுதியில் வைத்து வாகனத்தின் வெள்ளை நிறம் மாற்றப்பட்டு நீல நிறம் பூசப்பட்டது.

2012 டிசெம்பரில் கொள்ளுபிட்டி கராஜ் ஒன்றில் கறுப்பு நிறம் பூசப்பட்டது என நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.


இந்த வாகனத்திற்கு ஜனாதிபதி செயலகத்தினால் எரிபொருள் மற்றும் பராமரிப்பு என்பவற்றுக்காக கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் சி.ஐ.டி அறிவித்தது.

நாரஹேன்பிட்டி சாலிகா மைதானத்திற்கருகில் வைத்து 2012 மே 17 ஆம் திகதி அதிகாலை வாகனமொன்று தீப்பற்றி எரிந்தது. இதிலிருந்து தீக்காயங்களுடன் ரகர் வீரர் தாஜுதீனின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

இது கொலை என தெரிவித்த சி.ஐ.டியினர் தாஜுதீனின் கடத்தலுக்கு இந்த டிபென்டர் வாகனம் பயன்படுத்தப்பட்டிருப்பதாக நியாயமான சந்தேகம் ஏற்பட்டதாகவும் நீதிமன்றத்திற்கு அறிவித்தனர். டிபென்டர் வாகனத்தை தடயப்பொருளாக அறிவிக்குமாறும் சி.ஐ.டி நீதிமன்றத்தை கோரியது.

இது தொடர்பில் ஆராய்ந்த நீதவான் டிபென்டர் வாகனத்தை தாஜுதீன் வழக்கில் தடயப்பொருளாக பெயரிட அனுமதி வழங்கினார். (இ-7)

# பொலிஸ் பொறுப்பதிகாரியாக ஜெயதிலக பொறுப்பேற்றார்



(கரணவாய்)

நெல்லியடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக எம்.எம்.எச். ஜெயதிலக கடந்த வெள்ளிக்கிழமை பொறுப்பேற்றுள்ளார். இவர் அலவத்துகொட பொலிஸ் நிலையத்தில் முன்னர் பொறுப்பதிகாரியாக கடமை ஆற்றினார் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய பொறுப்பதிகாரி கமக்கொனர காங்கேசன்துறை போக்குவரத்து பொலிஸ் அதிகாரியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-60)



**தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு சாவகச்சேரி பொது நூலகத்தினரால் பாடசாலை மாணவர்களுக்கான சித்திரப் போட்டிகள் கடந்த சனிக்கிழமை காலை சாவகச்சேரி பொது நூலகத்தில் நடத்தப்பட்டன. தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு சாவகச்சேரி பொது நூலகத்தினால் தரம்-5 இற்கு உட்பட்ட மாணவர்களுக்கு பேச்சு, கட்டுரை, சித்திரம்,வாசிப்பு ஆகிய போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (படம்:-சுபேசன்)**

# சுற்றுலாப் பயணிகளைக் கவரும் ராவணா நீர்வீழ்ச்சி

(கொழும்பு)

அண்மைக்காலமாக மலையகத்தில் மழையுடன் கூடிய காலநிலை நிலவி வருவதாக சுற்றுலா பயணிகள் பெரிதும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை மிகவும் கவர்ந்த பகுதியாக ராவணா நீர்வீழ்ச்சி உள்ளது.





பெய்து வரும் அடைமழையின் பின்னர் ராவணா நீர்வீழ்ச்சி மிகவும் தெளிவாக காட்சியளிக்க ஆரம்பித்துள்ளது.

இதனை பார்வையிட பெருந்தொகையான சுற்றுலா பயணிகள் அந்தப் பகுதிக்கு படையெடுத்து வருகின்றனர்.

எல்ல, வெல்லவாய வீதிக்கு அருகில் இந்த நீர்வீழ்ச்சி அமைந்துள்ளது. வீதியில் நின்றபடி நீர்வீழ்ச்சியை காண கூடிய சந்தர்ப்பம் பொது மக்களுக்கு கிடைத்துள்ளது.

ராவணா நீர்வீழ்ச்சி பகுதியில் பெருந்தொகை சுற்றுலா பயணிகள் நிறைந்திருக்கும் காட்சிகள் சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ளன.

பல்வேறு நாடுகளிலிருந்து இலங்கையின் இயற்கை அழகை ரசிக்க பெருந்தொகை சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருகை தருகின்றமை குறிப்பிடத்தக்கது.(இ-7)

# புகையிரதங்களில் மோதி இரண்டு யானைகள் பலி!

(கொழும்பு)

கொழும்பிலிருந்து காங்கேசன்துறை மற்றும் மட்டக்களப்பு நோக்கி பயணித்த புகையிரதங்களில் மோதி இரண்டு காட்டு யானைகள் பலியாகியுள்ளன.

அத்துடன், மேலும் ஒரு காட்டு யானை காயமடைந்துள்ளதாக தெரியவருகிறது.

கொழும்பிலிருந்து காங்கேசன்துறை நோக்கி பயணித்த புகையிரதத்தில் அம்பன்பொல பகுதியில் வைத்து நேற்று முன்தினம் இரவு இரண்டு காட்டு யானைகள் மோதுண்ட நிலையில். அவற்றில் ஒன்று உயிரிழந்துள்ளது. அத்துடன், மற்றுமொரு காட்டு யானை பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளது.

இதேவேளை, கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கிப் பயணித்த புகையிரதத்தில் பலுக்ஸ்வெள பகுதியில் வைத்து மோதுண்ட காட்டு யானை ஒன்றும் பலியாகியுள்ளது. (இ-7)







**தென்மராட்சி கலை மன்றத்தினால் நடத்தப்பட்ட "கலாசாரப் பெருவிழா" நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை சாவகச்சேரி சிவன் கோவிலடியில் அமைந்துள்ள தென்மராட்சி கலை மன்ற கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. தென்மராட்சி கலைமன்றத் தலைவர் க.மோகனராஜலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாணசபை உறுப்பினர் கே.சயந்தனும், கௌரவ விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலக உதவி பிரதேச செயலர் செல்வி வினோஜிதா கணேசநாதனும் கலந்து சிறப்பித்தனர். (படங்கள்:-சுபேசன்)**

## தசரா விழாவில் கோர ரயில் விபத்து

# நீதி விசாரணையை மேற்கொள்ள வேண்டும்

## -மாநில அரசு உத்தரவு-

(சென்னை)

பஞ்சாப் மாநிலம் அமிர் தசரஸில் (Amritsar) தசரா விழா கொண்டாட்டத்தின் போது நேரிட்ட ரயில் விபத்து தொடர்பில், நீதி விசாரணையை மேற்கொள்ளு மாறு அம்மாநில அரசு உத் தரவிட்டுள்ளது.

குறித்த விபத்து தொடர் பாக பலரும் வெவ்வேறு பட்ட கருத்துக்களை முன் வைத்து வருவதுடன் சிலர் போராட்டங்களையும் நட த்த ஆரம்பித்துள்ளனர்.

ஆகையால் இவ்விபத் தின் உண்மை தன்மையை கண்டறியும் நோக்கில், நீதி விசாரணைக்கு மாநில முத லமைச்சர் அமரீந்தர் சிங் நேற்று முன்தினம் சனிக் கிழமை உத்தரவிட்டுள் ளார்.

மேலும் விபத்து தொடர் பில் விரைவாக விசார ணைகள் மேற்கொள்ளப் பட்டு நான்கு வாரங்களில் அறிக்கை தாக்கல் செய்யப் பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை ரயில் விபத்தில் உயிரிழந்தவர் களின் குடும்பங்களுக்கு ஏனைய மாநில முதலமைச் சர்கள், அமைச்சர்கள், நாட் டின் முக்கிய பிரமுகர்கள் மற்றும் ஏனைய நாட்டு தலைவர்கள் எனப் பலரும் தங்களது இரங்கலை தெரி வித்து வருகின்றனர். (7)

# பூட்டியிருந்த வீட்டில் 4 நாட்களாக தூக்கில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்ட நான்கு சடலங்கள்

(சென்னை)

இந்தியாவின், அரியானா மாநிலத்தில் 4 நாட்களாக பூட்டியிருந்த வீட்டில் 4 பேர் தூக்கில் தொங்கிய நிலை யில் சடலமாக மீட்கப்பட் டுள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அரியானா மாநிலம் பரி தாபாத் மாவட்டத்தில் சூரஜ் குந்த் தானா பகுதியில் உள்ள வீடு ஒன்றிலிருந்து துர்நாற்றம் வீசுவதாக பொலி ஸாருக்கு தகவல் கிடைத் தது.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் வீட்டை உடைத்துக் கொண்டு உள்ளே சென்று பார்த்தனர். அங்கு தனித்தனி அறை களில் 4 பேர் சடலமாக தூக்கில் தொங்குவதை பார் த்து அதிர்ச்சியடைந்துள் ளனர்.

இதனையடுத்து 4 பேரின் உடல்களையும் மீட்டு பிரேத் பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர்.

மேலும், இறந்த 4 பேர் பற்றி மேற்கொண்ட விசா ரணையில், மீனா (42), பீனா (40) ஜெயா (39) மற் றும் அவருடைய தம்பி பிர தீப் (37) என்பது தெரிய வந்தது.

அவர்களில் யாருக்கும் இதுவரை திருமணம் ஆக வில்லை. பக்கத்து வீட்டை சேர்ந்தவர்கள் யாருடனும் அவர்கள் பேசுவதை வழக் கமாக கொண்டிருந்த தில்லை.

அவர்களின் தந்தை கட ந்த ஆண்டு உயிரிழந்து விட்டார். அவரை தொடர் ந்து 5 மாதங்களுக்கு முன் னதாக தாயும் இறந்துள் ளார். உடல்களில் இருந்து துர்நாற்றம் வீசியதால், அவர்கள் இறந்து 3 முதல் 4 நாட்கள் ஆகியிருக்கலாம் எனப் பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

இறந்ததற்கான காரணம் இதுவரை அறியப்படாத நிலை யில், பணப் பிரச்சினை காரணமாக தற்கொலை முடிவை எடுத்திருப்பார்கள் எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (7)

# அணுவாயுத ஒப்பந்தத்தை மீறும் ரஷ்யாவுடன் இனியும் இணைந்திருக்கப் போவதில்லை

## -அமெ.ஜனாதிபதி ட்ரம்ப் திட்டவட்டம்-



(வோஷிங்டன்)

அணு ஆயுத ஒப்பந்த த்தை மீறிவரும் ரஷ்யா வுடன் இனியும் இணைந் திருப்பதில் அர்த்தமில்லை. அந்த ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா வெளியேறும் என டொனால்ட் ட்ரம்ப் தெரி வித்துள்ளார்.

அணு ஆயுத பரவலை குறைக்கும் வகையில் அதி பயங்கர பேரழிவை ஏற்ப டுத்தும் போர் ஆயுதங்களை இனி தயாரிப்பதில்லை என ரஷ்யாவும் - அமெரிக்கா வும் முன்னர் செய்து கொண்ட ஒப்பந்தம் நடை முறையில் உள்ளது.

1987 ஆம் ஆண்டு டிசெம் பர் மாதம் ரஷ்யாவும் முன் னாள் ஜனாதிபதி மிக்கயில் கார்பச்சேவ் - அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி றொனா ல்ட் ரீகன் ஆகியோர் ஏற்றுக் கொண்டு கையொப்பமிட்ட இந்த ஒப்பந்தம் அதன் பின் னர் பதவிக்கு வந்த இரு நாட்டு ஜனாதிபதிகளால் அடுத் தடுத்து பத்தாண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிக்கப்பட்டு வந்தது.

தரையில் இருந்தோ, கடலில் இருந்தோ 300 முதல் 3400 மைல் தூரம் வரை பாய்ந்து சென்று தாக் கும் அணு ஆயுத ஏவுகணை களை இருநாடுகளும் ஒழி க்க வேண்டும். இந்த ஒப்பந் தத்தின் முக்கிய அம்சமா கும்.

1980களில் அமெரிக்கா - ரஷ்யா இடையே ஆயுதப் போட்டிக்கான பனிப்போர் உச்சகட்டத்தில் இருந்த வேளையில் இந்த ஒப்பந் தத்தின் மூலம் ரஷ்யாவின் அருகாமையில் இருந்த வாறு அமெரிக்காவுடன் நட்பு பாராட்டும் சில நேச நாடுகளுக்கு ஓரளவு பாது காப்பு கிடைத்தது. இந்த ஒப்பந்தத்தை ரஷ்யா மீறி வருவதாக அமெரிக்க ஜனா திபதி டொனால்ட் ட்ரம்ப் தொடர்ந்து குற்றம்சாட்டி வந்துள்ளார்.

இந்நிலையில், அமெரிக் காவின் மேற்கு பகுதியில் உள்ள நிவேடா மாநிலத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண் டுள்ள ஜனதிபதி ட்ரம்ப், எல்க்கோ நகரில் செய்தி யாளர்களுக்கு பேட்டியளித் தார்.

அணு ஆயுத ஒப்பந்தத் தில் உள்ள நிபந்தனைக ளுக்கு ரஷ்யா கட்டுப்பட வில்லை. அவர்கள் பல ஆண்டுகளாக மீறி வந்துள் ளனர். இதுதொடர்பாக, முன் னாள் ஜனாதிபதி ஒபாமா ஏன் பேச்சுவார்த்தை நடத்தி வெளியேறவில்லை என்பது எனக்கு தெரியவில்லை.

எங்களுக்கு அனுமதி இல்லாத ஆயுதங்களை அவர் கள் தயாரிப்பதை இனியும் அனுமதிக்க முடியாது. எனவே, அந்த அணு ஆயுத ஒப்பந்தத்தை நாங்கள் ரத்து செய்யப் போகிறோம் என அவர் மேலும் தெரிவித் தார். (7)

## ஆப்கான் நாடாளும...

# வாக்குப்பதிவுகளின் ம...

# 140 பொது மக்கள்...



(காபூல்)

ஆப்கானிஸ்தானில் நடை பெற்று வரும் நாடாளுமன்றத் தேர் தலுக்கு மத்தியில் தலைநகர் காபூலில் பல வாக்குச்... தலிபான் ப... தாக்குதல்க... னோர் உயி...

249 உ... ஆப்கானிஸ்... தல் நேற்று... கம் நடை... அதிகமான... இந்த தேர்த... வாக்குச் சா...

நாடாளு... ணிக்க வே... தலிபான் ப... பல பகு...

# தென்னாபிரிக்காவில் ...

# 30 பேர் பரிதாபமாக...

(ஜோகனஸ்பேர்க்)

தென்னாபிரிக்காவில் டயர் வெடித்த லொறி நிலை குலைந்து ஓடி முன்னால் சென்ற வாகனங்களின் மீது மோதிய விபத்தில் 30பேர் பரிதாபமாக பலியாகினர்.

தென்னாபிரிக்காவின் தெற்கு பகுதியில் உள்ள லிம்போபோ மாகாணத்தில் லொறி ஒன்று சென்று கொண் டிருந்தது. அப்போது திடீரென லொறி டயர் வெடித்தது.

இதில் நிலைகுலைந்த லொறி முன்னால் சென்ற வாகனங்களின் மீது வேக



மாக மோதியது. இந்த விபத்தில் மினி பேருந்து, டா...

# ஜமாலின் உடலை எங்களிடம் ஒப்படையுங்கள்

## -நண்பர்கள் வேண்டுகோள்-

(இஸ்தான்புல்)

ஊடகவியலாளர் ஜமால் கஷோக்கி துருக்கியில் உள்ள தூதரகத்தில் கொல்லப்பட் டுள்ளதை சவுதி அரேபியா ஏற்றுக்கொண்டுள்ள நிலை யில் அவரது உடலை தங் களிடம் ஒப்படைக்குமாறு ஊடகவியலாளர் நண்பர்கள் வேண்டுகோள் விடுத்துள் ளனர்.

துருக்கி அரேபிய ஊடக ஸ்தாபனத்தின் நண்பரும் ஜமாலின் நண்பருமான டுரான் கிஸ்லசி கொல்லப் பட்ட ஊடகவியலாளரின் உடலை ஒப்படைக்குமாறு சவுதி அரேபியாவை கேட் டுக் கொண்டுள்ளார்.

ஜமாலை எங்களிடம் ஒப்படையுங்கள். நாங்கள் அவருக்கு இறுதிமரியாதை செலுத்தவேண்டும். இதன் மூலம் அவரை மதிப்பவர்களும் உலகத் தலைவர்களும் இறுதி மரி யாதை செலுத்துவதற்காக துருக்கிக்கு வர முடியும் என அவர் வேண்டு கோள் விடுத்துள்ளார்.

18 நாட்களிற்கு முன்னர் ஈவிரக் கமற்ற படுகொலையொன்று இடம் பெற்றுள்ளது. ஜமால் எவ்வித பாதிப் புமின்றி மீண்டும் எங்களிடம் வரு வார் என நாங்கள் எதிர்பார்த்தோம். எனினும் மூன்று நாட்களின் பின்னர் நாங்கள் நம்பிக்கை இழந்துவிட் டோம் என டுரான் கிஸ்லசி தெரிவித் துள்ளார்.

நாங்கள் ஜமால் விவகாரத்தில் நீதி வழங்கப்படவேண்டும் என எதிர் பார்க்கின்றோம், 18 சந்தேகநபர்கள் உள்ளனர் என தெரிவிப்பது மாத்திரம் போதுமானதல்ல. இந்த கொலைக் கான உத்தரவை வழங்கியவர்கள் யார் என்பதை அறிய விரும்புகின் றோம் எனவும் அவர் தெரிவித்துள் ளார். (7)

# முன்...

# 45...



(கோலா...

ஊழல் ...

முன்னாள் ...

ஜாகித் ஹமீ...

பரிமாற்ற ...

பல்வேறு ச...

# வெளிநாடு

## ...நமன்றத் தேர்தல்

## ... போது தாக்குதல்

## ...கள் உயிரிழப்பு

...ல வாக்குச் சாவடிகளை குறிவைத்து ...லிபான் பயங்கரவாதிகள் நடத்திய ...ாக்குதல்களில் 140 ற்கும் அதிகமா ...னோர் உயிரிழந்தனர்.

249 உறுப்பினர்களை கொண்ட ...ஆப்கானிஸ்தான் நாடாளுமன்ற தேர் ...ல் நேற்றுமுன்தினம் காலை தொடக் ...ம் நடைபெற்றது. 2500 க்கும் ...அதிகமான வேட்பாளர்கள் மோதும் ...இந்த தேர்தலில் சுமார் ஐயாயிரம் ...வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டன.

நாடாளுமன்ற தேர்தலை புறக்க...ணிக்க வேண்டும் என அறிவித்துள்ள ...லிபான் பயங்கரவாதிகள். நாட்டின் ...ல பகுதிகளில் வன்முறை வெறியாட்டங்களில் ஈடுபட்டனா்.

கடந்த சில நாட்களில் இவர்கள்நடத்தியதற்கொலைப் படை தாக்குதல்களில் பத்துக்கும் அதிகமான வேட்பாளர்களும் நூற்றுக்கணக்கான பொதுமக்களும் உயிரிழந்ததோடு ஆயிரத்துக்கும் அதிகமானோர் காயமடைந்தனர். நேற்று முன்தினம் வாக்குச் சாவடிகளை குறிவைத்து பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 140 பேர் உயிரிழந்தனர். (7)

## ...ல் கோர விபத்து!

## ...ாக உயிரிழப்பு



...பருந்து, டாக்சி மற்றும் சில வாகனங்களில் சென்றவர்கள் விபத்தில் சிக்கினர். இந்த விபத்தில் 30 பேர் பரிதாபமாக பலியாகினர் எனவும், மேலும் 4 பேர் படுகாயம் அடைந்துள்ளனர் என போக்குவரத்து பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தகவலறிந்து அங்கு சென்ற பொலிஸார் விபத்து நடந்த இடத்துக்கு சென்று போக்குவரத்தை சீரமைத்தனர். வீதி விபத்தில் சிக்கி பலியானது அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (7)

## ஊடகவியலாளர் கொலை

## சவுதியின் நியாயப்படுத்தல் வேடிக்கையானது; சர்வதேசம் ஏற்காது

### நியூயோர்க் அரசியல் ஆய்வாளர் நஸீர் தெரிவிப்பு

(நியூயோர்க்)

ஊடகவியலாளர் ஜமால் கஷோக்கியின் கொலை தொடர்பில் சவுதி அரேபியா முன்வைத்துள்ள காரணங்களை சர்வதேசம் ஏற்றுக் கொள்ளாதென நியூயோர்க்கின் பிரபல அரசியல் ஆய்வாளரான நஸீர் அல் ஓமாரி தெரிவித்துள்ளார்.

பிரஸ் தொலைக்காட்சிக்கு நேற்று முன்தினம் சனிக்கிழமை வழங்கியுள்ள செவ்வியில் அவர் இவ்விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இஸ்தான்புல்லிலுள்ள சவுதி தூதரகத்திற்குள் இடம்பெற்ற மோதலில் ஜமால் கஷோக்கி உயிரிழந்ததாக 17 நாட்களுக்கு பின்னர் சவுதி குறிப்பிட்டுள்ளது. இந்நிலையில் சவுதியின் நியாயப்படுத்தல் வேடிக்கையானதென குறிப்பிட்டுள்ள நஸீர் அல் ஓமாரி, அமெரிக்க காங்கிரஸ் ஏற்கனவே இந்த காரணத்தை நிராகரித்துவிட்டதெனக் குறிப்பிட்டுள்ளார்.

கொல்லப்பட்ட கஷோக்கியின் உடல் துண்டாடப்பட்டதாக துருக்கி குறிப்பிட்டிருந்த நிலையில், அவ்வாறு துண்டாடப்பட வேண்டியதன் காரணம் என்னவென்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

சவுதி அரசாங்கத்திற்கு சிம்ம சொப்பனமாக விளங்கிய சிரேஷ்ட ஊடகவியலாளர் ஜமால் கஷோக்கி, கடந்த 2 ஆம் திகதி இஸ்தான்புல்லிலுள்ள சவுதி தூதரகத்திற்குச் சென்ற பின்னர் காணாமல் போனார். இவ்விடயம் துருக்கி அரசாங்கத்திற்கு தெரியப்படுத்தப்பட்டதன் பின்னர் தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னர் இஸ்தான்புல் தூதரகத்தில் தேடுதல் நடத்திய துருக்கி அதிகாரிகள், ஜமால் கஷோக்கி தூதரகத்திற்குள்ளேயே கொல்லப்பட்டு தடயங்கள் அழிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டிருந்தனர். கொலை தொடர்பான ஓடியோ ஆதாரங்கள் கிடைக்கப்பெற்றதாகவும் குறிப்பிட்டிருந்தனர்.

அதுவரை ஜமால் கஷோக்கி தொடர்பான குற்றச்சாட்டுக்களை மறுத்துவந்த சவுதி, பின்னர் அதனை நியாயப்படுத்த முனைவதாக சீ.என்.என். செய்தி வெளியிட்டிருந்தது. குறித்த தகவலை நிரூபிக்கும் வகையில், கஷோக்கி கொல்லப்பட்டதை கடந்த 19 ஆம் திகதி ஏற்றுக்கொண்ட சவுதி, அதற்குக் காரணத்தையும் முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இக்கொலையின் பின்னணியில் சவுதி செயற்பட்டிருந்தால் தகுந்த தண்டனை வழங்கப்படுமென அமெரிக்கா குறிப்பிட்டிருந்தது. எனினும், எவ்வித அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்ள தயாரென சவுதி கூறியிருந்தது.

இவை ஒருபுறமிருக்க, சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாடு இம்மாத இறுதியில் சவுதியில் இடம்பெறவுள்ளது. ஜமால்கஷோக்கி காணாமல் போனதன் பின்னணியில் ஏற்கனவே இந்த மாநாட்டை பிரபல முதலீட்டு நிறுவனங்களும் ஊடக நிறுவனங்களும் புறக்கணித்திருந்தன. தற்போது அவர் கொல்லப்பட்டமை உறுதியாகியுள்ளது. அதற்கு சவுதி காரணமாகியுள்ள நிலையில், அதன் விளைவுகள் தொடர்பாக உலக நாடுகள் கரிசனை கொண்டுள்ளன. (7)

## அமெ.ஜனாதிபதியின் உயரிய விருது பெற்ற இந்திய-அமெரிக்கப் பெண்



(வோஷிங்டன்)

அமெரிக்காவில் சட்ட மீறலான ஆள் கடத்தலை தடுத்து நிறுத்த சேவையாற்றிய இந்திய - அமெரிக்க பெண்ணான மினால் பட்டேல் டேவிஸ் அமெரிக்க ஜனாதிபதியின் உயரிய விருதைப் பெற்றார்.

அமெரிக்காவின் நான்காவது பெரிய நகரமான ஹூஸ்டன் நகரில் இருந்து வெளிநாடுகளுக்கு சிறுமிகள், பெண்கள் உட்பட சட்டமீறலாக நடந்துவரும் ஆள் கடத்தலை தடுக்க அந்நகர மேயர் தலைமையில் தனி குழுவினர் நியமிக்கப்பட்டனர்.

இந்தக் குழுவில் அமெரிக்காவில் வாழும் இந்திய வம்சாவளி பெண்ணான மினால் பட்டேல் டேவிஸ் என்பவர் கடந்த 2015 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்டார். ஆள் கடத்தலைத் தடுப்பது தொடர்பாக சர்வதேச அளவில் பல்வேறு கருத்தரங்கங்களில் உரையாற்றியுள்ள மினால் பட்டேல் டேவிஸ், தனது துறையில் ஆற்றிய சேவைக்காக அமெரிக்க ஜனாதிபதியின் உயரிய விருதுக்கு தேர்வு செய்யப்பட்டார்.

வோஷிங்டன் நகரில் உள்ள வெள்ளை மாளிகையில் அண்மையில் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் மைக் போம்பியோ அவருக்கு இந்த விருதினை அளித்தார்.

இந்திய வம்சாவளியை சேர்ந்த நான் ஹூஸ்டன் நகர மேயர் அலுவலகத்துக்கு செல்வேன். பெருமைக்குரிய இந்த வெள்ளை மாளிகைக்குள் நுழைவேன் என்று முன்னர் ஒருபோதும் எண்ணிப் பார்த்ததுகூட இல்லை என விருது வழங்கும் விழாவில் பேசிய மினால் பட்டேல் டேவிஸ் நெகிழ்ச்சியுடன் தெரிவித்தார். (7)

## ஊழல் வழக்கில் கைதான

## ...முன்னாள் துணைப்பிரதமர் மீது 45 குற்றச்சாட்டுகள் பதிவு!



(கோலாலம்பூர்)

ஊழல் வழக்கில் சிக்கிய மலேசிய ...முன்னாள் துணைப்பிரதமர் அகமது ...ஜாகித் ஹமீதி மீது சட்டவிரோத பண...ப்பரிமாற்ற தடைச்சட்டம் உள்ளிட்ட ...பல்வேறு சட்டப்பிரிவுகளின்கீழ் 45 ஊழல் குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டன.

மலேசியாவில் முன்னாள் பிரதமர் நஜிப் ரசாக் அரசில் துணைப் பிரதமர் பதவி வகித்தவர், அகமது ஜாகித் ஹமீதி. இவர் ஊழல் வழக்கில் சிக்கி உள்ளார்.

இவர் மீது சட்டவிரோத பணப்பரிமாற்ற தடைச்சட்டத்தின் கீழும் புகார் எழுந்துள்ளது. இந்த நிலையில் கடந்த 18 ஆம் திகதி அவர் கைது செய்யப்பட்டார்.

விசாரணைக்கு பின்னர் கடந்த 19 ஆம் திகதி அவர் கோலாலம்பூர் செசன்ஸ் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

விசாரணையின்போது அகமது ஜாகித் ஹமீதி மீது சட்டவிரோத பணப்பரிமாற்ற தடைச்சட்டம் உள்ளிட்ட பல்வேறு சட்டப்பிரிவுகளின் கீழ் 45 ஊழல்குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டன. (7)

## ரஷ்யாவிடம் ஏவுகணை வாங்கும் முடிவு தெற்கு ஆசியாவை சீர்குலைக்கும்

### இந்தியா மீது பாகிஸ்தான் குற்றச்சாட்டு

(இஸ்லாமாபாத்)

ரஷ்யாவிடமிருந்து ஏவுகணை வாங்கும் இந்தியாவின் முடிவு தெற்கு ஆசியாவை சீர்குலைக்கும் என்று பாகிஸ்தான் குற்றம் சாட்டி உள்ளது.

நாட்டின் வான்பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் ரஷ்யாவிடம் இருந்து எஸ்-400 ஏவுகணை அமைப்பை இந்தியா வாங்குகிறது. இதனால் அதிர்ச்சியில் உறைந்து போய் இருக்கும் பாகிஸ்தான் தற்போது வெளிப்படையாக குற்றம் சாட்டியிருக்கிறது. ரஷ்யாவிடம் இருந்து எஸ்-400 ரக ஏவுகணை வாங்கும் இந்தியாவின் முடிவு, தெற்கு ஆசியாவை சீர்குலைக்கும் என்றும், மீண்டும் ஆயுதப் போட்டிக்கு வழிவகுக்கும் எனவும் கூறியுள்ளது.

இது குறித்து அந்த நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'கடந்த 1998 இல் இரு நாடுகளும் அணுகுண்டு சோதனை நடத்தியதைத் தொடர்ந்து, இந்த பிராந்தியத்தில் கட்டுப்பாட்டை கடைப்பிடிக்க வேண்டும் என்ற பரிந்துரையை பாகிஸ்தான் வைத்ததுடன், கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை அமைப்பை வாங்கும் இந்தியாவின் முடிவுக்கும் எதிர்ப்பு தெரிவித்தது.

ஆனால் இந்த பரிந்துரை நிராகரிக்கப்பட்டதால் எந்தவகையான ஏவுகணைகளையும் செயலிழக்க செய்யும் வலிமையை அடைவதற்கு பாகிஸ்தான் தள்ளப்பட்டது' என்று கூறப்பட்டுள்ளது.

மேலும், இந்த பிராந்தியத்தை சீர்குலைக்கும் எந்த வகையான ஆயுதங்களையும் எதிர்க்கும் வலிமை தங்களுக்கு இருப்பதாக பாகிஸ்தான் தொடர்ந்து நம்புவதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டு இருந்தது. (7)

# ஜனாதிபதி மைத்திரியைக் கொல்ல சதி றோவுடன் அமைச்சர்களுக்குத் தொடர்பு!

## அமைச்சர் அமரவீர பரபரப்பு தகவல்

(கொழும்பு)

இந்தியாவின் உளவுத் துறையான "றோ" அமைப்புடன் தொடர்புடைய இரு அமைச்சர்களே ஜனாதிபதி தொடர்பான பொய்யான தகவல்களை அமைச்சரவையிலிருந்து வழங்கியுள்ளதாகவும், அவர்கள் தொடர்பான பெயர்களை மிக விரைவில் வெளிப்படுத்தவுள்ளதாகவும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடந்த பொதுக் கூட்டமொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார்.



அமைச்சரவையில் பேசியதாக பொய்யான தகவல் வழங்கிய அமைச்சர்கள் நான்கு பேரில் இருவர் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர்களின் பெயர்களை விரைவில் வெளியிடவுள்ளதாகவும் அமைச்சர் அமரவீர தெரிவித்தார்.

இந்த இருவர் தொடர்பிலும் ஜனாதிபதியும், பிரதமரும் தீர்க்கமான முடிவொன்றை எடுக்க வேண்டும் எனவும் அமைச்சர் தெரிவித்தார். (இ-7)

# மாளிகாவத்தையில் துப்பாக்கிச் சூடு! மீண்டும் குறி வைக்கப்பட்ட இளைஞன்

(மாளிகாவத்தை)

மாளிகாவத்தை - ஜும்மா மஸ்ஜித் வீதியில் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் இரு துப்பாக்கி தாரிகள் மேற்கொண்ட துப்பாக்கி பிரயோகத்தில் இளைஞர் ஒருவர் காயமடைந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். 24 வயது இளைஞனே துப்பாக்கிச் சூட்டிற்கிலக்காகி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மாளிகாவத்தை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த இளைஞன் மீது கடந்த செப்டெம்பர் மாதம் 12ஆம் திகதி மாளிகாவத்தை "லக் செத செவன" குடியிருப்புக்கருகில் வைத்து துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டமையால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு குணமடைந்து வந்த நிலையிலேயே நேற்று முன்தினம் மீண்டும் குறி வைக்கப்பட்டுள்ளார். (இ-7)

# ஆளுநருக்கு தனித்து செயற்படும் அதிகாரம் இல்லை-முதலமைச்சர்

(கொழும்பு)

மாகாண ஆளுநருக்கு தனித்து செயற்படும் அதிகாரம் இல்லை என மேல் மாகாண முதலமைச்சர் இசுறு தேவப்பிரிய தெரிவித்துள்ளார். மேல் மாகாண சபைக்கான ஆசனங்கள் மற்றும் வளி தூய்மையாக்கி இயந்திரம் என்பன தொடர்பில் அண்மையில் கருத்து வெளியிட்ட மேல்மாகாண ஆளுநர், குறித்த சொகுசு ஆசனங்களைக் கொள்வனவு செய்ய தாம் தடை விதித்துள்ளதாக தெரிவித்திருந்தார்.



இந்நிலையில் இது தொடர்பில் கொழும்பில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதில் வழங்கிய போதே இசுறு தேவப்பிரிய மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்ட மேல்மாகாண முதலமைச்சர் இசுறு தேவப்பிரிய, "ஆளுநர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுவதற்கு முன்னர் என்னுடனும், அமைச்சரவையுடனும் கலந்துரையாட வேண்டும்.

அரசியலமைப்புக்கு அமைய ஆளுநர், முதலமைச்சருடன் கலந்துரையாடி செயற்பட வேண்டும்" எனத் தெரிவித்துள்ளார். (இ-7)

# சிங்கள தேசிய கீதத்தால் தமிழ் முதல்வர் கவலை

(கொழும்பு)

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற வீட்டுத்திட்ட திறப்பு விழாவில் சிங்கள மொழியில் தேசிய கீதம் பாடப்பட்டமைக்கு மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தி.சரவணபவன் தனது கவலையினை தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் காலை நடைபெற்ற வீடமைப்புத் திட்ட ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த ஆட்சிக்காலத்திலேயே தமிழ் மொழியில் தேசியக் கீதம் பாடமுடியாத நிலையிருந்ததாகவும் ஆனால் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து மேற்கொண்டுள்ள இந்த நல்லாட்சியிலும் தேசிய கீதம் தமிழர்கள் வாழும் பகுதியில் சிங்கள மொழியில் மட்டும் பாடப்பட்டது கவலைக்குரிய விடயம் எனவும் முதல்வர் தெரிவித்தார். (இ-7)

# பிரதமர் நாடு திரும்பினார்



(கொழும்பு)

இந்தியாவுக்கான இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை முடித்துக் கொண்டு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் இரவு நாடு திரும்பியுள்ளார்.

டில்லி விமான நிலையத்திலிருந்து யு.எல். 196 ஆம் இலக்க விமானத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்தை பிரதமர் தலைமையிலான குழுவினர் வந்தடைந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

## பிரதிபலிப்பது உண்டா?

உங்களைத் தேடி வேண்டியவர்கள் யாரோ வந்தார்கள், அல்லது போன் செய்தார்கள். நீங்கள் வீட்டில் இல்லை. வெளியே ஒரு வேலையாய்ப் போயிருந்தீர்கள். வீட்டில் இருந்தவர்கள் நீங்கள் வெளியே போயிருப்பதாகச் சொல்லித் திருப்பி அனுப்பி விட்டார்கள். நீங்கள் நுழைந்ததும் இன்னார் வந்தார்கள் என்கிறார்கள். எதற்காக அவர் வந்திருப்பார் என்று ஒரு கணம் யோசிக்கிறீர்கள். இதற்காகத் தான் வந்திருப்பார் என ஊகிக்கிறீர்கள் அல்லது காரணம் புரியவில்லை.

முதல்கட்டமாக, அவராக மீண்டும் வரட்டும் அல்லது போன் செய்யட்டும் என விட்டுவிடுவீர்களா? அல்லது அவரைத் தேடிப் போவீர்களா அல்லது போனில் பேசுவீர்களா?

தேடிப்போவேன்; பேசுவேன், தொலை தூரம் என்றால் என்ன ஏது என்று கேட்டுக் கடிதம் போடுவேன் என்பது பதிலாக இருந்தால் அது தான் உயரும் வழி; பலரும் விரும்பும் முறை. எல்லாவற்றிற்கும் மேலாக உயரிய பண்பும் மனிதத் தன்மையும் கூட.

அவனுக்கு/அவளுக்குக் காரியம் என்றால் மீண்டும் வரட்டுமே! நாம் ஏன் தேடிப்போய் வலையில் சிக்க வேண்டும் என்பது எடுபடாத வாதம்.

நாமே தேடிப் போகும் போது நம் பக்கம் பலம் அதிகம். அப்படியே அவர்கள் உதவி கேட்டாலும் மறுக்க நேர்ந்தால் அவ்வளவு தவறாகத் தெரியாது. காரணம், உதவ எண்ணம் இருந்தும் இயலாத சூழ்நிலை போலும் என்பதாக அவர்கள் நம்புவார்கள்.

நாம் கிணற்றில் எறிந்த கல்லாக இருந்து விட்டு மீண்டும் அவர்களைத் தேடி வரும் போது மறுக்க நேர்ந்தால், இவருக்கு உதவும் எண்ணம் கொஞ்சம் கூட இல்லை என்பதாக எண்ணுவார்கள்.

இங்கே ஒரு மனோதத்துவமும் உண்டு. உதவி மறுப்பை அவர்கள் வீட்டிற்குப் போய் அல்லது நாமாகப் போன் செய்து சொன்னால் அது அவர்களை– குறிப்பாக –நல்லுறவைப் பாதிப்பதில்லை. ஆனால், நம் சூழ்நிலையில் அல்லது அவர்கள் போன் செய்யும் போது நாம் மறுத்தால் அது அவர்களை வெகுவாகப் பாதிக்கும்.

ஒருவேளை, தேடிவந்தவர்கள் நமக்குச் சாதகம் செய்ய வந்திருந்து, நாம் பிரதிபலிக்கா விட்டால் நாம் தான் நல்ல வாய்ப்புகளை இழந்தவர்கள் ஆகிறோம்.

தேடி வந்தீர்களாமே, என்ன விடயம்? போன் செய்தீர்களாமே என்ன விடயம்? என்று நாம் கேட்க ஆரம்பித்துவிட்டால் நம் வட்டத்தில் நாம் இத்தகையதொரு நல்ல பழக்கத்தை விதைத்தவர்களாவோம்.

மற்றவர்கள் விடயத்தில் அவர்கள் வேறு விதமாக நடந்து கொண்டாலும், நம் விடயத்தில் அவர்கள் வித்தியாசமாக நடந்து கொள்வார்கள்.

எனக்குத் தெரிந்து என் எண்ணற்ற நண்பர்களுள் இரண்டு பேரிடம் மட்டுமே இந்தப் பண்பு இருக்கிறது. இத்தகைய பண்பு உள்ளவர்கள் அனைவரின் அன்புக்கும் பாத்திரமானவர்கள் என்பதற்காகவே இதைக் குறிப்பிடுகிறேன்.

அப்படிச் செய்வதைவிட்டுவிட்டு மீண்டும் அவர்களைத் தற்செயலாகச் சந்திக்கும் நேரத்தில் அவர்களாக நினைவூட்டும் நேரத்தில் ஆமாம் ஆமாம் சொன்னவர்கள் என்ன விடயம்? என்று கேட்பதைக் காட்டிலும் கண்ணியக் குறைவான செயல் வேறு இல்லை.

நாம் பிரதிபலிக்கும் பட்சத்தில்


நாம் மற்றவர்களை மதிக்கிறோம், அன்பு செலுத்துகிறோம் என்றெல்லாம் நம்மைப்பற்றி நல்ல அபிப்பிராயம் ஏற்படும் வாய்ப்புகள் உருவாகின்றன.

நம்மைப்பற்றி நல்லபிப்பிராயத்தை ஏற்படுத்த இதைவிட வேறு எளிய வழி இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

**லேனா தமிழ்வாணன்**

# குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த பாதுகாப்பு அதிகாரிகளுக்கு சிவில் உடை

## அமைச்சர் நிமால் ஆலோசனை



(கொழும்பு)

புகையிரத பாதுகாப்பு அதிகாரிகளை, சிவில் உடையில் சேவையில் ஈடுபடுமாறு, போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா ஆலோசனை வழங்கியுள்ளார்.

பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் புகையிரத சேவையின் தரத்தை அதிகரிக்கும் நோக்கிலேயே, இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

புகையிரத பாதுகாப்பு அதிகாரிகள் சிவில் உடையில் சேவையில் ஈடுபடும்போது, அநேகமான குற்றச் செயல்கள் அடையாளம் காணப்படுவதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

முப்பது வருடங்களுக்கும் மேலாக, பல்வேறு காரணங்களால் பதவியுயர்வுகளைப் பெறாத புகையிரத பாதுகாப்பு அதிகாரிகள் 284 பேருக்கு, சார்ஜன்களாக பதவியுயர்வுகள் வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டபோதே, போக்குவரத்து அமைச்சர் நிமால்சிறிபால டி சில்வா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (இ-7)

## சாதனையாளர் கௌரவிப்பு



(கரணவாய்)

வடமராட்சி கல்வி வலயத்தின் சாதனையாளர் கௌரவிப்பு விழாவில் புலமைப் பரிசில் பரீட்சையில் வடமராட்சி வலயத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் பரிசு வழங்கியதுடன் வாழ்த்து மடலினையும் வழங்கினார்.

வடமராட்சி கல்வி வலயத்தின் சாதனையாளர் கௌரவிப்பு விழா நேற்று ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி மண்டபத்தில் வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சி. நந்தகுமார் தலைமையில் நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தனது சார்பில்வாழ்த்து மடலினை வழங்கிக் கௌரவித்தார். (இ-60)

# ஆட்டோவில் கடத்தப்பட்ட 11 கிலோ மாவா பறிமுதல்



(கரணவாய்)

வடமாகாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கணேசநாதனுக்கு கிடைத்த இரகசியதகவலுக்கு அமைவாக தெல்லிப்பழை பகுதியில் 11 கிலோகிராம் மாவாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

உப பொலிஸ் பரிசோதகர் உதயாளந்தலைமையிலான பொலிஸ் அதிகாரிகள் ஆட்டோவில் மாவாவுடன் சென்ற யாழ்ப்பாணத்தை சேர்ந்த நபர் ஒருவரை கைது செய்ததுடன் ஆட்டோவையும் சந்தேக நபரையும் நேற்று காங்கேசன்துறை பொலிஸாரிடம் பாரப்படுத்தியுள்ளனர். மேலதிக விசாரணை காங்கேசன்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-60)

# அரசியல் கைதிகளின் விடுதலை உடன் உறுதி செய்யப்பட வேண்டும்

## சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

நீண்ட காலமாகச் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் பிரச்சினைக்கு இம்முறை தீர்வு காணப்படவேண்டும் எனச் சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு கேட்டுக்கொள்கின்றது என அவ் அமைப்பின் தலைவர் க. ஆனந்தக்குமாரசுவாமி, இணைச் செயலாளர்கள் ச. தனுஜன், அ. சீவரத்தினம் ஆகியோரால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அவ் அறிக்கையில், அரசியல் கைதிகளும், அவர்களுடைய உறவினரும், பொதுமக்களும் தொடர்ச்சியாக முன்னெடுத்த போராட்டங்களின் காரணமாக இன்று அரசியல்கைதிகளின் விடுதலை தொடர்பாகப் பேசுவதற்கு இலங்கை அரசாங்கம் முன்வந்துள்ளது.

இப் பேச்சுவார்த்தைகளை வெற்றிகரமாக முன்னெடுக்க குறுகிய தேர்தல் அரசியல் நோக்கங்களைத் தாண்டி மனிதநேயமுள்ள அனைவரும் பாடுபட வேண்டும்.

தொடர்ச்சியான உண்ணாவிரதப் போராட்டங்களின் காரணமாக, உடல் ரீதியாகவும், மனரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் விடுதலை கிடைத்தாலும் ஆரோக்கியமாக வாழமுடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்படுவதற்கு முன்னர் காப்பாற்றப்பட வேண்டும். அவ் அபாயம் தவிர்க்கப்படுவதற்கு, அவர்கள்இன்னொரு தடவை உண்ணாவிரதம் இருக்கும் நிலை ஏற்படாது இருக்க அனைவரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

எனவே, அரசியல் கைதிகளின் விடயமானது சட்ட ரீதியானதாக அன்றி, அரசியல் விவகாரமாக நோக்கப்பட்டு, கடந்த காலங்களில் இடம் பெற்றதுபோல், அரசியல் தீர்மானத்தின் மூலம் விரைந்து தீர்வு காணப்படவேண்டும். அனைவரும்நிபந்தனை அற்ற வகையில் உடன் விடுதலை செய்யப்படவேண்டும்.

ஆகவே, அரசியல் கைதிகளின் விடுதலைக்காய் அனைவரும் அணிதிரள்வோம். இறுதியான தீர்வொன்றுக்காய்குரல் கொடுப்போம் என சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு அறைகூவல் விடுக்கின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# மத்திய கிழக்கிலுள்ள மதுஷுக்கு பொலிஸ் இரகசிய தகவல்கள் கசிந்தது எவ்வாறு?

## பொலிஸார் விசாரணை

(கொழும்பு)

மத்திய கிழக்கிலிருந்து பாதாள உலக குழுவை வழிநடத்தும் மாகந்துரே மதுஷின் சகா ஒருவர் பொலிஸாருக்கு வெளிப்படுத்திய இரகசிய தகவல்கள் பல மதுஷ்க்கு அறியக்கிடைத்தமை தொடர்பில் பொலிஸ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மதுஷின் சகா ஒருவரிடம் விசாரணை நடத்திய பொலிஸ் உத்தியோகத்தர் தொடர்பிலும் மதுஷ்க்கு தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கொலைச் சதி முயற்சி தொடர்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ள முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக சில்வாவுக்கு மதுஷ்டன் தொடர்பு இருக்கின்றதா? என புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட விசாரணையின்போது அவர் அதனை முற்றாக மறுத்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

# தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆதரவு தெரிவித்து ஆர்ப்பாட்டம்








(ஏறாவூர்)

மலையக தோட்டத்தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்கக் கோரி மட்டக்களப்பு காந்திபூங்கா முன்பாக இளைஞர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் இணைந்துபோராட்டம்ஒன்றை நேற்று முன்னெடுத்துள்ளனர்.

மலையக தோட்டத்தொழிலாளர்களின் சம்பள உயர்வுக்கோரிகையை வலியுறுத்தி பல்வேறு போராட்டங்கள் நடைபெற்றுவரும் நிலையில் அவர்களுக்கு ஆதரவாகவே இந்த ஆர்ப்பாட்டம் கிழக்கில்முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள், மழையிலும் வெயிலிலும் பாடுபட்டு இந்த நாட்டின் பொருளாதாரத்திற்கு வலுசேர்க்கும் மலைய மக்களின் நியாயமான கோரிக்கையை நிறைவேற்ற நல்லாட்சி அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பல்வேறு கோரிக்கைகளை விடுத்தனர். (இ-7)

# பதுளையில் வீதியோரத்திலிருந்து பெருமளவு பாம்பு முட்டைகள் மீட்பு



(பதுளை)

பதுளையில் வீதி ஓரத்தில் பெருந்தொகை பாம்பு முட்டைகள் மீட்கப்பட்டுள்ளன.

பதுளை கோட்டகொட பிரதேசத்தில் வீதி அபிவிருத்தி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சிலர் இந்த பாம்பு முட்டைகளை பார்த்து அதிர்ச்சியடைந்துள்ளனர்.

குறித்த இடத்தில் நாக பாம்பு ஒன்று சுற்றி திரிவதாக அந்த பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

அதற்கமைய இந்த முட்டைகள் அந்த நாக பாம்பினதாக இருக்கலாம் என மக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இந்த முட்டைகளிலிருந்து பாம்பு குட்டிகள் முண்டுவதனை அவதானிக்க முடிவதாக அந்த மக்கள் குறிப்பிட்டுள்ளனர். (இ-7)

# சீனாவின் நீர்மூழ்கி, யுத்தக் கப்பல்களை கண்காணிக்க அமெரிக்காவின் ரேடார்

(அம்பாந்தோட்டை)

அம்பாந்தோட்டை துறைமுகம் உட்பட இலங்கை கடல் பிரதேசங்களுக்குள் சீனாவின் நீர்மூழ்கிக் கப்பல் மற்றும் யுத்தக் கப்பல்கள் பிரவேசிக்கின்றதா என்பதை கண்காணிப்புச் செய்ய 39 மில்லியன் டொலர் பெறுமதியான கடல் கண்காணிப்பு "ரேடார்" உபகரணமொன்றை இலங்கை அரசுக்கு வழங்க அமெரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அண்மையில் இலங்கைக்கு வருகை தந்த உதவி அமெரிக்க இராஜாங்க செயலாளர் அலிஸ் வேல்ஸ் இலங்கை அரச அதிகாரிகளிடம் இதனை அறிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை துறைமுகம் சீன இராணுவம் மற்றும் கடற்படை என்பவற்றின் முகாமாக அமையப் பெற்றுள்ளதாகவும், அமெரிக்க புலனாய்வுத் துறை மூலம் தமக்கு தகவல் கிடைத்துள்ளதாகவும் அமெரிக்க உப ஜனாதிபதி மைக் ஸ்பென்சர் வோஷிங்டனில் அண்மையில் தெரிவித்துள்ளதாகவும் இராஜாங்க செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# ஹெரோயினுடன் ஒருவர் கைது

(திஸ்ஸமஹராம)

திஸ்ஸமஹராம, அகுருகொட பகுதியில் ஹெரோயினுடன் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கதிர்காமம் பொலிஸ் விஷேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போதே குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் 100 மில்லி கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட நபரை மேலதிக விசாரணைகளுக்காக திஸ்ஸமஹாராம பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டில் அண்மைக்காலமாக போதைப் பொருட்களுடன் பலர் கைது செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்

## பிறப்பு எண் 8 விதி எண் 2


சனி, சந்திரன் ஆதிக்கத்தில் பிறந்த இவர்கள் அன்பானவர்கள். இரட்டை மனமுடையவர்கள். பலர் உயரமாகவும், சிலர் குள்ளமாகவும் இருப்பார்கள். முகம் பார்க்கக் கவர்ச்சியாகக் காட்சியளிக்கும். பிடிவாதக் குணம் கொண்ட இவர்களுக்கு உடல் வலிமையுடனும், உள்ளம் குழப்பத்துடனும் அமைந்துவிடும். சிலநேரங்களில் தன்னம்பிக்கை இழந்து கலங்குவார்கள். எதற்கும் தெய்வத்தின் துணையை நாடுவார்கள். 2உம் 8உம் சேர்ந்து புத்தியை விருத்தி செய்து விடும். பல இன்னல்களுக்கு ஆளாக்கும். பிறருக்குத் தீமை செய்யும் எண்ணமில்லாத இவர்கள் எக்காரியத்தையும் தன்னுடைய நேரடிப் பார்வையிலேயே நடக்க வேண்டுமென்று எண்ணுவார்கள். கலைகளால் மிகவும் அதிகம் கவரப்படுவார்கள். கதை, கட்டுரை, கவிதை எழுதுவதால் புகழ் அடைவார்கள். நடிக்கவும் செய்வார்கள். நடிப்புதான் வாழ்க்கை என்று வேதாந்தம் பேசுவார்கள்.

கடவுள் மீதும், சத்தியத்தின் மீதும் நம்பிக்கை அதிகம் உடையவர்கள். மறைபொருள் இரகசியத்தை அறிய முற்படுவார்கள். மிக அதிகமான புத்தக விருப்பமுடையவர்கள். எந்நேரமும் சுறுசுறுப்பாக இயங்கக் கூடியவர்கள். அதிகமான ஞாபக சக்தி உடையவர்கள். எழுத்தாளர் என்று பெயரெடுப்பார்கள். எந்த நிகழ்ச்சிக்கும் தலைமை தாங்குவார்கள். ஒரு செயலில் இறங்கினால் அதை பூரணமாக முடித்தே தீருவார்கள். மிகப்பெரிய பதவிகள் கிடைத்தாலும் பொறுப்புகள் அதிகம் இருக்கும். அடிக்கடி மனதில் சந்தேகமும், குழப்பமும் தோன்றி மறையும். பலர் போலியான கௌரவத்துடன் வாழ்க்கை நடத்துகின்றனர். இளமை முதலே நல்ல பழக்கவழக்கத்துடன் வளர்க்க வேண்டும். இவர்களின் திறமையை சமூகம் பயன்படுத்திக் கொள்ளும்.

தீய எண்ணங்கள் இவர்களைப் பெரிதும் கவரும் திறமைக்கேற்ற பலன் கிடைக்காது. இவர்கள் அவ்வப்போது அதீதமான கற்பனைகளில் மிதப்பார்கள். எதிலும் நிலையிருக்காது. பணம் இருந்தால் கொண்டாடும் இவர்கள் பணம் இல்லையென்றால் மிகவும் நொந்துபோவார்கள். மிகவும் தாராளமாகச் செலவுகளும் செய்வார்கள். பணம் இல்லையென்றால் மற்றவர்கள் தம்மை மதிக்க மாட்டார்கள் என்று எண்ணுவார்கள். இவர்களுடன் பழகுபவர்கள் இவர்களை விரைவில் அடையாளம் கண்டு கொள்வார்கள். இவர்கள் மற்றவர்களை சதா வெற்றுப்புகழ்ச்சி மூலம் கவர முற்படுவார்கள். ஆன்மீக நாட்டம் அதிகம் இருக்கும். சிறு குழப்பம் வந்தாலும் மிகவும் வேதனைப்படுவார்கள். பைத்தியம் பிடித்தவர்கள் போல மாறிவிடுவார்கள். காரியம் ஆகும் வரை மற்றவரைப் போற்றிவிட்டு காரியம் ஆனவுடன் எல்லாம் தெய்வச் செயல் என்று கூறுவார்கள். தனது சுய நலத்திற்காக எப்பேர்ப்பட்ட நடிப்பையும் நடிக்கத் தயங்க மாட்டார்கள். சமுதாய நலனுக்காகவே தாம் பாடுபடுவதாகக் கூறுவார்கள். பதவிகள் கிடைத்தால் வெறுப்பது போலக் காட்டிக் கொள்ளும் இவர்கள் உண்மையில் அனைத்திலும் தலைமைப் பொறுப்பை எதிர்பார்க்கக் கூடியவர்கள். வெற்றி பெறும் போது இருந்த திடசித்தம் தோல்வியடையும் போது முற்றிலும் குலைந்து போகும். இவர்கள் தனக்கு வரும் துன்பங்களுக்கு முன்ஜென்ம கர்மாவை காரணம் கூறுவார்கள். பரிகாரம், பூஜைகள், மகான்கள் என்று தேடிச் செல்வார்கள்.

தெய்வீகப் பிரயாணங்கள் அடிக்கடி செல்வார்கள். இல்லற வாழ்க்கை இவர்களின் குழப்பப் புத்தியால் எப்போதும் சண்டைக்களமாகவே இருக்கும். அமைதி என்பது அரிதாகிவிடும். எதிலும் பலனில்லை என்றால் அனைத்தையும் தூற்றிவிட்டு புலம்புவார்கள்.

இவர்களிடம் மற்றவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போது இவர்கள் மனம் எங்கோ போய்விடும். தன் தகுதிக்கு குறைந்தவர்களை




யும் மதிக்கும் குணமிருக்கும். வாதத்திறமை இருக்கும். வழக்காடுவார்கள். சிறந்த பேச்சாளர்கள். எழுத்தாளர்கள். தத்துவ மேதைகள் என்று பெயர் கிடைக்கும். புகழுக்காக உயிரையும் கொடுப்பார்கள். நிரந்தரமான நல்ல நண்பர்கள் அமைவது கடினம். விதியின் பாதை அதிகம் இவர்களை இழுத்துச் செல்லும்.

வாழ்க்கைச் சம்பவங்கள் அனைத்தையும் அலசி ஆராய்ந்து கொண்டேயிருப்பார். நன்மை தீமைகளை சீர்தூக்கிப் பார்க்கும் குணமிருக்கும். மனதில் என்றும் ஒருவித வரட்டுப் பிடிவாதம் இருக்கும். மற்றவர்களை எப்படிப் போற்றுவது, எப்படித் தூற்றுவது என்னும் எண்ணங்களிலேயே மூழ்கிக் கிடப்பார்கள். எந்நேரமும் எதையாவது செய்து புகழ் பெற வேண்டும் என்று எண்ணுவார்கள். அதற்கேற்ப உழைக்கவும் தயங்க மாட்டார்கள். பொதுக் காரியங்களில் முன்னின்று தலைமை தாங்கி எக்காரியத்தையும் சிறப்புடன் நடத்துவார்கள். கனவுக்காட்சிகள் பலவிதங்களில் இவர்களைப் பயமுறுத்தும். தன்மீது அன்பு கொண்டவருக்குப் பலவிதமாக செலவு செய்வார்கள்.

பார்க்க அமைதியான முகத்துடன் காட்சியளிப்பார்கள். பேசத் தொடங்கிவிட்டால் பிறருடைய கருத்துக்களை கேட்காமலே இவர்கள் பேசிக் கொண்டிருப்பார்கள். மனம் கடல் அலைபோல ஏதாவது சிந்தித்துக் கொண்டேயிருக்கும். மறைமுக எதிரிகளை உருவாக்குவார்கள். பிறருடன் வாதம், விவாதம் செய்யப் பிரியமுடையவர்கள். தந்திரம் அதிகம் உடையவர்கள்.

பிறருக்கு உதவிகள் பல செய்வார்கள். தான் செய்யும் தவறுக்குக்கூட மற்றவர்களைக் காரணம் காட்டிக் கொண்டிருப்பார்கள். தன்னுடைய சுய கௌரவத்தை விட்டுக் கொடுக்கவே மாட்டார்கள். அனைவரும் தன்னை மதிக்கவும், துதிக்கவும் வேண்டும் என்று எண்ணுவார்கள். நறுமணப் பொருட்கள், வாசனைத்திரவியங்கள் மீது ஆர்வமிருக்கும். எளிமையாக இருக்கவே விரும்புவார்கள். இவர்களின் பேச்சும் செயலும் முரண்பட்டதாகவே தெரியும். தோல்விகளை மறைத்து வாழ்க்கை நடத்தத் தெரிந்தவர்கள். ஒரு காரியத்தில் இறங்கி வெற்றியடையும் வரை ஓயாது திட்டங்கள் தீட்டிக் கொண்டிருப்பார்கள். கலைகளில் முழு ஈடுபாட்டுடன் செயற்படுவார்கள்.

மேதாவித்தனம் இவர்களிடம் அதிகம் காணப்படும். எதிலும் ஆதிக்கம் செய்ய முற்படுவார்கள். தெய்வீக விடயங்களில் அளவுக்கதிகமான ஈடுபாடுகள் காட்டி மற்றவர்களையும் அவ்வழியில் கொண்டு செல்ல முற்படுவார்கள். இவர்கள் வாய்ஜால வித்தகர்கள் என்பதை இவர்களுடன் நெருங்கிப் பழகியவர்கள் எளிதில் கண்டு கொள்வார்கள். மற்றவர்கள் வெற்றிக்குத் தன்னுடைய பிரார்த்தனையே காரணம் என்று தம்பட்டம் அடிப்பார்கள்.

புகழையும், பட்டங்களையும், பதவிகளையும் வெறுப்பதுபோலக் காட்டிக் கொள்ளும் இவர்கள், பெரிய பதவிகளில் முனைப்பாக இருந்து பணியாற்றுவார்கள்.

எதிலும் குழம்பும் இவர்கள் மற்றவர்களைக் குழப்புவதிலும் கெட்டிக்காரர்கள். பலருக்கு இவர்களால் பல நேரங்களில் உதவிகள் கிடைக்கும். சிலர் பண விடயத்தில் மிகவும் கருமியாகவும் இருக்கின்றார்கள்.

அதிர்ஷ்டக் குறிப்புகளை முறையாகக் கையாண்டு வந்தால் அதிர்ஷ்டமான வாழ்க்கை நிச்சயம் சித்திக்கும்.

அதிர்ஷ்ட திகதிகள்
5,14,23,6,15,24,1,10,19,28,7,16,25

துரதிர்ஷ்ட திகதிகள்
9,18,27,8,17,26

அதிர்ஷ்ட நிறங்கள்
வெளிர்நீலம், மஞ்சள், வெளிர்பச்சை, வெள்ளை.

துரதிர்ஷ்ட நிறங்கள்
கறுப்பு, சிவப்பு, கோப்பிகலர், பாக்குநிறம், இருண்ட நிறங்கள்.

அதிர்ஷ்ட இரத்தினங்கள்
முத்து, நீலக்கல், சந்திரகாந்தக்கல், டைகர்ஸ் ஐ, ஜேட், இந்திரநீலம், அக்கோமரின்.

(தொடரும்....)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

75



திருகோணமலை துறைமுகம்

"இலங்கையின் முக்கிய வடபகுதியாகிய யாழ்ப்பாணக் குடாநாட்டுப் பிரதேசமும் இன்றைய வன்னிப் பெருநிலப் பரப்பின் முக்கிய துறைமுகப் பிரதேசங்களாகிய மன்னார்ப் பிரதேசமும் வடமேற்குப் பிரதேசங்களும் வட கிழக்குப் பிரதேசங்களின் முக்கிய இடங்களாகிய திருகோணமலை, மட்டக்களப்புப் பிரதேசங்கள் அனைத்தும் போர்த்துக்கீச ஆளுகைக்குள் விழுந்து விட்டதைக் காணமுடிகிறது"

எனவே இலங்கையின் முக்கிய வடபகுதியாகிய யாழ்ப்பாணக் குடாநாட்டுப் பிரதேசமும் இன்றைய வன்னிப் பெருநிலப் பரப்பின் முக்கிய துறைமுகப் பிரதேசங்களாகிய மன்னார்ப் பிரதேசமும் வடமேற்குப் பிரதேசங்களும் வட கிழக்குப் பிரதேசங்களின் முக்கிய இடங்களாகிய திருகோணமலை, மட்டக்களப்புப் பிரதேசங்கள் அனைத்தும் போர்த்துக்கீச ஆளுகைக்குள் விழுந்து விட்டதைக் காணமுடிகிறது.

ஆனால், இன்று வன்னிப் பெருநிலப் பரப்பு என்று அழைக்கப்படும் கிளிநொச்சி மாவட்டம், முல்லைத்தீவு மாவட்டம், வவுனியா மாவட்டம் போன்ற பிரதேசங்கள் போர்த்துக்கீசர் ஆளுகைக்கு அல்லது மேலாண்மைக்கு உட்படாத பிரதேசங்களாக இருந்திருக்கின்றன என்பதை அவதானிக்க முடிகிறது.

இதற்கு முக்கிய காரணம் மேற்படி பிரதேசங்கள் கடற்கரையை அண்டிய பிரதேசங்களாக இல்லாத காரணத்தினாலும், காடு சார்ந்த பிரதேசங்களாக இருந்தாலும் போர்த்துக்கீசரினால் இப் பிரதேசங்களுக்குள் ஊடுருவ முடியாது இருக்கின்றன என்று கொள்ள முடிகிறது.

அத்தோடு யாழ்ப்பாண மன்னனிடமிருந்து யானைகளையும் போர்த்துக்கீசர் திறையாகப் பெற்றிருந்தனர். இவ் யானைகள் வன்னிச் சிற்றரசுகளால் யாழ்ப்பாண மன்னருக்குத் திறையாக வருடாவருடம் கொடுக்கப்பட்ட யானைகளாகும். எனவே போர்த்துக்கீசர் யானைகளைப் பெறுவதோடு திருப்திப் பட்டிருக்கவேண்டும் எனத் தெரிகிறது.

மேலும் வன்னிப் பிரதேசம் பரந்துவிரிந்த காடடர்ந்த பிரதேசம். அவ்வாறான பரந்த பிரதேசத்தைக் கட்டிக் காப்பதற்கான படைபலம் போர்த்துக்கீசரிடம் நிச்சயமாக இருக்கவில்லை என்பதைப் புள்ளிவிபரங்கள் காட்டி நிற்கின்றன.

இதன் விளைவாக, போர்த்துக்கீசரின் ஆரம்ப ஆட்சிக் காலத்திலிருந்து அவர்களின் இறுதிக் கால ஆட்சியின் முற்பகுதி வரை, மேற்படி வன்னிச் சிற்றரசர்கள் தம்மை உரியமுறையில் பலப்படுத்தி, தன்னாதிக்கம் நிறைந்த சிற்றரசுகளாக இருந்திருக்கின்றன என்பதைப் போர்த்துக்கீச கால ஆட்சியை அடுத்து வருகின்ற டச்சுக்காரர், பிரித்தானியர் ஆட்சிக் காலங்களில் இடம்பெற்ற நிகழ்வுகள் மூலம் அறியமுடிகிறது.

யாழ்ப்பாண மன்னரை தொடர்ந்து அதிகாரத்தைப் பெற்றவர்களான போர்த்துக்கேயர் வன்னியின்மீது தம் மேலாட்சியை நிலைநாட்டுவதிலும் வன்னியரிடமிருந்து திறைபெறுவதிலும் அக்கறை கொண்டிருந்தனர். தங்கள் ஆட்சியின் ஆரம்பத்தில் அவர்களால் இதனைச் சாதிக்க முடியவில்லை.

## போர்த்துக்கீசர் ஆக்கிரமிப்பும் தமிழர் பிரதேசங்களின் அழிவும் (கி.பி. 1505-கி.பி. 1658)

வன்னியர் போர்த்துக்கேயருக்கு அடங்காது கிளர்ச்சி புரிந்தனர். போர்த்துக்கேயரின் ஆதிக்கத்தை எதிர்த்த காலத்திலே வன்னியர் தங்கள் மத்தியிற் காணப்பட்ட பகை உணர்வுகளை மறந்து ஒற்றுமையாகச் செயற்பட்டனர். இலங்கையின் வடக்கிலும், வடகிழக்கிலும் உள்ள தமிழர் வாழ்ந்த பிரதேசங்களில் அரசியல், பண்பாடு என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒருமைப்பாடு உணர்வு உருவாகியது.

கருத்து நிலையில் அதன் பயனாக எழுந்த அடங்காப்பற்று என்னும் கோட்பாடானது அரசியல் ரீதியான ஒன்றாகவும், புவியியல் சார்புடைய ஒன்றாகவும் அமைந்தது. அரசியற் கண்ணோட்டத்தில் பார்க்குமிடத்து அது புதிதாக அமையப்பெற்ற அந்நியர் ஆட்சியின் மேலாதிக்க கோரிக்கைகளை நிராகரிக்கின்ற சுயாட்சி உரிமை கொண்ட சிற்றரசுகள் பலவற்றின் தொகுதியாக விளங்கியது.

புவியியல் நோக்கில் அதுவரையறையான எல்லைகளைக் கொண்ட பிரதேசமொன்றின் பெயராகிவிட்டது" என்று கூறுவதிலிருந்து, மேற்படி கூற்றை மேலும் விளங்கிக் கொள்ள முடிகிறது.

போர்த்துக்கீசர் கால வரலாறு பற்றியும், அவர்கள் எவ்வாறு குறிப்பாக யாழ்ப்பாணப் பிரதேசத்தையும், மன்னார், நீர்கொழும்பு, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய தமிழ்ப் பிரதேசங்களையும் தமது சொந்த அரசியல், வர்த்தக, சமய நலன்களுக்காக பலாத்காரமாகப் போர்புரிந்து ஈற்றில் தமதாக்கிக் கொண்டார்கள் என்பது பற்றியும் நான்கு நூற்றாண்டு களுக்கு மேல் வளர்ச்சியுற்று, எழுச்சி பெற்றிருந்த யாழ்ப்பாண இராச்சியத்தை எவ்வாறு அடியோடு அழித்தார்கள் என்பது பற்றியும், அவ் இராச்சியத்தின் கீழிருந்த பிரதேசங்களை எவ்வாறு பறித்தெடுத்தார்கள் என்பதனைப் பற்றியும் இதுவரை ஆராயப்பட்டது.

ஐரோப்பிய போர்த்துக்கீசரின் ஆசிய நாடுகளுக்கான பயணத்தில் மதமும், வர்க்கமும் மிக முக்கிய குறிக்கோள்களாகக் காணப்பட்டன. எனவே மதம் சம்பந்தமான நிகழ்வுகளே முதலில் அவசியமாகின்றது. 1560 களில் இந்திய கிழக்குக் கரையோரங்களில் உள்ள மீனவச் சமூகத்தினரிடையே போர்த்துக்கீச மிசனரிமார் தமது கத்தோலிக்க மதப்பரம்பல் முயற்சிகளை முன்னின்று நடத்தினர்.

அதனைத் தொடர்ந்து அவ்வாறான முயற்சிகள் 1543களில் இலங்கைக் கரையோரங்களிலும் தொடங்கப்பட்டது. போர்த்துக்கீசரினால் கத்தோலிக்க மதத்தை இந்தியாவில் பரப்புவதன் பொருட்டு கோவாவிற்கு அனுப்பப்பட்டவண. பிரான்சிஸ் சேவியர் என்ற கத்தோலிக்கப் பாதிரியார் மன்னாருக்கான தன் பயணத்தை மேற்கொண்டார்.

1543 இல் போர்த்துக்கீசருக்கும், சங்கிலி மன்னனுக்கும் இடையில் ஏற்பட்ட உடன்படிக்கையின்படி, சங்கிலி மன்னன் போர்த்துக்கீசருக்கு வருடந்தோறும் கப்பம் கட்டுவதற்கு ஒப்புக் கொண்டமையின் பலவீனத்தின் அடிப்படையிலேயே போர்த்துக்கீசர் மன்னாருக்கு மேற்படி பாதிரியாரைக் கத்தோலிக்க மதப்பரம்பல் நடவடிக்கைகளுக்கு அனுப்பி வைத்தனர்.

600 க்கு அதிகமான மீனவக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் கத்தோலிக்கராக மதம் மாற்றப்பட்டனர். 1544 இல் சங்கிலி மன்னன் 5000 படைவீரர்களை மன்னாருக்கு அனுப்பி கத்தோலிக்கராக மாறிய எல்லோரையும் கொன்றான். இதனையே போர்த்துக்கீச ஆவணங்கள் மன்னார்ப் படுகொலைகள் எனக் குறிப்பிடுகின்றன.

மன்னாரிலுள்ள தமிழர்கள் தமது சொந்த மதத்தை விட்டு அந்நிய மதமான கத்தோலிக்க மதத்துக்கு மாறியமை வெறுமனே மதம் சார்ந்ததாக மட்டும் சங்கிலி மன்னனின் பார்வையில் பட்டிருக்க முடியாது.

அந் நடவடிக்கை தமிழ் தேசத்தின் அரசியல், சமூக, பொருளாதார நிலைமைகளின் அடித்தளத்தையே தகர்த்தெறிந்து, நாட்டை அந்நியர் கைக்கு இட்டுச் செல்லும் என்பதை விவேகமும் ஆற்றலும் நாட்டுப்பற்றும் மதப்பற்றும் கொண்ட சங்கிலி மன்னனுக்கு நிச்சயம் விளங்காமல் இருந்திருக்க முடியாது.

பல்வேறுபட்ட அரசியல், பொருளாதார, சமயக் காரணங்களின் அடிப்படையில் 1560 களில் போர்த்துக்கீசர் படை யாழ்ப்பாணத்தை நோக்கிப் படையெடுத்தது. சங்கிலியின் படைகள் தோல்வியைத் தழுவ நேர்ந்தது. போர்த்துக்கீசருக்கும் சங்கிலிக்கும் இடையில் மீண்டும் உடன்படிக்கை ஏற்பட்டது.

அவற்றில் இங்கு முக்கியமானது, யாழ்ப்பாணப் இராச்சியத்தின் எல்லாப் பகுதிகளிலும் கத்தோலிக்க மதத்தைப் பரப்புவதற்கு எதுவித தடைகளும் இல்லாது அனுமதிக்கப்பட வேண்டும். எதுவித தடைகளும் இல்லாது அனுமதிக்கப்பட வேண்டும் என்பதாகும்.

(தொடரும்)

# ரூ.10 இலட்சம் கொடுக்க வேண்டும்; இல்லையேல் தலையை வெட்டிக் கொலை செய்வோம்

## காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத் தலைவிக்கு மிரட்டல்

(கொழும்பு)

**10 இலட்சம் ரூபா கொடுக்க வேண்டும் அல்லது உன் தலையை வெட்டி கொலை செய்வோம் என அம்பாறை மாவட்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்க தலைவிக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**




அம்பாறைமாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் சங்கத்தின் ஊடாக வெளிநாடுகளில் இருந்து பணத்தைப் பெற்று மீண்டும் இயக்கத்தினை வளர்க்க முயற்சிப்பதாகவும் தமக்கு 10 இலட்சம்ரூபா பணத்தினை கொடுக்க வேண்டும் அல்லது உன்னுடைய தலையை வெட்டி கொலை செய்வோம் என தொலைபேசி மூலம் மிரட்டல் விடுத்துள்ளதாக அம்பாறை மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுக ளின் சங்கத் தலைவி தம்பிராசா செல்வராணி ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

அம்பாறை திருக்கோவில் பிரதேசத்தில் அமைந்துள்ள காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் சங்க அலுவலகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

நாங்கள் அம்பாறை மாவட்டத்தில் காணாமல் போன உறவுகளுக்கு நீதி வேண்டி போராட்டங்களை நடத்தி வருகின்றோம். எமது மக்களின் பிரச்சினைகளை நான் நேரடியாக ஐ.நா.மனித உரிமை பேரவைக்கு எடுத்துச் சென்று முறைப்பாடுகளை முன்வைத்து வந்துள்ளேன். எனக்கு யாரும் பணம் கொடுக்கவில்லை. இவ்வாறு இல்லை என்பதனையும் என்னால் நிரூபிக்க முடியும்.

நான் அங்கு இருந்து வரும்போது பண மூட்டைகளை கொண்டு வந்து இங்கு உள்ளவர்களை வைத்து இயக்கம் "வளர்ப்பதாக எனக்கு கொச்சைத் தமிழில் துண்டுப் பிரசுரங்கள் அடித்து ஒட்டி வருகின்றனர். அம்பாறை மாவட்ட காணாமல்ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தில் 60 வயதை கடந்த தாய்மார்கள் தான் இருக்கின்றார்கள். இவர்களை வைத்து என்ன இயக்கம் வளர்க்க முடியும்.

எனக்கு விடுக்கப்பட்ட உயிர அச்சுறுத்தல் தொடர்பாக திருக்கோவில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றினை செய்துள்ளதுடன் கொழும்பில் உள்ள ஐ.நா தூதரத்திற்கும், மனித உரிமை அமைப்புக்கும் மற்றும் இலங்கை அரசாங்கத்திற்கும் மகஜர் ஒன்றினை இன்று திங்கட் கிழமை அனுப்பி வைக்கவுள்ளேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## லக்ஷ்மன் கிரியெல்லவுக்கு ஜனாதிபதி வாழ்த்து





(கண்டி)

அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல மேற்கொண்டு வரும் சமய மற்றும் சமூக பணிகளை பாராட்டி கண்டி அஸ்கிரிய பீடத்தினால் "சாசனமாக ஜனப்பிரசாதனி" கௌரவ விருது வழங்கப்பட்டது.

இவ் விருது வழங்கும் நிகழ்வு அஸ்கிரிய மகாநாயக்கர் சங்கைக்குரிய வரகாகொட ஸ்ரீ ஞானரத்ன தேரரின் தலைமையில் நேற்று முன்தினம் பிற்பகல் கண்டி அஸ்கிரி மகா விகாரையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்லவுக்கு வாழ்த்து தெரிவித்தார்.

மல்வத்தை பீடத்தின் அநுநாயக்கர் சங்கைக்குரிய நியங்கொட விஜிதசிரி தேரர் உள்ளிட்ட மகாசங்கத்தினரும் கண்டி மாவட்ட மக்கள் பிரதிநிதிகளும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (இ-7)

## புதிய பணிப்பாளர்களை நியமிக்குமாறு பணிப்புரை

(கொழும்பு)



இரண்டு பிரதான அரச வங்கிகளின் பணிப்பாளர் சபை தொடர்பில் ஏற்பட்டுள்ள நிலைமைகள் காரணமாக அந்த வங்கிகள் தொடர்பில், மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை பாதிக்கப்பட்டுள்ளதாக ஒன்றிணைந்த எதிர் கட்சி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன இதனை தெரிவித்தார்.

இலங்கை வங்கியும், மக்கள் வங்கியும் வீழ்ச்சியடைவதை தடுக்க புதிய பணிப்பாளர்களை நியமிக்குமாறு, இது தொடர்பான அமைச்சருக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)

## சட்டவிரோதமாக தங்கியுள்ளவர்களுக்கு மூன்று மாதங்கள் பொது மன்னிப்புக்காலம்

(கொழும்பு)

கொரியா நாட்டில் சட்டவிரோதமாக தங்கியுள்ள வெளிநாட்டு பணியாளர்களுக்கு எவ்வித தண்டனையோ, அபராதமோ விதிக்கப்படாது அவர்களை அங்கிருந்து வெளியேற்றுவதற்காக 3 மாத பொது மன்னிப்பு காலத்தை கொரிய அரசாங்கம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் ஆரம்பமாகும் இந்த பொது மன்னிப்பு காலமானது அடுத்த வருடம் மார்ச் மாதம் 31ஆம் திகதி வரை அமுலில் இருக்குமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கொரியாவில் சட்டவிரோதமாக தங்கியிருக்கும் வெளிநாட்டவர்கள், குறித்த 3 மாத பொதுமன்னிப்பு காலப்பகுதிக்குள் தாமாகவே அங்கிருந்து வெளியேறாவிட்டால், அவர்களை கைது செய்து நாடு கடத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதுடன், அவர்கள் மீண்டும் கொரியாவுக்குள் வரமுடியாத வகையில் 10 வருட தடையுத்தரவு பிறப்பிக்கப்படுவதாக, வெளிநாடுகளுக்கு கொரியா அறிவித்துள்ளதாக, கொரியாவிலுள்ள இலங்கைத் தூதரக அலுவலகம் தெரிவித்துள்ளது. (இ-7)

## மகிந்தவைப் பிரதமராக்கும் யோசனையை நிராகரித்த சு.க.

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமித்து புதிய அரசாங்கத்தை அமைக்க கூட்டு எதிர்க்கட்சியினர் மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 15 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அணி விடுத்த கோரிக்கையை தாம் நிராகரித்துள்ளதாக அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

சிங்கள வாரப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணல் ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமித்து புதிய அரசாங்கம்ஒன்றை அமைப்பது தொடர்பாக கூட்டு எதிர்க் கட்சியினர் மற்றும் சுதந் திரக் கட்சியின் 15 பேர் அணியினர் பல யோசனைகளை முன்வைத்திருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.



எனினும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அந்த யோசனைகளை நிராகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 170 | 200 | 180 | 280 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 150 | 150 | 150 | 200 |
| தக்காளி | 140 | 100 | 120 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 30 | 50 | 50 |
| கோவா | 150 | 100 | 120 | 160 |
| கரட் | 140 | 140 | 140 | 240 |
| பூசணி | 50 | 35 | 40 | 80 |
| புடோல் | 120 | 120 | 120 | 120 |
| வாழைக்காய் | 60 | 70 | 80 | 200 |
| சின்ன வெங்காயம் | 120 | 80 | 100 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 90 | 100 | 120 |
| பாகற்காய் | 200 | 220 | 260 | 300 |
| வெண்டிக்காய் | 120 | 80 | 100 | 160 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 60 | 80 |
| பயற்றங்காய் | 160 | 200 | 140 | 240 |
| லீக்ஸ் | 100 | 90 | 120 | 120 |
| பீற்றூட் | 80 | 50 | 80 | 100 |
| கறிமிளகாய் | 200 | 180 | 160 | 240 |
| முருங்கைக்காய் | 250 | 100 | 160 | 120 |
| போஞ்சி | 250 | 220 | 220 | 300 |
| கத்தரிதம்புள்ள | 120 | 180 | — | 240 |
| கீரை -1பிடி | 50 | 40 | 50 | 50 |
| தேசிக்காய் | 350 | 350 | 350 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40 | 50 | 30-50 |
| இராசவள்ளி | 160 | 180 | 180 | 240 |
| வெங்காயப்பூ | 180 | 160 | 240 | 200 |
| முள்ளங்கி | 60 | 40 | 60 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 50 | 40 |
| வல்லாரை | 15 | 15 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 50 | — | 120 |

# தமிழ் மக்களுக்கான ஒரு சிறந்த அரசியல் தீர்வைக் குழப்ப முயற்சி

## சாந்தி எம்.பி.குற்றச்சாட்டு

(ஒட்டுசுட்டான்)

முல்லைத்தீவு மாவட்டத்தை பொறுத்தவரையிலே காணி அபகரிப்பு என்பதே பாரிய பிரச்சினையாக உள்ளது அபிவிருத்தி என்பதற்கு முதல்எமது இருப்புக்கள் வாழ்விடங்கள் திட்டமிட்ட முறையில் சிங்களவர்களாலே அரங்கேற்றப்பட்ட சுற்றுநிருபங்கள். இவையெல்லாம் எங்களை விழுங்குகின்ற விடயங்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா தெரிவித்தார்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் வழிகாட்டலில் இலங்கை தமிழரசு கட்சியின் திட்டமிடலில் நில அதிகாரமும் அதிகாரப் பகிர்வும் சிறப்பு பேருரை நிகழ்வு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா தலைமையில் நேற்று முன்தினம் ஒட்டுசுட்டான் தான்தோன் றீஸ்வரர் ஆலய வளாகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு தலைமை உரை நிகழ்த்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். எமது தமிழ்மக்களின் இன விடுதலைக்காக நாம் தொடர்ந்து பாடுபட்டு தொடர்ந்து பல இன்னுயிர்களை தியாகம் செய்து ஆயுத போராட்டம் தோற்று இன்று அகிம்சா வழியில் போராடிக்கொண்டிருக்கிறோம். இந்தவேளையிலே அருமையான ஒரு கூடி வருகின்ற இந்த அரசியல் யாப்பு என்பது எங்கள் அவாவை தீர்க்கின்ற ஒன்றாக அமைய வேண்டும்.

ஆனால் இந்த அரசியல் யாப்பு என்பது தென்பகுதியிலே ஒருவிதமான பிரசாரம், வட பகுதியிலே இன்னொரு விதமான பிரசாரம், தென்பகுதியிலே இங்கு பிரபாகரனின் ஆசை நிறைவேறுகிறது. தமிழீழம் மலரப்போகிறது என்று மகிந்த அணியின் பிரசாரம், வடபகுதியிலே இந்த யாப்பிலே எதுவுமில்லைஎன்பதுஇன்னொரு தரப்பினரது பிரசாரம். இந்த நிலையிலே எங்களுடைய சுமந்திரன் எம்.பி.வடக்கு-கிழக்கு என்று அல்ல இலங்கையில் எல்லா இடங்களிலும் சென்று தமிழ் மக்களை மட்டுமல்ல சிங்கள மக்களையும் தெளிவுபடுத்தும் வகையிலே இந்த அரசியல் யாப்பு கூறுவது என்ன என்று அவர் தன்னுடைய தெளிவான, உண்மையான கருத்துக்களை கூறி வருகிறார்.

இவ்வாறு தமிழ் மக்களுக்கான ஒரு சிறந்த தீர்வை விரும்பாத சிலர் இதை குழப்பும் விதமாக பல பிரசாரங்களை செய்கின்றார்கள். சமஷ்டி தேவையில்லை என்று கூறிவிட்டார் என்பது இங்குள்ள பிரசாரம். ஆனால் அவர் கூறியது அதுவல்ல. அந்த விடயங்களில் நான் கைவைக்கவில்லை. ஆனால் முல்லைத்தீவிலும் இந்த அரசியல் யாப்பை பற்றி விளக்கவுரை ஒன்றை கூறவேண்டும்.

எமது முல்லைத்தீவு மாவட்டத்தை பொறுத்தவரையிலே காணி அபகரிப்பு என்பதே பாரிய பிரச்சினையாக உள்ளது. அபிவிருத்தி என்பதற்கு முதல் எமது இருப்புக்கள், எங்களது வாழ்விடங்கள் திட்டமிட்ட முறையில் சிங்களவர்களாலே அரங்கேற்றப்பட்ட சுற்றுநிருபங்கள் இவையெல்லாம் எங்களை விழுங்குகின்ற விடயங்கள்.

எனவே நில அதிகாரம் எமது அரசியல் யாப்பிலே என்ன கூறுகின்றது என்பது தொடர்பில் தெளிவுபடுத்தவே இந்த கூட்டத்தை ஒழுங்குபடுத்தியுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-281)

# மீற்றர் பொருத்தாத ஆட்டோ சாரதிகளுக்கு எதிராக நடவடிக்கை

(கொழும்பு)

ஆட்டோக்களில் பொருத்தப்பட்டுள்ள மீற்றர் அளவீட்டு கருவிகளின் தரம் குறித்து ஆராய்ந்து அறிக்கையொன்றை பெற்றுக்கொண்டதன் பின்னர், குறித்த கருவியை ஆட்டோக்களில் பொருத்தாது ஆட்டோக்களை செலுத்தும் சாரதிகளை நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லும் அதிகாரம் பொலிஸாருக்கு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் விரைவில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை தெரிவித்துள்ளது.

அத்தோடு, ஆட்டோக்களில் பொருத்தப்பட்டுள்ள மீற்றர் அளவீட்டு கருவிகள் அடுத்த இரண்டு வாரங்களில் பரிசோதனைக்குட்படுத்தப்படுமெனவும், மேலும் பரிசோதனைகள் முடிக்கப்பட்டு மீற்றர் அளவீட்டு கருவிகளுக்கான அறிக்கையானது, அதனுடன் தொடர்புடைய அமைச்சருக்கு வழங்கப்பட்டு, குறித்த அந்த அறிக்கைக்கமைய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுமென, வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் தலைவர் சிசிர கோதாகொட மேலும் தெரிவித்தார். (இ-7)

# கோபுரத்தில் ஏறி கைதிகள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

அகுணுகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் கைதிகள் சிலர் நேற்றுக் காலை ஆர்ப்பாட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

குறித்த கைதிகள் சிறைச்சாலையிலுள்ள கோபுரம் ஒன்றில் ஏறி தமது ஆர்ப்பாட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.



கடந்த சில தினங்களாக சிறைச்சாலைக்குள் பொலிஸ் விஷேட அதிரடிப்படையினர் உள்ளக சோதனை மேற்கொண்டு வருவதற்கு எதிர்ப்பு தெரிவித்தே அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அதனடிப்படையில் 100 இற்கும் அதிகமான கைதிகள் இவ்வாறு கோபுரத்தின் மீது ஏறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1537

### அஜந்தன்

போன்ல பேசும் போது சரியா, சரியா அப்படின்னு கேட்டா அவ காதலி



அதுவே புரிஞ்சுதா, புரிஞ்சுதா அப்படின்னு கேட்டா அவ பொண்டாட்டி

### காசி

வௌக்குமாத்தல துடைச்சிட்டு மாவை ஊத்தினா ஹோட்டல் தோசை



தோசையை ஊத்திட்டு வௌக்குமாத்த எடுத்தா வீட்டுத்தோசை

### கிசோர்

நைட்டு தூங்குறதுக்கு முன்னாடி புக் படிச்சா நல்லா தூக்கம் வரும்னு சொல்லியிருக்காங்க... என்ன புக்கு?



பேஸ்புக்

### வசந்த்

ஒரேயொரு எழுத்துப் பிழையினால் ஒரேநாளில் பத்து இலட்சம் புத்தகம் விற்பனையாகியதாம்



How to change your life என்பதற்கு பதிலாக How to change your wife என்று அச்சடிக்கப்பட்டதுதான் காரணமாம்

### ஆதர்ஷ்

பணம் மட்டும் கண்டுபிடிக்காமல் முன்னைய கால முறை போல் பண்டமாற்று முறை இருந்தால் உலகின் மிகப்பெரிய பணக்காரன் விவசாயி



### சுபாஸ்

வணங்குகிற கையைவிட



வழங்குகிற கையே உயர்ந்தது

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.




## வாசிப்பு மாதம் ஒக்டோபர் - 2018

# கராத்தேயும் கையில்லாச் சிறுவனும்

கதை


ஓர் கராத்தே மாஸ்ரரிடம் ஒரு சிறுவன் வந்தான். அவன் மாஸ்ரரிடம் நான் கராத்தே பழக விரும்புகிறேன். போட்டிகளில் கலந்து கொள்ள ஆசைப்படுகிறேன். என்னால் முடியுமா என்று கேட்டான். அப்போது மாஸ்ரர் அச்சிறுவனை நிமிர்ந்து பார்த்தார். அச்சிறுவனுக்கு இடது கையில்லை.

மாஸ்ரர் இருக்கையை விட்டு எழுந்து அவனது தோளில் கை போட்டு அணைத்தபடி உன்னால் கராத்தே பழகவும் முடியும் போட்டிகளில் வெல்லவும் முடியும். நீ பயிற்சி வகுப்புக்கு வரலாம் என்று கூறினார்.

சிறுவனும் பயிற்சியில் கலந்து கொள்ள வகுப்புக்கு வந்தான். ஒரே ஒரு முறையான சண்டைப் பயிற்சியையே மாஸ்ரர் அவனுக்குக் கற்றுக் கொடுத்தார். அவனும் அதையே பயிற்சி செய்தான்.

இவ்வாறு வேறு எதையும் மாஸ்ரர் கற்றுக் கொடுக்கவில்லை. அவனும் அதைப் பற்றி கேட்கவேயில்லை. மாஸ்ரர் கற்றுக் கொடுத்த அந்த ஒரு முறையை தொடர்ந்து பயிற்சி செய்தான். அதில் மிகத் தேர்ச்சி பெற்றான். இவ்வாறு ஆறு மாதங்கள் கழிந்தன.

ஒரு கராத்தேப் போட்டி நடைபெற்றது. அதில் இந்த மாணவனும் கலந்து கொண்டான். அவன் தனக்கு ஒரே ஒரு சண்டை முறை தான் தெரியும். அதை வைத்து எவ்வாறு எதிரியை வீழ்த்தப் போகிறேன் என்று சிந்திக்கவில்லை. நம்பிக்கையுடனும் வெல்ல வேண்டும் என்ற வெறியுடனும் போட்டியில் கலந்து கொண்டான். வெற்றியும் பெற்றான்.



அதன் பின்னர் தான் ஆசிரியரிடம் கேட்டான் குருவே நீங்கள் எனக்கு அந்த ஒரு முறையைத் தவிர வேறு எந்த முறையையும் கற்றுத்தரவில்லை. நானும் அந்த ஒரு சண்டை முறையை வைத்து வெற்றி பெற்று விட்டேன். இது எப்படி சாத்தியமாகியது என்றான். அப்போது குரு சொன்னார் நீ எதிரியைத் தாக்கிய சண்டை முறையில் தாக்குபவரை மடக்க தாக்குபவரின் இடக்கையில் பூட்டுப் போட்டே மடக்க வேண்டும். ஆனால் உனக்குத் தான் இடக்கையே இல்லையே. அதனால் உன்னை யாராலும் மடக்க முடியாது. எனவே தான் அந்த ஒரு முறையை உனக்குக் கற்றுத் தந்தேன். நீயும் நம்பிக்கையுடன் தொடர்ச்சியாக அதில் பயிற்சி பெற்றாய். அதனால் வென்றாய் என்றார்.

### கதை கூறும் கதை

இக்கதை உங்களுக்குக் கூறுவது குரு பக்தி. நம்பிக்கை. இவை இரண்டும் இருந்தால் எதையும் இலகுவில் பெற்றுவிடலாம். எந்த ஆசிரியரும் எந்த மாணவனையும் ஏமாற்றுவதில்லை. எப்போதும் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு முடிந்த வரை சிறப்பாகக் கற்பிக்கவே விரும்புவர். ஆனால் இன்று குரு பக்தி, நம்பிக்கை என்பன குறைவடைந்து விட்டன. ஓர் ஆசிரியரிடம் சில காலம் கற்கும் எங்கள் மாணவர்கள் பின்பு வேறு ஒருவரைத் தேடுவர். இவ்வாறு பரீட்சை வரை ஆசிரியர்களை மாற்றிக் கொண்டே இருப்பார்கள்.

இதனால் எந்த ஆசிரியரிடமும் முழுமையாகக் கல்வியைப் பெறும் வாய்ப்பு இவர்களுக்குக் கிடைப்பதில்லை. நம்பிக்கையுடன் ஆசிரியர்கள் சொல்வதைக் கடைப்பிடிக்க உங்கள் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுங்கள். ஆசிரியர்கள் மீதான விமர்சனங்கள் இருந்தால் அதை அந்த ஆசிரியரிடமே சென்று அவருக்குரிய மதிப்போடு கதைத்துச் சீர் செய்ய முயலலாம். ஆசிரியர் பற்றிய சரியானதோ பிழையானதோ விமர்சனங்களை பிள்ளைகள் முன் கதைக்கும் போது அவர்கள் அதையே பெரிதாக எடுக்க முனைவர்.

அதனால்தான் தங்களால் சரிவரக் கற்க முடியவில்லை என்று நம்பிக்கை கொள்வர். அவ நம்பிக்கை என்பதும் நம்பிக்கையே. அதாவது ‘முடியாது’ கூடாது ‘சரிவராது’ என்பதில் நம்பிக்கை.

இவற்றை வளர்ப்பதற்கு நாம் முயலக்கூடாது. எதிர்மறை எண் ணங்களை விடுத்து நேர் வழியில் வெற்றி பெற முயல்வோம்.

# My School



My School is J/Kokuvil East Namagal Vidyalayam. It is in Kokuvil. It is a mixed School. Nearly 100 students are studing in my school.

There are grade 1 to 11 classes. Nearly 20 teacher are teaching in my school. Mr.T.Sivanathan is our principal.

There is a beautiful vegetable garden in my school. There is a small ground and we play a lot of games. A library, Science lab, Computer lab, a Maths room and a Music room are in my school. I love my school very much.

**R.Eegaimathi,**
**Grade - 06,**
**Siruvar vadda Manavar.**

# களுஹாமி

ஒரு கிராமத்தில் ஒரு பெண் இறந்து போன தனது ஒரே மகள் களுஹாமியை நினைத்து பல நாட்களாக அழுது புலம்பிக் கொண்டு இருந்தாள். ஒருநாள் அவளது கணவன் இல்லாத சமயம் பார்த்து ஒரு அந்நியன் அவளிடம் வந்து ஏன் அழுது கொண்டிருக்கிறாய் என்று கேட்டாள். அதற்கு அவள் சில மாதத்திற்கு முன் இறந்து போன எனது மகளை நினைத்து அழுகிறேன் என்றாள். அப்போது அவன் நான் மறு உலகத்தில் இருந்து வந்து இருக்கிறேன். அவ்வுலகத்தில் நான் தான் உனது மகளின் கணவன் என்றான். உடனே அவள் மிகுந்த மகிழ்ச்சியுடன் அவனை உபசரித்தாள். பின்பு அவள் தன்னிடமிருந்த எல்லா தங்க, வெள்ளி, நகைகளையும் அவரிடம் கொண்டு வந்து கொடுத்து மருமகனே இந்தப் பரிசுப் பொருட்களை எனது மகளுக்கு கொடும் என்றாள்! அவனும் அவற்றை வாங்கிக் கொண்டு சென்று விட்டான். கணவன் வந்த உடன் அவள் நடந்த சம்பவத்தைக் கூறினாள். கணவனோ உடனே தனது குதிரையில் ஏறிக் கொண்டு அவன் ஒரு திருடன் என்று கூறி விட்டு விரைந்து சென்றான். குதிரையில் வந்து கொண்டிருந்த அவனைக் கண்ட திருடன் ஒரு மரத்தின் மீது விரைவாக ஏறினான்.



அவனைக் கண்ட இவன் குதிரையை நிறுத்தி விட்டு திருடனைப் பிடிக்கு தானும் மரத்தின் மீது ஏறினான். திருடன் உடனே மரத்தில் இருந்து குதித்து குதிரையில் ஏறி தப்பிச் சென்றான்.

உடனே இவன் உரத்த குரலில் நகைகளோ தாயிடமிருந்து குதிரையோ தகப்பனிடமிருந்து என்று மகளுக்கு சொல் என்றான்.

> கயவர்களால் சிறந்த மனிதர்களின் முன்னேற்றத்தைத் தடுத்துவிட முடியுமா? மேகங்கள் பெரியவை தான். ஆனால் சூரியனை மறைத்துவிட முடியுமா?
> – *தாகூர்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நீதியரசர் விக்னேஸ்வரனை விட்டால் எல்லாம் அம்போ என்றாகிவிடும்

வடக்கு மாகாணத்தின் ஆட்சிக்காலம் முடிவதற்கு இன்னமும் மூன்று நாட்கள் மட்டுமே உள்ளன.

இதனிடையே வடக்கு மாகாணத்தின் இறுதி அமர்வு நாளை நடைபெறுகிறது. இந்த அமர்வு சம்பிரதாயபூர்வமானது மட்டுமன்றி பிரியாவிடை நிகழ்வாகவும் இருக்கும். இவை சில அடிக்குறிப்புக்கள் மட்டுமே.

தவிர, வடக்கு மாகாண சபையின் ஆட்சிக்காலம் முடிவுறுகின்றபோது எங்களின் எதிர்கால அரசியல் எவ்வாறாக இருக்கப் போகிறது என்று ஆழமாகச் சிந்திப்பது கட்டாயமானதாகும்.

இந்தச் சிந்தனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் வடக்கின் முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களும் ஒத்திசைந்து சென்றிருந்தால் தேவையற்றதர்க இருந்திருக்கும்.

ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் முதலமைச்சர் விக்னேஸ்வரனும் உடன்பட்டுச் செல்லவில்லை என்பது ஏற்புடைய உண்மை.

இங்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் பதவி மீது ஆசை கொண்டிருந்தால், அவர் கூட்டமைப்பின் தலைவரையும் அங்கிருக்கக்கூடிய முக்கியஸ்தர்களையும் போற்றித் துதிசெய்திருப்பார்.

ஆனால் அவர் பதவி மீது இம்மியும் ஆசை கொள்ளவில்லை. இதன்காரணமாக அவர் தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுத்தார், தமிழ் மக்களின் அபிலாசைகளை வென்றெடுப்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அணுகுமுறை தவறானது எனச் சுட்டிக்காட்டினார்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் நிபந்தனையை இலங்கை அரசு நிறைவேற்றுவதற்கு கால அவகாசம் கொடுக்கக்கூடாது என்றார்.

ஆனால் கால அவகாசம் வழங்கலாம் என்று கூறிய கூட்டமைப்பு அதனூடு தமிழ் மக்களுக்குக் கிடைக்கக் கூடியவற்றையும் இல்லாமல் செய்தது.

இப்போது அது தவறு என்பதையும் அகிம்சை வழியில் போராடாமல் விட்டது பிழை என்பதையும் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் தானே பகிரங்கமாக ஏற்றுக் கொண்டுள்ளார்.

நீங்கள் காலம் கடந்தபின்; பார்வை இழுந்தபின் சூரிய நமஸ்காரம் செய்ய முற்படுகிறீர்கள் என்பதனைச் சுட்டிக்காட்டிய முதலமைச்சர், பார்வை உள்ளபோது சூரிய நமஸ்காரம் செய்யுங்கள் என்றார்.

இவ்வாறு முதலமைச்சர் விக்னேஸ்வரன் உண்மையை, யதார்த்தத்தைக் கூறி தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுக்கிறார் என்பதற்காக – அவ்வாறு அவர் செய்தால் அது தமிழ் மக்களிடம் அவருக்குச் செல்வாக்கை ஏற்படுத்திவிடும் என்ற காரணத்துக்காக அவரைக் கூட்டமைப்பு கடுமையாக எதிர்க்கிறது.

இப்போது நம் கேள்வியெல்லாம் நீதியரசர் விக்னேஸ்வரனையும் இங்கிருந்து வெளியேற்றினால் தமிழ் மக்களின் எதிர்கால அரசியல் நிலை என்ன என்பதுதான்?

# மருத்துவர்கள் நாட்டின் பொருளாதாரத்தை கதைக்கிறார்கள்

## துமிந்த திஸாநாயக்க தெரிவிப்பு

நாட்டில் பலர் தமது வேலைகளை மாற்றிக் கொண்டுள்ளதாகவும் அரசியல்வாதிகள் பாடல்களை பாடுவதாகவும் மருத்துவர்கள் பொருளாதாரம் பற்றி பேசுவதாகவும் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம் தலாவ பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இதனை கூறியுள்ளார்.

நாம் தற்போது எமது வேலைகளை மாற்றி செய்து கொண்டிருக்கின்றோம். அரசியல்வாதிகள் பாட்டு பாடுகின்றனர். பாட்டு பாட வேண்டியவர்கள் வேறு எதனையோ செய்து கொண்டிருக்கின்றனர்.

மருத்துவர்கள், பௌத்த பிக்குகள் பொருளாதாரம் பற்றி பேசுகின்றனர். இவர்கள் அனைவரும் தாம் செய்ய வேண்டிய வேலைகளை செய்ய ஆரம்பித்தால் நாடு முன்னேறும். ஆனால், தமது வேலையை விட்டு விட்டு வேறு வேலைகளை செய்கின்றனர்.

மருத்துவர்கள் நோயாளிகள் பற்றி பார்ப்பதில்லை. அவர்கள் நாட்டின் பொருளாதாரம் பற்றி பேசுகின்றனர். அரசியல் தலைமைத்துவத்தை வழங்க வேண்டிய அரசியல்வாதிகள் வேறு வேலைகளை செய்கின்றனர்.

அனைத்தையும் நாம் சிக்கலாக்கிக் கொண்டுள்ளோம். எதிர்காலத்தில் இந்த சிக்கல் களையப்பட வேண்டும். எதிர்காலத்திலும் மற்றுமொருவர், இன்னுமொருவரின் வேலைகளை செய்ய முடியாது.

தொலைக்காட்சிகளை பார்க்கும் அரசியல்வாதி ஒருவர் மைக்கை எடுத்து கொண்டு ஏதாவது ஒரு அதி மேதாவித்தனமான கதைகளைக் கூறுவார்.

இடைக்கால அரசாங்கம் பற்றி பேசுகின்றனர். அப்படியான அரசாங்கம் அமையாது. அது பற்றிய எந்த பேச்சுக்களும் இல்லை.

தொலைக்காட்சிகளை பார்க்கும் மக்கள் இப்படி நடக்கலாம் என்று எண்ணுவார்கள் எனவும் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார். (மு)

## வவுனியா பகுதியில் பேருந்து தடம்புரண்டதில் மூவர் படுகாயம்

(வவுனியா)

வவுனியா - ஹொரவப் பொத்தானை வீதியில் பயணித்த தனியார் பேருந்து தடம் புரண்டதில் மூவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவம் நேற்று மாலை 4.30 மணியளவில் இடம்பெற்றது.

வவுனியா, ஹொரவப் பொத்தானை வீதி ஊடாக வவுனியா நகர் நோக்கிச் சென்ற தனியார் பேருந்து மடுகந்தப் பகுதியில் பயணித்தபோது வேகக் கட்டுப்பாட்டைஇழந்துதடம்புரணடது.

இதேவேளை, திருத்த வேலைக்காக மடுக்கந்த பகுதிக்குச் சென்று வந்த பேருந்தே இவ்வாறு விபத்துக்குள்ளானது.

மேலும், இதில் பயணித்த மூவரும் படுகாயமடை ந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளனர். இந்த சம்பவம் தொடர்பான மேல திக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (மு)

## நீர்கொழும்பு பகுதியில் கேரள கஞ்சாவுடன் இருவர் கைது

நீர்கொழும்பு பகுதியில் வைத்து 100 கிலோகிராம் கேரள கஞ்சாவுடன் இருவரை பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்பு பிரிவினர் கைது செய்துள்ளனர்.

பாலாவி பகுதியில் இருந்து கொழும்பு நோக்கி எடுத்து வரப்பட்டுக் கொண்டிருந்தபோது குறித்த தொகை கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த கேரள கஞ்சா 8 மில்லியன் ரூபாய் பெறுமதியுடையவை என தெரிவிக்கப்படுகின்றது. (மு)

# சிரியாவில் 88 ஆயிரம் போராளிகளை கொன்று குவித்த ரஷ்யப் படைகள்

(மொஸ்கோ)

சிரியா ஜனாதிபதியின் ஆட்சிக்கு எதிராக போராடி வரும் சுமார் 88 ஆயிரம் போராளிகளை ரஷ்யப் படைகள் கொன்று குவித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது

சிரியா நாட்டில் ஜனாதிபதி பஷர் ஆசாத் ஆட்சிக்கு எதிரான கிளர்ச்சிப் படையினர் சில பகுதிகளை கைப்பற்றி, போட்டி அரசாங்கம் ஒன்றை நடத்தி வருகின்றனர். இவர்கள் மீது சிரிய இராணுவம் அதிரடியாக தாக்குதல் நடத்தி வருகிறது.

இராணுவத்துக்கு ஆதரவாக ரஷ்ய நாட்டின் விமானப் படைகளும் கிளர்ச்சியாளர்கள் முகாம்மீது வான் வழி தாக்குதல்களை நடத்து கிறது.

மேலும்,சிரிய நாட்டின் கிழக்கே ஐ.எஸ். பயங்கரவாதிகளின் பிடியில் இருந்த சில பகுதிகளை கைப்பற்ற அந்நாட்டின் அரசுப் படைகள் உச்சகட்ட தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றன.

அவர் களுக்கு துணையாக ரஷ்ய நாட்டின் போர் விமானங் களும் வான்வழி தாக்குதலை நடத்தின.

இந்நிலையில், சிரியாவில் கடந்த மூன்றாண்டுகளில் கிளர்ச்சியாளர்களின் பிடியில் இருந்து 1411 குடியிருப்பு பகுதிகள் உட்பட 95 சதவீதம் நிலப்பரப்பு மீட்கப்பட்டதாகவும், இதற்கான தாக்குதலில் 87 ஆயிரத்து ஐநூறுக்கும் அதிகமான கிளர்ச்சியாளர்களை ரஷ்யப் படையினர் கொன்றதாகவும் ரஷ்ய இராணுவ அமைச்சர் செர்கே ஷோய்கு தெரிவித்துள்ளார். (இ-7)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## தவமும் அறமும்



தவத்தையும் அறத்தையும் நீங்கள் மிகச் சுலபமாகப் பற்றிச் செல்லும் முறையினை இப்போது உங்களுக்குச் சொல்லுகின்றேன். தவம் எதற்காக என்றால் இறையுணர்வு பெற்று இறைவனோடு உறைவதற்காக. அறம் எதற்காக என்றால் இதுவரையில் செய்த கர்மங்களின் அழுத்தத்தினால் எண்ணமும் செயலும் தோன்றிக் கொண்டே இருக்கின்றனவே, அதிலிருந்து செய்து செய்து நல்லனவே செய்யக்கூடிய அளவுக்குத் தீயன செய்யாது இருக்கக் கூடிய ஒரு தூய்மைக்கு வரவேண்டும். மனத் தூய்மை தவத்தினால் வரும் வினைத்தூய்மை செயலினால் வரும் நல்ல செயல் அறத்தினால் வரும். அதனால் இது வேண்டும். இந்த இரண்டையும் ஒருங்கே பார்ப்பதற்கு என்ன வேண்டும்? இந்தக் காலத்திற்கு வேண்டியது அதுதான். அந்த அறம், தவம் இவற்றை வைத்துத் தான் இதுவரையில் இந்த உலகத்திலே ஏற்பட்ட மதங்களெல்லாம் அமைந்துள்ளன.எந்த மதத்தை எடுத்துக் கொண்டாலும் இறை-உணர்வைக காட்டி அற-உணர்வை காட்டிடுவதாகவே இருக்கும். இந்த இரண்டும் தான் எல்லா மதங்களிலும் உள்ளன. இறை உணர்வுக்கு இறைவழிபாடு. உலக மக்களோடு தொடர்பு கொண்டு இனிமையாக - அதாவது ஆங்கிலத்தில் "harmony" என்று சொல்கின்றோமோ அவ்வாறு - வாழ்வதற்கு என்ன வேண்டும்? ஒழுக்கம், கடமை, ஈகை என்ற அறம் வேண்டும். இந்த அறநெறி உலக வாழ்க்கைக்கு அவசியம்.

தவநெறி, உளப்பயிற்சி, அறிவு மேன்மை இறைவனை அடைய இவை வேண்டும். இதுவரையில் மதங்களிளெல்லாம் அந்த உணர்வை ஏற்படுத்துவதற்காக இதெல்லாம் சொன்னார்கள். இப்பொழுது அதை விட இன்னும் இந்த விஞ்ஞான யுகத்திலே மிகவும் சுருக்கமாகத் தெரிய வேண்டுமானால் என்ன - அந்தச் செயலிலேயே சிவனைக் காணலாம்

# சூடு பிடிக்கப் போகும் ஐ.பி.எல். வியாபாரத்தை ஆரம்பித்த மும்பை

ஐபிஎல் அணிகள் வரும் நவம்பர் 15க்குள் தற்போதுள்ள தங்கள் வீரர்கள் பட்டியலில் வேண்டாத வீரர்களை ஒப்பந்தத்தில் இருந்து விலக்கிவிட்டு மற்ற அணிகளிலிருந்து நீக்கப்பட்ட வீரர்களை வாங்கிக் கொள்ளலாம் என்ற வியாபாரத்தை தொடக்கியுள்ளது.

வியாபாரத்தில் முகேஷ் அம்பானியின் மும்பை இந்தியன்ஸ் அணி 2019 சீசனுக்கான முதல் வியாபாரத்தை தொடங்கி வைத்துள்ளது.

இந்த முதல் வியாபாரத்தில், ரோயல் சாலஞ்சர்ஸ் பெங்களூர் அணியின் தென்னாபிரிக்காவின் க்விண்டன் டி காக்கை, அவரது 2018 ஏல மதிப்பான 2.8 கோடிக்கே மும்பை இந்தியன்ஸ் அணி வாங்கியுள்ளது.

இந்நிலையில் இந்த மதிப்பை ஈடுகட்ட தங்கள் அணியில் இருந்த இலங்கையின் அகிலா தனஞ்ஜெயா ( 50 லட்சம்) மற்றும் வங்கதேசத்தின் முஸ்தாபிசூர் ரஹ்மான் ( 2.2 கோடி) ஆகியோரை ஒப்பந்தத்தில் இருந்து விடுவித்துள்ளது.

மேலும் இந்தியன்ஸ் அணியில் இஷான் கிஷன், ஆதித்ய தாரே ஆகிய இரண்டு விக்கெட் கீப்பராக இருக்கும் காரணத்தால் தென்னாபிரிக்காவை சேர்ந்த வீரர் க்விண்டன் டி காக் பட்ஸ்மனாக மட்டும் பயன்படுத்தும் வாய்ப்பும் உள்ளது.

மும்பை இந்தியன்ஸ் மட்டுமே ஒரு வீரரை வாங்கியுள்ளது. பெங்களூர் அணி டி காக்கை விடுவித்துள்ளது. வேறு எந்த வீரரையும் வாங்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# கோலிக்கும் எனக்கும் செட்ஆகிறது ஏ.பி.டி. வில்லியர்ஸ் புகழாரம்



இந்திய அணித் தலைவர் விராட் கோலி சிறந்த தலைவராகவும், துடுப்பாட்ட வீரராகவும் திகழ்வதாக தென்னாபிரிக்க அணியின் முன்னாள் வீரர் டிவில்லியர்ஸ் தெரிவித்துள்ளார்.

அண்மையில் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்ற தென்னாபிரிக்க அணியின் அதிரடி வீரரான டிவில்லியர்ஸ், வெளி நாடுகளில் நடைபெற்று வரும் இருபது-20 லீக் போட்டிகளில் கவனம் செலுத்தி வருகிறார்.

இந்நிலையில் பேட்டி ஒன்று அளித்த டிவில்லியர்ஸ், ஐ.பி.எல் தொடரில் பெங்களூர் அணியில் தன்னுடன் இணைந்து விளையாடிய விராட் கோ்லியை பாராட்டியுள்ளார்.

அவர் கூறுகையில் 'விராட் கோலியும், நானும் ஐ.பி. எல்-லில் ஒன்றாக விளையாடி இருக்கிறோம். இருவரும் ஒன்றாக துடுப்பாட்டம் செய்யும் போது ஒருவித கெமிஸ்ட்ரி ஒர்க் அவுட் ஆகிறது. போட்டியை அணுகும் விதத்தில் இரண்டு பேருக்குமே ஒரே மாதிரியான மனநிலை இருக்கிறது. இப்படி ஒரே மனநிலை கொண்ட இரண்டு பேர் புரிந்து கொண்டு விளையாடுவது மகிழ்ச்சியானது.

அவருக்கு கால்பந்து வீரர் ரொனால்டோவை பிடிக்கும். அவரை அப்படியே விட்டு விடுவோம். எனக்கு மெஸ்சியை பிடிக்கும். கட்டன் ஆன பிறகு, கடந்த சில ஆண்டுகளாக தவறுகளில் இருந்து பாடம் கற்றுக்கொண்டு வளர்ந்திருக்கிறார் விராட்.

அவர் சிறந்த கப்டன். அதுதான் பயமான பகுதி. துடுப்பாட்ட வீரராகவும் அவர் சிறப்பாக முன்னேறியிருக்கிறார். அதுவும் பயங்கரமானதுதான். அவருக்கு சிறப்பான இடம் இருக்கிறது. இங்கிலாந்து தொடரில் இந்திய அணி விளையாடியது பற்றி கேட்கிறார்கள்.

அந்த அணிக்கு கடுமையான போட்டியை இந்திய அணி அளித்தது என்பது உண்மை. அவுஸ்திரேலிய தொடரில் இந்திய அணி வெல்ல வாய்ப்பிருக்கிறது' என தெரிவித்துள்ளார். (க)

# மன்னார் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் மாபெரும் இருபதுக்கு இருபது போட்டி





மன்னார் மாவட்ட கிரிக்கெட் சங்கமானது வடக்கு, கிழக்கு மாகாணங்களின் கிரிக்கெட் வரலாற்றில் முதல் முறையாக இருபதுக்கு இருபது தொழில் முறையிலான மாபெரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியினை இம்மாதம் முழுவதும் நடத்தவுள்ளது. இதன் முதல் நாள் போட்டியானது கடந்த 20 ஆம் திகதி காலை 8 மணிக்கு நானாட்டான் பொது மைதானத்தில் வைபவரீதியாக அணிகளை அறிமுகப்படுத்தி வரவேற்புடன் ஆரம்பம் ஆனது. இந்நிகழ்வில் மன்னார் மாவட்ட கிரிக்கெட் சங்க நிர்வாகிகள், அணி உரிமையாளர்கள், அனுசரணையாளர்கள், பத்திரிகையாளர்கள் அனைவரும் பங்குபற்றியிருந்தார்கள்.

இந்நிகழ்வில் மொத்தமாக நான்கு அணிகளை கொண்டு நடைபெறவுள்ள இந்த சுற்றுத்தொடரில் ஒவ்வொரு அணியையும் வெவ்வேறு உரிமையாளர்கள் கொள்வனவு செய்துள்ளார்கள். ஒவ்வொரு அணியிலும் உரிமையாளர் உட்பட 16 வீரர்கள் போட்டியில் பங்குபற்றவுள்ளனர். இதில் அணி உரிமையாளரோடு சேர்த்து பாடசாலை வீரர் ஒருவர். கழக வீரர் ஒருவருமாக மொத்தமாக 03 வீரர்கள் அணிபட்டியலில் உள் வாங்கப்பட்ட நிலையில் ஏனைய 13 வீரர்களுக் கான அதாவது நான்கு அணிக்கும் சேர்த்து 52 வீர்ரகளுக்கான ஏலம் நடைபெற்றது. இந்த 52 வீரர்களுக்காக மன்னார் மாவட்டத்தில் மொத்தமாக 76 வீரர்கள் விண்ணப்பித்திருந்தமை குறிப்பிடத்தக் கது. (க)





இளவாலை வருத்தப் படாத வாலிபர் சங்கம் 5 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வடமாகாண ரீதியிலான 9 நபர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் மாபெரும் உதைபந்தாட்ட அரையிறுதி ஆட்டம் இன்று பிற்பகல் 4 மணிக்கு வல்வெட்டித்துறை ஆதிசக்தி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அரையிறுதிப் போட்டியில் றேஞ்சஸ் அணியை எதிர்த்து டயமன்ஸ் அணி மோதவுள்ளது. (க)

# ஓய்வு குறித்து கவலைப்படவில்லை கடவுளுக்கு நன்றி - பிரவீன்குமார்




இந்திய கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளரான பிரவீன்குமார் சர்வதேச கிரிக்கெட் உட்பட அனைத்து வடிவிலான கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். 32 வயதான பிரவீன்குமார் உத்தரபிரதேச மாநிலம் மீரட்டைச் சேர்ந்தவர். 2007 ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் போட்டியில் அறிமுகம் ஆனார். கடைசியாக அவர் 2012ஆம் ஆண்டு மார்ச் மாதம் தென்னாபிரிக்காவுக்கு எதிரான 20 ஓவர் போட்டியில் விளையாடி இருந்தார்.

அதன்பிறகு அவர் அணிக்கு தேர்வு செய்யப்படவில்லை. ஐ.பீ.எல். போட்டியில் பஞ்சாப், பெங்களூர், ஐதராபாத் அணிகளில் விளையாடினார். இந்த நிலையில் அவர் தனது ஓய்வு முடிவை அறிவித்துள்ளார். பிரவீன்குமார் 6 டெஸ்டில் விளையாடி 27 விக்கெட்டும், 68 ஒருநாள் போட்டியில் 77 விக்கெட்டும் கைப்பற்றி உள்ளார்.

"ஓய்வு பெறுவது பற்றி நான் வருத்தப்படவில்லை. உத்தரபிரதேச மாநிலத்தில் இருந்து திறமை வாய்ந்த பந்து வீச்சாளர்கள் காத்து கொண்டு இருக்கிறார்கள். அவர்களது வாழ்க்கைக்கு பாதிப்பு ஏற்படுத்த விரும்பவில்லை.

எனது விளையாட்டு காலம் முடிந்து விட்டது. அதை நான் ஏற்றுக் கொண்டுள்ளேன். கடவுள் எனக்கு கொடுத்த இந்த வாய்ப்புக்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். எதிர்காலத்தில் பந்து வீச்சு பயிற்சியாளராக பணியாற்ற விரும்புகிறேன் என்றார் அவர். (க)

# டென்மார்க் பட்மிண்டன் அரையிறுதியில் சாய்னா



டென்மார்க் நாட்டில் பட்மிண்டன் போட்டி நடந்து வருகிறது. இதில் பெண்களுக்கு ஒற்றையர் பிரிவில் நடந்த கால் இறுதி ஆட்டம் ஒன்றில் இந்தியாவின் சாய்னா நேவால்- முன்னாள் உலக சம்பியனான நஜோமி ஒகுஹாரா மோதினர்.

இதில் முதல் செட்டை 17-21 என்ற கணக்கில் இருந்த சாய்னா அடுத்த இரண்டு செட்டுகளை தன் வசப்படுத்தினார்.

முடிவில் சாய்னா நேவால் 17-21, 21-16, 21-12 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று அரை இறுதிக்கு முன்னேறினார்.

அரை இறுதியில் சாய்னா, இந்தோனேஷியாவின் மாரீஸ்காவுடன் பலப்பரீட்சை நடத்துகிறார்.

இதேபோல் ஆண்கள் ஒற்றையர் பிரிவு கால் இறுதியில் இந்தியாவின் ஸ்ரீகாந்த் வெற்றி பெற்று கால் இறுதிக்கு தகுதி பெற்றார்.

அவர் கால் இறுதியில் சக நாட்டு வீரர் சமீர் வர்மாவை 22-20, 19-21, 23-21 என்ற கணக்கில் வீழ்த்தினார். அரை இறுதியில் ஸ்ரீகாந்த், நம்பர் வன் வீரர் கென்டூ மோமொடாவுடன் மோதுகிறார். (க)



# மெண்டிசுக்கு ஓய்வு தேவை ஜெயவர்த்தன டுவிட்

இலங்கை அணி வீரர் குசல் மெண்டீஸ்"க்கு சிறிது ஓய்வு தேவை என தான் நினைப்பதாக இலங்கை அணியின் முன்னாள் தலைவர் மஹேல ஜெயவர்த்தன கூறியுள்ளார்.

இலங்கை கிரிக்கெட்டின் முன்னாள் வீரர் டுவிட்டரில் வெளியிட்டுள்ள பதிவில், சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து குசல் மெண்டீஸ்"க்கு சிறிது ஓய்வு தேவை என கருதுகிறேன். திறமையான வீரரான மெண்டீஸ் தற்போது கடினமான காலகட்டத்தில் உள்ளார்.

இது போன்று யாருக்கு வேண்டுமானாலும் ஏற்படலாம் என பதிவிட்டுள்ளார். (க)

## வடக்கு மாகாண சபை...

மாற்றினார்கள். குறித்த திட்டம் இலங்கையில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் அமைக்கப்பட்டுள்ளது.

நான் வடக்கு மாகாணசபையில் இருந்த போது, இது வடக்கு மாகாணசபையால் கொண்டுவரப்பட்ட திட்டம் என நினைத்தேன். ஆனால் மத்திய அரசில் அமைச்சு பதவி எடுத்த பின்னர் தான் குறித்த திட்டம் மத்திய அரசின் திட்டம் என அறிந்துகொண்டேன்.

எதிர்வரும் 25ஆம் திகதிக்கு பின்னர் அம்மாச்சி உணவகத்தின் பெயரை மாற்றுவோம். கெலபோஜன என ஏனைய மாவட்டங்களில் இந்த உணவகம் அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் தமிழ் பிரதேசங்களில் தமிழ பெயரில் தான் அமைக்க வேண்டும். அது பாரம்பரிய உணவகம் என்ற பெயரில் அமைக்க முடியும்.

அம்மாச்சி என்ற பெயரை மாற்ற வேண்டிய தேவை இல்லை, ஆனால் இது மத்திய அரசின் திட்டம். நாடு முழுவதும் உள்ள திட்டம் ஒரே பெயரில் தான் இருக்க வேண்டும். மொழியில் மட்டும் மாற்றம் செய்யலாம். வடக்கு மாகாணசபை காலம் முடிவடைந்த பின்னர் இது தொடர்பில் கொள்கைரீதியான முடிவு எடுத்து குறித்த உணவகத்தின் பெயர் மாற்றப்படும். அத்துடன் வடமாகாணத்தில் மேலும் வேறு இடங்களில் இந்த உணவகங்களை அமைக்கவுள்ளோம் என மேலும் தெரிவித்தார். (மு-9)

## துன்னாலையில்...

ஜீப் வண்டி மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தில் பொலிஸ் ஜீப் வண்டி ஒன்று சேதமடைந்ததாக பிரதேச தகவல்கள் கூறுகின்றன.

இது தொடர்பில் நெல்லியடி பொலிஸாரினை தொடர்பு கொண்டு கேட்டபோது, துன்னாலை ஆட்டிப்பட்டி தெரு, கொலணி பகுதியில் உள்ள இருபகுதியினருக்கு இடையே ஏற்பட்டிருந்த முரண்பாடே இவ் மோதலுக்கான காரணம் எனவும் இச் சம்பவம் தொடர்பாக நெல்லியடி பொலிஸாருக்கு எவ்வித பாதிப்பும் இல்லை என நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர். (மு-60)

## 5 பேர் கொண்ட...

கோண்டாவில் மேற்கு தாவடி உப்புமடம் சந்திப்பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் மற்றும் அங்கு தரித்துநின்ற முச்சக்கர வண்டி என்பவற்றின்மீது நேற்று இரவு இனம்தெரியாத நபர்களால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று மாலை7.15மணியள வில்இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த ஐந்து பேரே இத்தாக்குதலினை மேற்கொண்டதாக சம்பவத்தினை நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த தாக்குதலில் கடைக் கண்ணாடிகள் உடைக்கப்பட்டுள்ளதுடன் பொருட்கள் சேதமாக்கப்பட்டுள்ளன. கடை அருகே தரித்து நின்ற முச்சக்கர வண்டி மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது

இதனால் அப்பகுதியில் பதற்றமான சூழ்நிலை காணப்பட்டதுடன் சம்பவ இடத்துக்கு கோப்பாய் மற்றும் சுன்னாம் பொலிஸார் வந்து விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர். (மு-9,101)

## அனந்தி தலைமையில்...

வட மாகாண சபை அமைச்சர் அனந்தி சசிதரன் ஈழத்தமிழர் சுயாட்சி கழகம் எனும் பெயரில் கட்சியொன்றை ஆரம்பித்துள்ளார்.

கழகத்தின் அங்குரார்ப்பண கூட்டம் நேற்றுக் காலை யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

இதன்போது கட்சியின் பிரகடன உரை அவரால் நிகழ்த்தப்பட்டது.

தமிழ்த் தேசிய உணர்வு சிதைந்துள்ளதால், உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் உள்ள தமிழ் தேசிய உணர்வாளர்களை ஒன்றிணைத்து, தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அடைவதற்கான பாதையில் பயணிக்க ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகம் உருவாக்கப்பட்டுள்ளது. தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் இருந்து வெளியேற்றப்படுபவர்கள், வெளியேறுபவர்கள், தமக்கான ஒரு கட்டமைப்பினை உருவாக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றனர்.

இவ்வாறு ஈழத் தமிழர் சுயாட்சி கழக செயலாளர் நாயகம் திருமதி அனந்தி சசிதரன் தெரிவித்தார்.

புதிதாக உதயமாகியுள்ள ஈழத் தமிழர் சுயாட்சி கழகத்தின் ஆரம்ப நிகழ்வும் கொள்கைப் பிரகடன வெளியீடும் நேற்று யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியில் உள்ள யு.எஸ் விருந்தினர் விடுதியில் நடைபெற்றது.

அதில் கொள்கைப் பிரகடன உரையின் போதே அனந்தி சசிதரன் மேற்கண்டவாறு கூறினார். (மு)

## கட்சி பேதமின்றி...

களில் அடைபட்டுக் கிடக்கும் தமிழ் அரசியல்கைதிகள் தங்கள் விடுதலைக்காக உணவொறுப்புப் போராட்டம் நடத்துகின்ற பரிதாபம், காணாமல்போனவர்களின் உறவுகளின் கண்ணீர் இன்னமும் நம் மண்ணை நனைக்கும் துன்பியல்.

இதற்கு மேலாக, போர் தந்த இழப்புகளால் நொந்துபோயுள்ள எங்கள் உறவுகள் இன்னமும் அழுகண்ணீரும் கம்பலையுமாக இருள் படர்ந்த வாழ்வில் விடியலைத் தேடுகின்றனர். எனினும் இவையாவற்றுக்கும் இன்னமும் விடிவும் இல்லை. முடிவும் இல்லை. எங்கள் இனத்துக்கு ஏற்பட்ட இழப்புகளை பலமாக்கி சர்வதேசத்தின் துணை கொண்டு எங்களுக்கான உரிமையை பெறுவதிலும் எங்கள் அரசியல் சாணக்கியம் போதவில்லை.

தவறிழைப்பதும் அதனைத் தவறு என்று புரியாமலே அவற்றை நியாயப்படுத்துவதுமான அவலம் நிறைந்த எங்கள் அரசியல் சூழமைவு இன்னமும் நீண்டு செல்லுமாயின் எங்களைக் கொண்டே எங்களை வேரறுத்து வீழ்த்தி விடுகின்ற அவர்களின் இராஜதந்திர சூழ்ச்சி சர்வ சாதாரணமாக நிறைவேறி விடும்.

ஆகையால்,

**இன்றே எழுகை பெறுவோம்!**
**எம் தமிழே! எழுக தமிழே!**

என்று கோஷமிட்டு எம் இனத்தின் அவலத்தை உரக்கக் கூறுவோம். இழந்தாலும் தமிழன் தன் உரிமையை, சுதந்திரத்தை, கௌரவமான வாழ்வை இழக்கத் தயாரில்லை என்பதை வெளிப்படுத்தி அதற்குள் இருக்கக்கூடிய நியாயத்தை உலகாளும் அரசுகளுக்கு உணர வைப்போம். எனவே

- **எம் இனத்துக்கான எதிர்கால அரசியலை வழிசமைக்க**
- **மக்கள் இயக்கமாகிய தமிழ் மக்கள் பேரவையின் வகிபங்கை உறுதிப்படுத்த**
- **தமிழ் மக்களின் அபிலாசைகளை வென்றெடுக்க**

தமிழ் மக்களின் நம்பிக்கைக்குரிய வடக்கு மாகாணத்தின் மாண்புமிகு முதலமைச்சர் நீதியரசர் **சி.வி.விக்னேஸ்வரன** அவர்களின் எதிர்கால அரசியலுக்கு வலுக்கொடுத்து எங்களுக்கான நேர்மை மிகுந்த அரசியல் வழித்தடத்தை நிர்ணயித்துக் கொள்ள அனைத்துத் தமிழ் மக்களும் அரசியல் பேதம் கடந்து தமிழ் இனத்தின் வாழ்வு என்ற ஒரே நினைப்போடு அணிதிரள்வோம் வாரீர்! உங்கள் வருகை தமிழினத்தின் உரிமையை வலியுறுத்துவதாகட்டும்.

**காலம்:24.10.2018 புதன்கிழமை**
**நேரம்:முற்பகல் 9.30 மணி**
**இடம்:நடராஜா பரமேஸ்வரி மண்டபம்**
(நல்லூர் முருகன் ஆலய வடக்கு வீதி

அனைவரையும் அணிதிரள அன்புரிமையுடன் அழைக்கின்றோம் என தமிழ் மக்கள் பேரவையின் துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மு)

# உயர்நீதிமன்ற நீதியரசராக தீபலி விஜயசுந்தர பரிந்துரை

(கொழும்பு)

உயர் நீதிமன்றில் ஏற்பட்டுள்ள நீதியரசர் வெற்றிடத்துக்கு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் தீபலி விஜயசுந்தரவை நியமிக்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பரிந்துரைத்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

பிரதம நீதியரசர் பிரியசாத் டெப் ஓய்வு பெற்றதையடுத்து உயர் நீதிமன்ற நீதியரசர் நளின் பண்டார, பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்டார். அதனையடுத்து உயர் நீதிமன்ற நீதியரசர் குழாமில் வெற்றிடம் ஏற்பட்டது.

இந்த வெற்றிடத்துக்கே மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் தீபலி விஜயசுந்தரவை நியமிக்க அரசியலமைப்புச் சபைக்கு ஜனாதிபதி பரிந்துரை வழங்கியுள்ளார்.

இதேவேளை, நீதியரசர் தீபலி விஜயசுந்தரவுக்கு உயர் நீதிமன்ற நீதியரசராக பதவியுயர்வு வழங்குவதால் மேன்முறையீட்டு நீதிமன்றில் ஏற்படும் நீதியரசர் வெற்றிடத்துக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி குசல சரோஜினி வீரவர்த்தனவை நியமிப்பதற்கும் ஜனாதிபதி பரிந்துரைத்துள்ளார்.

இவர்கள் இருவரது நியமனம் தொடர்பில் அரசியலமைப்புச் சபை கூடி ஒப்புதல் வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (மு)

# அரசாங்கம் மீது ஜேவிபி குற்றச்சாட்டு

மக்கள் எதிர்நோக்கியுள்ள நெருக்கடியான நிலையையும் பொருளாதார வீழ்ச்சியையும், கடந்த அரசாங்கத்தை போன்றே, தற்போதைய அரசாங்கமும் தமது அதிகார த்தை நிலை நிறுத்திக்கொள்வதற்கு பயன்படுத்த முயற்சிப்பதாக ஜேவிபி குற்றம் சுமத்தியுள்ளது.

கொழும்பில் உள்ள ஜேவிபியின் கட்சி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் ஜேவிபியின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா இந்த குற்றச்சாட்டை முன்வைத்தார்.

ஆட்சியை கைப்பற்ற முயற்சிப்பவர்களான மகிந்த தரப்பின் இலங்கை தொடர்பான புரிந்துணர்வு எத்தகையது என்பது கடந்த காலத்தில் பந்துல குணவர்தன போன்றவர்கள் வெளியிட்ட கருத்துக்களில் இருந்து புரிந்து கொள்ள முடியும்.2500 ரூபாவினால் வாழ்க்கை செலவு களை நிறைவேற்றிக் கொள்ள முடியும் என பந்துல குணவர்தன கடந்த காலத்தில் குறி ப்பிட்டிருந்தார்.

மகிந்த அணியில் இணைந்து கொள்வதா? ஸ்ரீ லங்கா சுத்திர கட்சியில் இருந்து தம்மை நிலைநிறுத்திக் கொள்வதா? என்ற சந்தேகத்தில் ஒரு தரப்பினர் செயல்படுகின்ற னர்.

நாடு எதிர்நோக்கியுள்ள நெருக்கடி நிலைகளுக்கு மத்தியிலும் ஆட்சி அதிகாரத்தை நிலைநிறுத்திக் கொள்வது எப்படி என்ற சிந்தனையில் ஐக்கிய தேசிய கட்சி செயல்படுகிறது.

ஒரு காலத்தில் ஐக்கிய தேசிய கட்சியினால் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த முடியும் என்ற மக்களின் நம்பிக்கை தற்போது பொய்யாகியுள்ளது எனவும் டில்வின் சில்வா தெரிவித்துள்ளார். (மு)

## முள்ளிக்குளம் வீதியை...

குறித்த சம்பவம் தொடர்பாக முள்ளிக்குளம் பங்குத்தந்தை அருட்தந்தை லோரான்ஸ் லியோ மேலும் தெரிவிக்கையில்,

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை முள்ளிக்குளம் கிராம மக்களுக்கும் கடற்படையினருக்கும் இடையில் தர்க்க நிலை ஏற்பட்டுள்ளது.

முள்ளிக்குளம் பகுதியில் கடந்த மூன்று மாதங்களுக்கு முன் விடுவிக்கப்பட்ட சுமார் 77 ஏக்கர் காணியில் மக்கள் நடமாட்டத்தில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

இந்த நிலையில் குறித்த காணி பகுதிக்குச் செல்லும் பிரதான வீதிகளை நேற்றுமுன் தினம் சனிக்கிழமை தொடக்கம் கடற்படையினர் இடை மறித்து முட்கம்பிகளினால் வேலிகள் அடைத்து மக்களை உள்ளே செல்ல அனுமதி மறுத்து வந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முதல் மக்கள் குறித்த வீதிகளினூடாக பயணம் செய்ய முடியாத நிலையை கடற்படையினர் ஏற்படுத்தி இருந்தனர்.

இந்த நிலையில் முள்ளிக்குளம் ஆலயத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை திருப்பலி நிறைவடைந்த நிலையில் மக்கள் மீண்டும் திரும்பிச் செல்லுகின்ற போது கடற்படை முகாமில் இருந்த கடற்படையினர் குறித்த வீதிகளினூடாக சென்ற மக்களை இடைமறித்து விட்டார்கள். இதனால் கடற்படையினருக்கும், முள்ளிக்குளம் மக்களுக்கும் இடையில் தர்க்க நிலை ஏற்பட்டது.

இந்த நிலையில் சம்பவம் இடம் பெற்றுக் கொண்டிருந்த போது எதேச்சியாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா மற்றும் நானாட்டான் பிரதேச சபையின் தலைவர், உறுப்பினர்கள் முள்ளிக்குளம் பகுதிக்கு வருகை தந்திருந்தனர்.

இதனால் சிறிது நேரம் மக்களுக்கும் கடற்படையினருக்கும் இடையில் தர்க்க நிலை ஏற்பட்டது.

சிறிது காலமாக முள்ளிக்குளம் மக்களுக்கும் கடற்படையினருக்கும் இடையில் தர்க்க நிலை ஏற்பட்டு வருகின்றது.தொடர்ச்சியாக கடற்படையினர் பாதைகளை இடை மறித்து மக்களுடன் தர்க்கத்தில் ஈடுபட்டு வருகிறனர். முள்ளிக்குளம் மக்களின் நடமாட்டத்தை முழுமையாக கட்டுப்படுத்த கடற்படை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். மக்கள் தொடர்ச்சியாக பல்வேறு அசௌகரியங்களுக்கு தொடர்ந்தும் முகம் கொடுத்து வருகின்றனர்.

உயர் அதிகாரியிடம் இருந்து வந்த உத்தரவிற்கு அமைவாகவே குறித்த பாதைகளை மூடியதாக தெரிவித்த கடற்படையினர் மக்கள் மற்றும் மக்கள் பிரதி நிதிகளின் எதிர்ப்பைத் தொடர்ந்து மூடி வைத்திருந்த வீதிகளை மீண்டும் மக்களின் பாவனைக்காக திறந்து விட்டுள்ளனர்.

எனவே மக்கள் பிரதிநிதிகள் உடனடியாக குறித்த விடயத்தில் தலையிட்டு முள்ளிக்குளம் மக்களின் சுதந்திர வாழ்வுக்கு வழியமைத்துக் கொடுக்க வேண்டும் என முள்ளிக்குளம் பங்குத் தந்தை அருட்தந்தை லோரான்ஸ் லியோ மேலும் தெரிவித்தார்.(மு-285)

## இந்திய செயற்திட்ட...

புதுடில்லியில் இரு பிரதமர்களுக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெற்றது. இராஜதந்திர விடயங்கள் தொடர்பில் தான் கூடுதலான காலத்தை இலங்கைக்காகவே செலவிட்டிருப்பதாக இந்தியப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

தான் தொடர்பிலோ இந்திய அரசாங்கம் தொடர்பிலோ ஏதாவது சந்தேகம், பிரச்சினை இருப்பின் தயக்கமின்றி கலந்துரையாடுமாறு அவர் கேட்டுள்ளார்.எனினும் இலங்கை மக்கள் மத்தியில் அப்படியான ஒரு சந்தேகமோ பிரச்சினையோ இல்லை என வலியுறுத்திய இலங்கை பிரதமர், அவ்வாறான தவறான புரிதலுக்கு ஏதாவது ஒரு காரணம் அடிப்படையாக இருக்குமானால், அது குறித்து கவலையடைவதாக குறிப்பிட்டுள்ளார்

அதேபோல் வீடமைப்பு உட்கட்டமைப்பு வசதி என்பவற்றுக்கு இந்தியா வழங்கியுள்ள ஆதரவையும் அவர் பாராட்டியுள்ளார். கல்வித்துறையின் புதிய போக்குகள் தொடர்பான அறிவை இலங்கை மாணவர்களுக்கு வழங்குவதற்காக ஆதரவு வழங்குமாறு அவர் இந்தியப் பிரதமரைக் கேட்டுள்ளார்.

தோட்டப்புற மக்களுக்காக 10 ஆயிரம் வீடுகளை அமைக்கத் தேவையான நிதியுதவியை வழங்குவதாக இந்தியப் பிரதமர் அங்கு சுட்டிக்காட்டினார். இலங்கை ஒருபோதும் இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் தமது பூமியைப் பயன்படுத்த எவருக்கும் இடமளிக்காது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார். (மு)

தன நிதானய
திகதி 2018-10-21
சீட்டிழுப்பு இலக்கம் 65
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள் 34 38 55 62

கொவிசெத
திகதி 2018.10.21
சீட்டிழுப்பு இலக்கம் 1919
ஆங்கில எழுத்து D
வெல்லப்பட்ட இலக்கங்கள் 24 28 41 70

நீரோகா
திகதி 2018/10/21
சீட்டிழுப்பு இலக்கம் 462
லக்னம் ரிஷபம்
வெற்றி இலக்கங்கள் 10 28 32 45
போனஸ் இலக்கம் 22

மஹஜன சம்பத
திகதி 2018/10/21
சீட்டிழுப்பு இலக்கம் 3772
ஆங்கில எழுத்து Z
வெல்லப்பட்ட இலக்கங்கள் 5 5 0 8 4 4

CNR உள்நாடு, வெளிநாடுகளுக்கான தபால், பொதிகள் விநியோக சேவை

- அதிவேக மற்றும் சிக்கன பொதிகள் சேவை
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- வீடு, அலுவலகங்களில் இருந்தவாறு அனுப்பும் வசதி
- அனுப்பும் பொதிகளுக்கான காப்புறுதி உத்தரவாதம்
- கடல் ஆகாய மார்க்க பெரிய சரக்குப் பரிமாற்ற சேவை

CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062, 077 6655413
(C-4098)

வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு 1 Kg க்கான கட்டணம்
UK - 550/=, France - 700/= Germany - 650/= Swiss - 750/= Canada - 950/=
ஏனைய நாடுகளுக்கும் விசேட விலைக் கழிவு. பொதிகள் அனுப்பி வைக்கப்படும்
சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் நிபுணத்துவம் வாய்ந்தவர்களூடாக செய்து கொடுக்கப்படும். 077 755 4528
திருமுருகன் கொம் நெற் (பிறைவெட்) லிமிடெட்
321, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.(முட்டாஸ் கடை சந்தி அருகாமையில்)
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. DHL aramex
04, மத்திய மகா வித்தியாலய வீதி, நெல்லியடி. கிளிநொச்சி, மன்னார். (6121)
3 - 5 Working Days

அமெரிக்க லொத்தர் விசா

2020-ம் ஆண்டுக்கான அமெரிக்க லொத்தர் விசா விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. நிரந்தர குடியேற்றத்திற்கான ஓர் அரிய சந்தர்ப்பம். (18 வயதுக்கு மேற்பட்டோர் தனியாக விண்ணப்பிக்கலாம்.)
2002-ம் ஆண்டு தொடக்கம் மேற்கொள்ளப்பட்டு வரும் இச்சேவையினூடாக 100க்கும் அதிகமானோர் அமெரிக்கா சென்றுள்ளனர். இச்சந்தர்ப்பத்தை நழுவ விடாது உங்கள் அதிர்ஷ்டத்தை தட்டிச் செல்லுங்கள்
தொடர்புகளுக்கு: 077 755 4528/ 070 375 0001-7
திருமுருகன் கொம் நெற் பிறைவெட் லிமிடெட்
321, கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம். (6121)
திருநெல்வேலி, நெல்லியடி, முல்லைத்தீவு

## உரும்...

மீட்கப்பட்டுள்ளது. உயிரிழந்தவர் 63 வயதுடையஇராசையா தயாபரசிங்கம் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உரும்பிராய்வேம்பன் வீதியில்தனிமையில் வசித்து வந்த குறித்த நபர் அப்பகுதியில் உள்ள தோட்டங்களுக்கு பொழுதை கழிப்பதற்கு சென்று வரும் பழக்கத்தை கொண்டிருந்துள்ளார். நேற்று முன்தினம் மாலை வேளையும் அவ்விடத்திற்கு சென்றிருந்தார். அதன் பின்னர்நேற்றுகாலை அங்குள்ள தோட்டக் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை தோட்டத்துக் சென்றவர்களே கிணற்றினுள் சடலம் ஒன்று இருப்பதை அவதானித்து பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர். சம்பவ இடத்துக்கு வந்த கோப்பாய் பொலிஸார் விசாரணை மேற்கொண்டதுடன் பிரேத பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.(மு-9-87)

FLC FRENCH LANGUAGE CENTRE
பிரெஞ்சு
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.
V. ஜெகன் (Trained in France- 2007)
40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 03.11.18 சனி 8 மணி.
181, பிரதான வீதி, நெல்லியடி. 0762 669 614 ஆரம்பம் 05.11.18 மாலை 3.30 மணி
திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1
Spoken English மற்றும் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
(சி-4108)

காணி விற்பனைக்கு
யாழ்.ஸ்ரான்லி கல்லூரி வீதியில் ஒரு பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0766757518

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org
021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம் (6088)

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK- 550 /-Kg
கனடா-900 /-Kg
ஜேர்மனி- 700 /-Kg
நெதர்லாந்து-700 /-Kg
DELIVERY IN 3-5 DAYS
0768226240
மானிப்பாய் • யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை
V2 TRAVELS (C-4108)

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில்
திருமண பட்டுப் புடைவைகளின் பூங்காவனம்
இந்தியன் செலக்ஷனின்
புத்தம் புதிய ஆடைத் தெரிவுகள்



தீபாவளி விசேட தள்ளுபடி
15000/- பெறுமதியான பட்டுச்சாறி ஒன்றிற்கு 5000/- பெறுமதியான சாறி ஒன்று இலவசம்
15% - 50% வரை விலைக்கழிவு

| | | |
|---|---|---|
| கொட்டன் டொப் (Top) | ~~1500/-~~ | 1000/- |
| டெனிம் டொப் (Top) | ~~1500/-~~ | 1000/- |
| 2 in 1 சல்வார் துணி | ~~1500/-~~ | 1000/- |
| 3 in 1 சல்வார் துணி | ~~2000/-~~ | 1500/- |
| கொட்டன் சல்வார் | ~~4000/-~~ | 2000/- |
| நெற் சல்வார் பெரியது | ~~5000/-~~ | 2000/- |
| நெற் சல்வார் சிறியது | ~~3500/-~~ | 1000/- |

1000/- ரூபாவிற்கு 3 லெகின்ஸ்
கொட்டன் Top, டெனிம் Top, மொடன்Top, சல்வார்கள், சல்வார் துணிகள், பட்டுச்சாறிகள், கொட்டன் சாறிகள், சில்க் சாறிகள், சேட், T-சேட், ரவுசர் வகைகள், பார்ட்டி புரோக்ஸ் என இன்னும் ஏராளமான ஆடைத் தெரிவுகள்



15000/- இற்கு மேல் கொள்வனவு செய்யும் ஒவ்வொருவருக்கும் அழகிய சுவர் கடிகாரம் இலவசம்
ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்
இடம் : யாழ்.வீரசிங்கம் மண்டபம்
காலம் : இன்று தொடக்கம் 06.11.2018 வரை
(C-4212)

அமெரிக்க அதிஸ்ட விசா- இதுவே இறுதி வருடம் கிடைத்த வாய்ப்பை எப்படியாவது பயன்படுத்துங்கள்
நீங்களும் அதிஸ்டசாலியாகலாம்!
18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்.
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
உங்களுக்கு விசா கிடைத்தால் உங்களுடன் சேர்த்து உங்கள் (காதலன்/காதலி) எதிர்கால வாழ்கைத்துணையையும் அழைத்துச்செல்லலாம்
இளைஞர்களே,யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா? இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?
படித்தவர்கள், பட்டதாரிகள், அரச வேலை செய்பவர்கள், தனியார் துறையில்வேலை செய்பவர்கள், வேலையில்லா பட்டதாரிகள், A/L பரீட்சை எடுக்கும் மாணவர்கள், வெளிநாட்டில் படிக்க விரும்பும் மாணவர்கள் அனைவருக்கும்
55000 இலவச விசாக்கள்
0768226243
கடந்த காலங்களில் எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்கா சென்ற 80 வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்.
அலுவலர்களின் நன்மை கருதி சனி மற்றும் ஞாயிறு உட்பட மாலை 7 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்
யாழ்ப்பாணத்தில் இருந்த வேலையற்ற யுவதிகளில் நானும் ஒருத்தி V2TRAVELS இல் பதிந்து விசா கிடைத்ததும் எனக்கு பதிவுத்திருமணம் நடத்து கணவரையும் நிரந்தர விசாவில் அமெரிக்காவிற்கு கூட்டிச்சென்றேன். மிகத்துல்லியமாக வழிநடத்திய V2TRAVELS க்கு நெஞ்சார்ந்த நன்றிகள்.
2017 ல் எமக்கூடாக 77 பேர் விசா வாய்ப்பை பெற்றுள்ளார்கள்
குடும்பத்தினருக்கு இரண்டு விசா சந்தர்ப்பங்கள்
திருச்செல்வம்-மரியரோகினி அமெரிக்கா விசா வெற்றியாளர்
இறுதி சந்தர்ப்பம் அடுத்த வருடம் இல்லை
V2 TRAVELS (C-4077)

| | | | | |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் 0768226243 | கிளிநொச்சி 0768226240 | நெல்லியடி 0776699892 | சாவகச்சேரி 0768226242 | திருகோணமலை 0768226237 |
| மானிப்பாய் 0768226238 | சுன்னாகம் 0764550670 | யாழ்ப்பாணம் 0768226241 | பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960 |

## 1-ம் ஆண்டு நினைவு அஞ்சலி



**அமரர் இரத்தினம் மார்க்கண்டு**
(தவில் வித்துவான், கலாபூஷணம்)
**திதி - 22.10.2018**

நல்லதொரு குடும்பத் தலைவனாய்
நானிலம் போற்ற வாழ்ந்தீர்!
பார் புகழ குடும்பத்தில் அனைவரையும் வாழ
வைத்த அன்புத் தெய்வமே! என்றும் உங்கள்
நினைவுகளுடன் நாம் வாழ்கின்றோம்

32, யமுனா வீதி, நல்லூர். - குடும்பத்தினர்
(6118)

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
- ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை.
- கடலுணவு, இறைச்சி, எண்ணை வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள்,
- பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.
20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்
அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3536
நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576
சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576
(சி-4195)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.10.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.